## பேராசிரியர் சு. வித்தியானந்தன் நினைவுப் பேருரை

## 16.10.2000

# பண்டைய ஈழத்தில் தமிழர் — ஒரு பன்முகப் பார்வை

**சி.க.சிற்றம்பலம்,**

(B.A. (Ceylon), M.A., Ph.D. (Poona)

பேராசிரியர், தலைவர்,

வரலாற்றுத்துறை,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

வெளியீடு:

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணம்.

# பேராசிரியர் க.வித்தியானந்தன் நினைவுப் பேருரை

## 16.10.2000

# பண்டைய ஈழத்தில் தமிழர் — ஒரு பன்முகப்பார்வை


**சி. க. சிற்றம்பலம்,**
(B.A. (Ceylon), M.A. , Ph.D. (Poona)
**பேராசிரியர், தலைவர்,**
**வரலாற்றுத்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



**வெளியீடு:**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**யாழ்ப்பாணம்.**
**2000**

🕮 முதற்பதிப்பு: மார்கழி, 2000

🕮 அச்சுப்பதிப்பும், வெளியீடும்: பதிவாளர் அலுவலகம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

🕮 பக்கங்கள்: 73

🕮 ஆக்கியோன்: பேராசிரியர். சி.க. சிற்றம்பலம்.

🕮 வெளியீட்டுரிமை: ஆக்கியோன்.

🕮 First Edition: December, 2000

🕮 Printed & Published: Registrar's Office,
University of Jaffna

🕮 Pages: 73

🕮 Author: Prof. S.K.Sitrampalam

🕮 ©: To Author.

# முன்னுரை

பேராசிரியர்.சு.வித்தியானந்தன் அவர்கள் 1946இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையின் துணைவிரிவுரையாளராகச் சேர்ந்து பதவி உயர்வுகள் பல பெற்று 1970 ஆம் ஆண்டிலே தமிழ்ப் பேராசிரியரானார். 1977இல் யாழ்ப்பாண வளாகத்தின் தலைவராக நியமனம் பெற்ற இவர், 1979ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக மூன்று முறை நியமனம் பெற்றவர். பேராசிரியரின் குடும்பத்தினர் பேராதனைப் பல்கலைக கழகத்தில் வாழ்ந்த போது எவரையும் அழைத்து விருந்துபசாரம் அளிப்பதில் பெருமகிழ்வு எய்தியவர்கள். குறிப்பாகத் தமிழ்ப்பிள்ளைகள் அங்கு வரும்போது அவர்களுக்கு வேண்டியவாறு பலவகை உதவி களையும் அளிக்கப் பின்நிற்காதவர்கள்.

ஈழத்துத் தமிழர் மத்தியில் மிகமிகச் செல்வாக்குப் பெற்ற பேராசிரியராக விளங்கிய பெருமையும் இவருக்குண்டு. மிகநெருக்கடி யான காலகட்டத்தில்தான் இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துத் துணைவேந்தர் பொறுப்பை ஏற்றார். அக்காலம் போக்குவரத்து வசதிகள் சீர்குலைந்த காலம். பஸ்ஸிலே தமது கொழும்புப் பயணங்களையும் சளைக்காது மேற்கொண்டவர். தனிப்பட்ட வாழ்க்கையில் தமது மனைவியை இழந்து தம் இளம் பிள்ளைகளைப் பராமரிக்கும் பொறுப்பும் இவருக்கு இருந்தது. இத்தனைக்கும் மத்தியில் பல்கலைக்கழகக் கடமைகளை ஒழுங்காக ஆற்றியதோடு, பொது வைபவங்களிலும் தமது பங்களிப்பினைத் தயங்காது வழங்கியவர்.

கல்வித்துறையிலும் இவர் பிரதான பதவிகள் பலவற்றையும் வகித்துள்ளார். ஆய்வரங்குகள், கருத்தரங்குகள், ஆராய்ச்சி மகாநாடுகள் ஆகியவற்றில் பங்கு பற்றியும் அவற்றுக்குத் தலைமை தாங்கியும், தமிழியல் ஆய்வுக்கு ஊக்கமளித்தும் இவர் ஆற்றிய பணிகள் பல.

பேராசிரியர் அவர்கள் நாடக நூல்களையும், நாட்டுப் பாடல் நூல்களையும் பதிப்பித்து வெளியிட்டிருந்ததோடு, நாட்டுக் கூத்துக் கலைக்கும் புத்துயிர் தந்தவர். பல அரிய ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டவர். இவற்றுட் *தமிழர் சால்பு* என்ற நூல் இவருக்குப் பேரும் புகழும் தேடித்தந்துள்ளது.

இவ்வேளையில் பேராசிரியர் அவர்களின் மாணவனான பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் அவர்கள், பேராசிரியரின் நினைவாகப் *பண்டைய ஈழத்தில் தமிழர் – ஒரு பன்முகப் பார்வை* என்ற கருத்துரையை வழங்கவிருக்கிறார். தமிழ்த் தேசியத்துடனும், தமிழ் வரலாற்றோடும் ஈடுபாடுடைய ஒருவர் இத்தகைய பேருரையை நிகழ்த்துவதற்கு மிகவும் பொருத்தமானவர் என்றால் மிகையாகாது.

*பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை,*
*துணைவேந்தர்,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

# பண்டைய ஈழத்தில் தமிழர் – ஒரு பன்முகப்பார்வை

துணைவேந்தர் அவர்களே, பட்டப்பின் படிப்புப் பீடாதிபதி
அவர்களே, இக் கைலாசபதி கலையரங்கில் இவ்வுரையைச்
செவிமடுக்க வந்துள்ள வணக்கத்துக்குரிய ஆன்மீகத் தலைவர்களே,
பேராசிரியர்களே, பெருமக்களே, மாணவ மாணவிகளே,
ஆர்வலர்களே உங்கள் எல்லோருக்கும் எனது அன்பு கனிந்த
வணக்கங்கள். இன்றைய நினைவுப் பேருரை ஒரு மிகமிகப்
பொருத்தமான நேரத்தில் ஒரு பெறுமதி மிக்க- தமிழ் பேசும் மக்கள்
மத்தியில் பெரிதும் மதிக்கப்படுகின்ற பேராசிரியரின் நினைவாக
நடைபெறுகின்றது என்றால் அது புனைந்துரையன்று. இப்போது நமது
நினைவலைகள் நம்மை இந்நூற்றாண்டின் அறுபதுகளுக்கு இட்டுச்
செல்லுகின்றன. கொழும்புப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்
துறையில் பேராசிரியர் லக்ஷ்மன் பெரேராவின் கீழ், துணை
விரிவுரையாளராகக் கடமை ஆற்றிய நேரத்தில், அப்போதைய
தொல்லியல் திணைக்கள ஆணையாளராக இருந்த கலாநிதி சி.இ.
கொடகம்புரேயைச் சந்திக்கும் வாய்ப்பு நமக்குக் கிடைத்தது.
நமக்கிடையே ஆய்வு முயற்சிகள் பற்றி நடைபெற்ற
கலந்துரையாடலின் போது நமது ஆசான் பேராசிரியர் கா.
இந்திரபாலா கலாநிதிப் பட்டதிற்காக இலண்டன்
பல்கலைக்கழகத்தில் சமர்ப்பித்த *“ஈழத்தின் ஆதித்திராவிடக்
குடியேற்றங்கள்”* என்ற ஆராய்ச்சிக் கட்டுரை பற்றி அவருக்கு
எடுத்துரைத்தேன். அப்போது வியப்பாக அவர் நம்மிடம் கேட்ட
கேள்வி இதுதான். “How old they are?” எவ்வளவு பழைமை
வாய்ந்தவை? ஆனால் அவரைப் போலன்றி இன்று தமிழ்த் தேசியம்
வளர்ச்சி பெற்ற நிலையில், ஆயுதப் போராட்டமாகப் பரிணாமமெடுத்த
நிலையில், தமிழ் மக்கள் தனியான ஒரு தேசிய இனம்,
அதற்கென்று ஒரு மரபு வழித் தாயகம் உண்டு, அதன்
தலைவிதியை நிர்ணயிக்கும் உரிமை சர்வதேசக் கோட்பாடுகளுக்கு
அமைய அதற்கு உண்டு என்று தமிழ் மக்கள் குரல் கொடுத்து,
அதன் விளைவாகப் பல்வேறு அநர்த்தங்களையும் சந்தித்து நிற்கும்
இவ்வேளையில், நம்மவரின் பழைமை பற்றி அறிய மிக ஆவலாக
வந்திருக்கின்றீர்கள். ஆதலால் உங்களைத் தக்கவாறு கவனிப்பது
நமது தலையாய கடமையாகும்.

நிற்க, பேராசிரியர். சு. வித்தியானந்தன் அவர்கள் ஒரு
மாமனிதன்; சிறந்த கல்விமான், ஆழ்ந்த புலமையாளன்,
இவையெல்லாவற்றையும் விட மனிதாபிமானமுடையவர். தமிழ்த்
தேசியத்தோடு தம்மை இணைத்த கல்விமான்களில்- விரல்விட்டு
எண்ணக்கூடியவர்களில்- ஒருவர். இவரைப் போன்று இன்னொருவர்,
இவரைவிடச் சர்வதேச மட்டத்தில் தமிழின் பழைமையை,
பாரம்பரியத்தை ஒலிக்கச் செய்தவர் வண. தனிநாயகம்
அடிகளாராவர். பேராசிரியரை எல்லோரும் அன்பாகவும்

மரியாதையுடனும் *"சு.வி"* என அழைப்பது வழக்கம். அவரிடம் காணப்பட்ட கவர்ச்சிகரமான, காந்த சக்திமிக்க ஈர்ப்புத் தன்மையால் அவரோடு கருத்து முரண்பட்டு நின்றவர்கள் கூட அவர் முன் பெட்டிப் பாம்பாக அடங்கிவிடுவர்.

இத்தகைய பெருந்தகையை நாம் முதன்முதலில் சந்தித்த இடம் யாழ்ப்பாணப் பழைய கச்சேரியில்தான். இது ஒரு பழங்கதை. என்றாலும், சொல்லத்தானே வேண்டும். ஒரு வகையில் வரலாறே பழங்கதைதான். 1961இல் சிங்கள மொழிச் சட்டத்திற்கு எதிராகத் தமிழ் மக்கள் *"தமிழ்த் தேசபிதா"* தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களின் தலைமையிலும், தளபதி அமிர்தலிங்கத்தின் துணையுடனும் சாத்வீக அடிப்படையில் நடாத்திய சத்தியாக்கிரகப் போராட்டத்தின் விளைவாக 3 மாதங்கள் வட-கிழக்கு மாகாணங்களில் கொழும்பின் பிடி தளர்ந்தது. அரச நிர்வாகமே செயலிழந்தது. ஈழத் தமிழரின் உரிமைப் போராட்டத்தில் இது ஒரு மைல் கல்லாகும். யாழ்ப்பாணக் கல்லூரியில் மாணவராக இருந்த நாம் - வட்டுக்கோட்டைத் தொகுதியில் பண்ணாகம் தந்த *"சொல்லின் செல்வரின்"* மேடைப் பேச்சுகளால் கவரப்பட்ட நாம்-தமிழ்த்தேசியத்துடன் நம்மை இணைத்த காலமது. பல்கலைக்கழகப் புதுமுகப் பரீட்சையில் சித்தி பெற்றுப் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கதவுகளைத் தட்டிக் கொண்டிருந்த வேளை ஏப்ரல் 17 ஆம் திகதி தேசிய உடையில் கம்பீரமாக நடந்து வந்த *"சு.வி"* தலைமையில், இச்சத்தியாக்கிரகத்திற்கு ஆதரவாகப் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ் மாணவ, மாணவிகளின் பேரணி ஒன்று நடைபெற்றது. அதில் பல்கலைக்கழகத்தில் இணையாதிருந்தும், இணைந்த மாணவன் போல் பங்கு பற்றினேன். அத்தினம்தான் நடுநிசியில், ஜனசஞ்சாரமற்ற வேளை, சாத்வீகத் தொண்டர்களையும், தலைவர்களையும் இராணுவம், கேணல் உடுகமவின் தலைமையில் தாக்கி, இப்போராட்டத்தை இரும்புக் கரங்களால் நசுக்கியது. இதன் விளைவினை இன்று நாடு முழுவதும் அனுபவிக்கின்றது. சர்வதேசத்தின் பார்வையும் நம் பக்கம் திரும்பியுள்ளது.

பேராசிரியரின் தமிழுணர்வை 1974 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு என்றும் பறை சாற்றும். தனது உயிரையே துச்சமென மதித்து யாழ்ப்பாண நகரை, இந்திரவிழாக் கொண்டாடிய பூம்புகார் நகர் போன்று அலங்கரித்து இதனைப் பெருவிழாவாக்கி ஒப்பேற்றிய பெருமைக்குரியவர் *" சு.வி"* ஆவார். இறுதிநாள் நிகழ்ச்சியில் நம்மவர் சிலரின் அடாவடித்தனத்தால் ஏற்பட்ட மின்கோளாறு காரணமாக தமிழுக்கே தன்னை அர்ப்பணித்த மாமனிதன் வெறுந் தரையில் புரண்டு கிடந்தான். ஆனால் நம்மவர்கள் சிலரைப் பலி கொண்ட இந்நிகழ்வு பேராசிரியரைப் பலி கொள்ளவில்லை. தமிழ் எப்படிச் சாகும்? எனினும், தமிழ்த் தேசியத்தின் எழுச்சியில் இதுவும் ஒரு மைல் கல் என்றால் மிகையாகாது.






பேராசிரியரின் புலமையை அவர் எழுதிய *"தமிழர் சால்பு"* போன்ற நூல்கள் என்றும் வெளிக் காட்டுவனவாக விளங்கும். சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் பிரசுரிக்கப்பட்டு, சங்க இலக்கியக் கண்ணோட்டத்தில், தமிழக நாகரிகத்தின் மலர்வு பற்றிக் கூறும் இந்நூல் தமிழகத்தில் புலமை சான்றோரால் இன்றும் மதிக்கப்படும் நந்நூலாகும். பேராசிரியரிடம் பல்கலைக்கழகத்தில் தமிழை ஒரு கற்கை நெறியாக கற்ற நாம் அவரிடமிருந்து பெற்றுக் கொண்டது இதுதான். அவர் தொட்டதையும் விட்டதையும் ஒப்பேற்றி வைத்ததுதான். இதன் விளைவுதான் சங்ககாலத் தமிழரின் நாகரிகத்தை வரலாறு, தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் எழுதிப் " *பண்டைய தமிழகம்* " என்ற தலைப்பில் நாம் வெளியிட்ட நூலாகும். மறைந்த நமது முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர். அ. துரைராசாவின் ஆளுமையின் விளைவாக, அவர் தொடக்கி வைத்த பல்கலைக்கழக ஆராய்ச்சி நிதியத்தின் மூலம் மேற்கூறிய நமது நூல் 1990 இல் பிரசுரமானது. 1999 இல் பல்கலைக்கழக விடுப்பில், தமிழகச் செலவில், தமிழகத்தில் நாம் தரித்திருந்த பொழுது இதனை மிக விரிவான முறையில் 500 பக்கங்களாகப் பிரசுரிக்கும் வாய்ப்பும் கிடைத்தது. இதன் முகவுரையில் நாம் கூறியது இதுதான்:

> *"சங்ககால நாகரிகத்தின் நாகரிகச் சிறப்புகளை சால்புடன் எடுத்துக் கூறுவதுதான் ஈழத்துப் பேராசிரியர் சு. வித்தியானந்தன் எழுதிய தமிழர் சால்பாகும். இத்தகைய ஒரு பாரம்பரியத்தின் தொடர்ச்சியே நமது நூலாகும் என்றால் புனைந்துரையன்று"*

ஆதலால் இன்று இத்தகைய செம்மலின் நினைவாக இப்பேருரையை நிகழ்த்துவதில் மனநிறைவடைகின்றேன்.



# ஈழத்தமிழரின் தொன்மை பற்றிய ஆய்வு.

## I

" ஈழத்தில் தமிழ் மக்களின் ஆதிக் குடியேற்றங்கள் பற்றிய ஆய்வானது பல்வேறு காரணங்களால் சிரமத்திற்குட்பட்டுள் ளது. முக்கியமாகப் பண்டைய வரலாற்றைக் கற்கும் ஏனைய மாணவர்களைப் போலவே நாமும் மூலாதாரங்க ளின் பற்றாக்குறை பற்றிய பிரச்சினையை எதிர்நோக்கு கின்றோம். பாளி, சிங்கள இலக்கியங்கள் நம்பகரமானதும், பெருமளவுக்குப் போதுமானதுமான விதத்தில் அரசியலும், ஓரளவுக்குச் சமயமும் சம்பந்தமான தொடர்ச்சியான வரலாற்றை வியக்கத்தக்கவிதத்தில் அளித்த போதிலும், ஈழத்தமிழரின் ஆதிக்குடியேற்றம் பற்றிய எமது ஆய்வுக்கு அவற்றின் பங்களிப்புச் சொற்பமேயாகும். சிங்கள அரசியலில் அல்லது சமய விவகாரங்களில் தமிழரின் நடவடிக்கைகள் பாதிப்பை ஏற்படுத்திய போதுதான் தமிழர் பற்றி இவ்விலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. தமிழ் வரலாற்று நூல்களைப் பொறுத்தமட்டில் தற்போது கிடைக்கும் இலக்கியச் சான்றுகள் கி.பி. 13ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தமிழ் இராச்சியம் (யாழ்ப்பாண இராச்சியம்) உருவாக்கப்பட்டு ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகளின் பின்னர் எழுந்தவையே. இவற்றில் கி.பி. 13ஆம் நூற்றாண்டிற்கு முந்திய காலப்பகுதி பற்றிக் கூறும் பகுதிகள் (ஆதித் தமிழ்க் குடியிருப்புகள் நிறுவப்பட்ட காலப்பகுதி) ஐதீகங்கள் நிறைந்தனவாய் விளங்குவதால் இவை முழுமையாக நம்பத்தகுந்தவையல்ல. தென்னிந்தியத் தமிழ் நூல்கள் ஈழத்தில் ஏற்பட்ட தமிழரின் நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிடத்தக்க குறிப்புகள் எதையும் கொண்டிருக்கவில்லை. இவ் விடயம் தொடர்பாகத் தொல்லியல் சான்றுகள் ஊக்கமளிப்பனவாக இருந்த போதிலும் அவையும் போதுமானவை அல்ல. துரதிஷ்டவசமாக எமது நாட்டின் தொல்லியல் ஆய்வில் அகழ்வாராய்ச்சி இன்னும் வளர்ச்சி அடையாத துறையாகவே உள்ளது. அகழ்வாராய்ச்சி வளர்ச்சியடையாத நிலையில் எமது ஆய்வுக்குப் பொருத்தமான தகவல்கள் பற்றி அறிவதற்குக் காத்திருக்க வேண்டியே உள்ளது."

மேற்கண்ட கூற்று 1969இல் இற்றைக்கு முப்பது ஆண்டுகட்கு முன்னர் வேத்தியல் சங்கத்தின் ஈழக்கிளையில் *"ஈழத்தின் ஆதித் தமிழ்க் குடியேற்றங்கள்"* என்ற தலைப்பில் நமது ஆசானாகிய பேராசிரியர். கா. இந்திரபாலா ஆற்றிய உரை பின்னர் இச்சங்கத்தின் ஆராய்ச்சிச் சஞ்சிகையில் கட்டுரையாக வெளிவந்த போது அதில் இடம்பெற்றுள்ளதாகும். [1] உண்மையில் பேராசிரியர் அவர்கள் 1965இல் *"திராவிடக் குடியேற்றங்களும் யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றமும் "* என்ற தலைப்பில் கி.பி.





13ஆம் நூற்றாண்டு வரையிலான சான்றுகளை ஆராய்ந்து தமது கலாநிதிப் பட்ட ஆய்வுக்காக இலண்டன் பல்கலைக்கழகத்தில் சமர்ப்பித்த ஆராய்ச்சிக் கட்டுரையின் பொழிப்பே மேற்கூறிய கட்டுரையாகும். [2] இங்கே ஒன்றை மட்டும் குறிப்பிடுதல் வேண்டும். தமிழ் என்ற எழுத்து வடிவந்தான் வடமொழியில் திராவிட எனவும், பாளி, சிங்கள மொழிகளில் தமிள/தெமள எனவும் இடம்பெற்றுள்ளது. தமிழுக்கும் ஏனைய தென்னிந்திய மொழிகளான மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்றனவற்றுக்கும் இடையே உள்ள உறவுகளைக் கண்ட *கால்ட்வெல்* என்ற அறிஞர் ஒரு பரந்த அடிப்படையில் இவற்றை எல்லாம் குறிக்க " *திராவிட மொழிகள்* " என்ற பதத்தினைப் பயன்படுத்தினார். இவ்வாறே வடஇந்திய மொழிகள் ஆரிய மொழிகள் என அழைக்கப்பட்டன. மேலும் பேராசிரியரின் ஆராய்ச்சிக் கட்டுரை இன்று இப் பல்கலைக்கழக நூல் நிலையத்திலிருந்து மர்மமான முறையில் மறைந்துவிட்டது என்பதை 1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28ஆம் திகதி வெளியான " சண்டே ஒப்சேவர் " என்ற ஆங்கிலப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளதும் ஈண்டு நினைவு கூரத்தக்கது.

பேராசிரியர் அவர்கள் இக்கட்டுரையில் பண்டைய ஈழத்தில் தமிழ்க் குடியேற்றங்களின் தோற்றம் பற்றியும் பின்வருமாறு விளக்கியுள்ளார். அஃதாவது கிடைக்கும் மூலாதாரங்களைக் கொண்டு இதற்கான விடையைக் காணமுடியாத நிலையில், இது பற்றிப் போதுமான தரவும் இல்லாத நிலையில், அதிகளவு யூகங்களின் அடிப்படையிலேதான் இவ்விடயம் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் தமது ஆய்வினை மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஒரு சிலர் ஆரிய இனத்தவர் இங்கு குடியேற முன்னர் தமிழர்கள் இங்கு குடியேறிவிட்டனர் என வாதிட, இன்னுஞ் சிலர் கி.மு. 3ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி. 10 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில்தான் தமிழர்களின் குடியேற்றங்கள் இங்கு காணப்பட்டன எனவும் வாதிட்டுள்ளனர். எவ்வாறாயினும், கிடைக்கும் மிகக் குறைவான சான்றுகள் அடிப்படையில் நோக்கும் போது வாணிப நலன்கள், அரசியல் ஆதிக்கப்படர்ச்சி, ஈழத்து இராணுவத்தில் பணியாற்றுவதற்கான வாய்ப்புகள் ஆகியனவே கிறீஸ்தாப்த காலத்தில் தமிழரைத் தமிழகத்திலிருந்து ஈழத்திற்கு ஈர்த்த பிரதான காரணிகளாகும். எனினும், இத்தகைய நடவடிக்கைகள் மூலம் இக்காலத்தில் நிரந்தரமானதும், பரந்த அளவிலானதுமான தமிழ்க் குடியேற்றங்கள் இங்கு காணப்படவில்லை. இதனால் கிறிஸ்தாப்த காலத்திற்கு முன்னர் உள்ள காலப்பகுதியிலோ அன்றி கிறிஸ்தாப்தத்தை அண்டியுள்ள நூற்றாண்டுகளிலோ ஈழத்தில் தமிழ்க் குடியேற்றங்கள் காணப்பட்டதற்கான நம்பகரமான சான்றுகள் பாளி நூல்களில் காணப்படவில்லை. தமிழர்கள் ஈழத்து வாசிகளிலிருந்து வேறானவர்கள், தனித்துவமானவர்கள் என்பதை உணர்த்தும் (தமிழகத் தமிழரைக் குறிக்கும்) *"தமேட"* என்ற பதந்தான் (கிறீஸ்துவுக்கு முந்திய) ஈழத்துப்பிராமிக் கல்வெட்டுகளில்

காணப்படுகின்றது. தொல்லியல் சான்றுகள் மட்டுமே அநேகமாகப் புத்தள மாவட்டத்திலுள்ள பொம்பரிப்பிலும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கதிரவெளியிலும் கி.மு. 2ஆம், கி.பி. 3ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் தமிழர் குடியேற்றங்கள் காணப்பட்டதை எடுத்துக் காட்டினாலும் கூட, கி.பி. 7ஆம் நூற்றாண்டு வரை தமிழர்களின் குடியேற்றங்கள் பற்றிய நமது அறிவு சூனியமாகவே உள்ளது என எடுத்துக் காட்டும் பேராசிரியர் கா. இந்திரபாலா உண்மையில் கி.பி. 13 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஓர் உறுதியான இராச்சியத்தை (யாழ்ப்பாண இராச்சியம்) உருவாக்க முன்னர் தமிழ்க் குடியேற்றங்கள் பற்றிய ஒரு நம்பகரமான வரலாற்று மரபு தமிழர்களால் பேணி வளர்க்கப்படவில்லை என்றும், கி.பி.13ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குப் பின்னர்தான் ஈழத்தில் குடியேறும் உறுதியான நோக்கத்துடன் தமிழகத்திலிருந்து தமிழர்கள் இவ்விடம் நோக்கிப் புலம்பெயர்வதற்கான சான்றுகள் காணப்படுவதோடு வட-கிழக்கு மாகாணங்கள் தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழும் பிரதேசங்கள் ஆயின எனவும் கூறி முடித்துள்ளார்.[3]

இருந்தும், ஒரு குடியேற்றம் பற்றிய ஆய்வு வெறும் இலக்கியங்களையோ அல்லது கல்வெட்டுகளையோ மட்டும் அடிப்படையாகக் கொண்டு அமைய முடியாதென்றும், மாறாக ஒரு பன்முகப் பார்வைதான் இத்தகைய ஆய்வுக்கு மிகவும் பொருத்தமானதொன்றாகும் என நாம் மேலே சுட்டிக் காட்டிய கட்டுரையில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளமையும் ஈண்டு மனங் கொள்ளற்பாலது.

“எந்த ஒரு நாட்டிலும் வெளிநாட்டிலிருந்து ஏற்பட்ட ஆதிக் குடியேற்றங்கள் பற்றிய வரலாற்று ஆய்வானது பல்வகைப் பிரச்சினைகளை எதிர் கொள்ள வேண்டியுள்ளது. இத்தகைய பிரச்சினைகளை இலக்கியங்கள், சாசனங்கள் ஆகியவற்றை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு தீர்க்க முடியாது. இதனைத் தீர்ப்பதில் தொல்லியல், பௌதீக மானிட இயல், வரலாற்றுப் புவியியல், வரலாற்று மொழியியல் ஆகியனவும் முக்கிய பங்கினை வகிக்கின்றன. இப்பிரச்சினைகள், ஏனையவற்றுடன் குடியேற்ற வாசிகளின் தாயகம், புலம்பெயர்வுக்கான காரணிகள், அவர்கள் குடியேறிய பிரதேசங்கள், ஆதிக்குடியேற்றவாசிகளில் தப்பிப் பிழைத்தவர்களின் அளவு ஆகியவற்றை உள்ளடக்கும் ”

உண்மையிலே நாடுகளின் வரலாறு பற்றிய ஆய்வின் ஆரம்பத்தில் கட்டுக்கதைகளும் ஐதீகங்களுந்தான் அவ்வந் நாடுகளின் உண்மையான வரலாற்றுத் தரவுகள் என ஒருகால் நம்பப்பட்டு வந்துள்ளது. ஆனால் வரலாற்றியல் தனியொரு ஆராய்ச்சிப் பிரிவாக வளர்ச்சியடையத் தொடங்க வரலாற்றை ஐதீகங்களிலிருந்து வேறுபடுத்தலும், இதனை ஒரு சமூகத்தின் செயற்பாடு எனக் கொள்ளலும், விஞ்ஞான ரீதியாக நோக்கிப்





பன்முகப்பார்வையில் கடந்த காலச் சமூகத்திற்கும் நிகழ்காலச் சமூகத்திற்குமிடையே நிகழும் உரையாடலே இஃதாகும் என்பதும் உணரப்பட்டு வந்துள்ளது. இதனால் மேற்கூறிய பின்னணியில் ஆராய்வதன் நோக்கமாகவே பண்டைய ஈழத்தில் தமிழர் – ஒரு பன்முகப்பார்வை என்ற நமது கருத்துரை அமைந்துள்ளது. எனினும் இன்றைய நமது உரையில் கிறிஸ்த்துவுக்கு முற்பட்ட காலத் தமிழர் குடியேற்றம் பற்றியே ஆராயப்படவுள்ளது.

## ஆதிகாலக் குடியேற்றம் பற்றிய ஐதீகங்கள்

## II

ஈழத்தின் நாகரிக வளர்ச்சியை மூன்று காலப்பிரிவுகளாக நிரைப்படுத்தலாம். அவையாவன வரலாற்றுக்கு முற்பட்ட காலம், வரலாற்றுதயகாலம், வரலாற்றுக் காலம் ஆகும். எழுத்தின் பயன்பாடு, நாணயப் புழக்கம், நகர மயமாக்கம் விவசாய – வாணிப வளர்ச்சி பிற தொழில்நுட்ப வசதிகள் ஆகியவற்றுடன் வரலாற்றுக் காலம் ஆரம்பமாகிறது. இதனைத் தேவநம்பியதீசனின் ஆட்சியுடன் (கி.மு. 250 - 210) ஆரம்பமாகிறது எனக் கொள்ளுதல் மரபெனினும் அண்மைக் காலத் தொல்லியல் ஆய்வுகள் கி.மு. நான்காம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே இது தொடங்கியிருக்கலாம் என்பதை எடுத்துக்காட்டியுள்ளன.[4] எவ்வாறாயினும், வரலாற்றுக் காலத்திற்கும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்கும் இடைப்பட்ட காலமே வரலாற்று உதய காலமாகும். இக்காலத்திற்றான் ஈழத்து நாகரிக கர்த்தாக்களாகிய சிங்கள- தமிழ் மக்களின் மூதாதையினர் குடியேறினர். இதனால் இதனை ஈழத்து இன்றைய மக்களின் ஆதிக்குடியேற்ற காலமும் எனலாம். எவ்வாறாயினும், ஆதிக்குடியேற்றம் பற்றிய ஐதீகத்தை வளர்த்தெடுப்பதில் பௌத்த மதமே முன்னணியாக விளங்கியது. இது கி.மு. 3ஆம் நூற்றாண்டில் தேவநம்பியதீசனின் ஆட்சிக்காலத்தில் இந்தியாவில் அசோகச் சக்கரவர்த்தியின் காலத்தில் இங்கு அறிமுகமாகியது. இதனுடன் சம்பந்தப்பட்ட செய்திகள் மட்டுமன்றி ஈழத்தில் இது பரவிய விதம், இதனைப் போஷித்தோர் போன்ற விவரங்கள் அநுராதபுரத்திலுள்ள பிரதான விகாரைகளில் பேணப்பட்டன. இவற்றை அடிப்படையாகக் கொண்டுதான் அக்காலத்தில் பௌத்த உலகின் தொடர்பு மொழியாக விளங்கிய பாளி மொழியில் கி.பி. 4ஆம் நூற்றாண்டில் தீபவம்சமும்,[5] கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் மகாவம்சமும்[6] எழுதப்பட்டன. இந்நூல்களை எழுதியோர், பௌத்தம், அதைத் தழுவியோர், நாடு ஆகிய மூன்றையும் இணைத்தே எழுதினர். பௌத்த மதக் கண்ணோட்டத்தில் இவை எழுதப்பட்டதென்பதை மகாவம்சத்தின் ஒவ்வொரு அத்தியாயத்தின் இறுதியிலும் இதன் ஆசிரியரின் கூற்றாக வரும் ”விசுவாசிகளின் இன்பத்திற்கும் மனநிறைவுக்குமே” என்ற வாக்கியம் உணர்த்துகின்றது. இந்நூல்களில் ஈழத்து மக்களின் குடியேற்றம் ஐதீகமாகப் பௌத்த மதக் கண்ணோட்டத்தில் கூறப்பட்டுள்ளது.[7]

சிங்கத்தின் வழிவந்த விஜயன் கூட்டத்தினர் இங்கு வருவதற்குப் பின்னணியாகக் கௌதம புத்தர் மூன்று விஜயங்களை இந்நாட்டிற்கு மேற்கொண்டு இதன் ஆதிவாசிகளும் அமானுஷ்யர்களுமான யக்ஷர், நாகர் ஆகியோரில் யக்ஷரிடமிருந்து நாட்டை அபகரித்துத் தமதாக்கினார். புத்தர் பரிநிர்வாணம் / சமாதி அடைந்த தினத்தில் விஜயன் இந்நாட்டுக்குக் கால்வைத்த போது அவர்கள் இறங்கிய இடத்தை அவர்கள் தொட்ட போது கை சிவப்பாக மாறியதால் அந்த இடத்திற்கும் இத்தீவிற்கும் ***"தம்பபண்ணி"*** என்று அவர்கள் பெயரிட்டனர்.[8] யக்ஷப் பெண்ணாகிய குவேனியை மணந்து இரு பிள்ளைகளைப் பெற்ற பின் முடிசூட விரும்பிய விஜயன் சத்திரியப் பெண்ணாகிய தென்மதுரைப் பாண்டிய இளவரசியை மணந்து 38 வருடங்கள் தம்பபண்ணியில் அரசாட்சி செய்து சந்ததி இல்லாது இறந்தான். விஜயனுக்கு மணப் பெண்ணாக வந்த பாண்டிய இளவரசி விஜயனது 700 தோழர்களுக்கும் மணப்பெண்களை அழைத்து வந்ததோடு தன்னுடன் பதினெண்வினைஞர் குழுவையும் அழைத்து வந்தாள் எனக் கூறப்படுகின்றது. இக்கட்டுக்கதையில் இடம்பெறும் இந்தியாவின் வடநாட்டிலுள்ள இடப்பெயர்களை மட்டுமன்றி ஈழத்திலும், விஜயனின் கூட்டத்தினர் அமைத்த குடியேற்றங்கள் பற்றிய செய்திகளையும் மையமாக வைத்து இக்குழுவினர் அலையலையாக இந்தியாவின் வடமேற்கு, கிழக்குப் பிராந்தியங்களிலிருந்து வந்து நதிகளை மையமாக வைத்து ஈழத்தின் வடமேற்கு, கிழக்கு, தென்கிழக்குப் பகுதிகளில் குடியேறினர் என விளக்கங்கள் கொடுக்கப்பட்டது.[9] தற்காலச் சிங்கள மொழிக்கும் வட இந்திய ஆரிய மொழிகளுக்குமிடையேயுள்ள பல பொதுத் தன்மைகளின் அடிப்படையிலும், தற்காலத் தமிழ்-சிங்கள கலாசாரங்களிடையே நிலவும் வேறுபாடுகள் தனித்தன்மை ஆகியவற்றைக் கொண்டும், இத்தகைய குடியேற்றத்தை உருவாக்கியவர்கள் வட இந்தியாவிலிருந்து வந்த ஆரிய மக்களே எனவும் வரலாற்று ஆசிரியர்களால் விளக்கங் கொடுக்கப்பட்டது.[10] மகாவம்சத்தில் "ஆரியர்"என்ற சொல்இடம்பெறாத நிலையில் "ஆரியஇனம்" என்பதற்குப் பதிலாக ஆரிய மொழிக் குழுவினர்தான் சரியான பதம் எனக் கருதப்பட்ட காலத்தில் வரலாற்று ஆசிரியர்களால் இவ்வாறு விளக்கம் கொடுக்கப்பட்டு வந்துள்ளது. அது மட்டுமன்றி, தற்காலச் சிங்கள மக்கள் எவ்வாறு பெயரைப் பெற்றனர் என்பதற்கு விளக்கமாகச் சிங்கத்தைக் கொன்றதால் சிங்கபாகு *சீகள* என அழைக்கப்பட, அவனுக்கும் விஜயனுக்கும் இடையே இருந்த உறவால் (விஜயனும் பரிவாரங்களும்) *சீகள* என அழைக்கப்பட்டனர் என்பதாகும்.[11]

அடிக்கடி தமிழகத்திலிருந்து ஏற்பட்ட படையெடுப்புகள், மகாவம்சம் போன்ற நூல்கள் எழுதப்பட்ட காலத்தில் ஈழத்து வாரிசுருமைப் போரில் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பவர்களாகத்





தமிழ் இராணுவத்தினர் விளங்கியமை, தமிழகத்தில் பல்லவ, பாண்டிய வம்சங்களின் எழுச்சியும் ஈழத்து அரசியலில் அவற்றின் தாக்கமும், இந்தியாவில் பௌத்தம் நலிவுற இந்து மத மறுமலர்ச்சி ஏற்பட்டமை ஆகிய சம்பவங்களால் ஈழத்துப் பௌத்த மத பீடத்தினர் புத்தர் இந்நாட்டுக்கு விஜயம் மேற்கொண்டு நாட்டை யக்ஷர்களிடமிருந்து கைப்பற்றி அதனைப் பௌத்த சாசனத்துக்குரிய நாடாக்கியதால் பௌத்த தர்மம் தளைத்தோங்கும் "தர்ம தீபமே" இ.்.தாகும் என்ற சித்தாந்தத்தை வளர்த்தெடுத்த நேரத்தில், அரச பதவியில் அமர்ந்தோரும் அரசர்கள் போதிசத்துவர்கள் மட்டுமன்றி, புத்தரின் சாக்கிய வம்சத்தின் வழிவந்தவர்கள் என்றும் இதனால் பௌத்த சாசனத்திற்குரிய இந்நாட்டை, பௌத்த சாசனத்திட மிருந்து பெற்ற இந்நாட்டை, அவர்களின் அநுசரணையுடனேதான் ஆளவேண்டுமென்ற ஐதீகங்களையும் தமது அரசபதவியை உறுதிப் படுத்தவதற்காக வளர்க்கத் தொடங்கினர்.[12] இதனால் பாளி நூல்களில் தமிழர் பற்றிய குறிப்புகள் எல்லாவற்றிலும் இவர்கள் விதேசிகள், தவறான சமய நம்பிக்கைகளைக் கடைப்பிடிப்பவர்கள், ஆக்கிரமிப்பாளர்கள், படையெடுப்பாளர்கள் என்று குறிப்புகள் காணப்படுகின்றன. அரசியல் மேலாதிக்கத்திற்காக நடைபெற்ற எல்லாளன், துட்டகைமுனு யுத்தம்கூட ஒரு இன மோதலாகச் சித்தரிக்கப்பட்டுள்ளதோடு இவ்யுத்தத்தில் கொல்லப்பட்ட பௌத்தத்தைச் சரணடையாத தமிழர்கள் மிருகங்களை விடக் கேவலமானவர்கள், ஆதலால் அவர்களைக் கொன்றமை பற்றி "மன்னா" நீ கவலைப்படத் தேவையில்லை என்று மரணப்படுக்கையில் கழிவிரக்கம் கொண்டிருந்த துட்டகைமுனுவுக்குப் புத்த குருமார் அறிவுரை கூறியதாக மகாவம்சம் கூறுகின்றது.[13] விந்தையிலும் விந்தை என்னவெனில் துட்டகைமுனுவால் எல்லாளனுக்கு அமைக்கப்பட்ட சமாதியை அகழ்ந்த போது அதில் கிடைத்த சாம்பலை (சூழ்ப்பந்தத்தினால் ஏற்பட்ட சாம்பலை) மனித சாம்பல் எனக் கொண்டது மட்டுமன்றி, துட்டகைமுனுவினது சாம்பலே என விஞ்ஞான ரீதியில் கணிப்பீடு செய்யப்பட்டதென்று கூறி ஒரு அறிஞர் கூட்டமே அதிலிணைந்து தர்மிஷ்டர் ஆட்சியில் 1980இல் ஒரு பெரு விழா எடுத்ததாகும்.[14]

இத்தகைய குடியேற்ற ஐதீகங்கள் பிரித்தானியர் ஆட்சியில் மேலும் உரம் பெற்று வளர்ந்தன. இக்காலத்தில் ஏற்பட்ட பௌத்த கலாசார மறுமலர்ச்சிக்கு இவை நல்ல தளமாக அமைந்தது மட்டுமன்றி, முழு ஈழத்திலும் ஒரு தேசிய ரீதியாக ஒரு மறுமலர்ச்சி ஏற்படுவதற்குப் பதிலாக ஆரிய-சிங்கள- பௌத்த மறுமலர்ச்சியாகவும் தமிழர்களுக்கெதிரான ஒரு இயக்கமாகவும் வளர வழிவகுத்தது.[15] இக்காலத்தில் காடுகளாக இருந்த சிங்கள நாகரிகத்தின் மையப் பிரதேசங்கள், கண்டு பிடிக்கப்பட்டு ஆராயப்பட, பௌத்த- சிங்கள முதன்மை மேலும் உறுதியாயிற்று.[16] மாறாகத் தமிழர் மத்தியில் ஏற்பட்ட இந்துக் கலாசார மறுமலர்ச்சி பௌத்தத்தைப் போலல்லாது இந்து மதவெறி அற்ற நிலையில் தமிழ்மொழி மறுமலர்ச்சியாக முதிர்ச்சியடைந்தாலும், தமிழர் தமது பூர்வீகக் குடியேற்றம் பற்றி

ஐதீக அடிப்படையிலாவது சான்றுகளைக் கொண்டிராத நிலையில், தமிழரின் பூர்வீகத்தை எடுத்துக் காட்டும் தொல்லியல் எச்சங்கள் அழிக்கப்பட்டும், பாதுகாக்கப்படாதும் காணப்பட்ட நிலையில், பௌத்த - சிங்கள குடியேற்ற ஐதீகங்களே கொடி கட்டிப் பறந்தன. முதலியார், இராசநாயகம்[17], வண. சுவாமி ஞானப்பிரகாசர் போன்றோர் இக்கால கட்டத்தில் மேற்கொண்ட ஆய்வுகளும் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. சுவாமி. ஞானப்பிரகாசர் தமது பன்மொழிப் புலமையால் தமிழர்கள், சிங்களவர்களாக மாறுகின்றார்கள்.[18] ஈழத்தின் ஆதிக்குடிகள் திராவிடரே[19] போன்ற கட்டுரைகளை மட்டுமன்றிச் சிங்கள மொழியின் திராவிடத் தன்மை என்ற கட்டுரையை 1936இல் இவர் சார்பாக முதலியார் இராசநாயகம் வேத்தியல் கழகக் கிளையில் வாசித்த போது "Fools rush in where the angels fear to tread in " இளங்கன்று பயமறியாது என்று எள்ளி நகையாடப்பட்டார்.[20] தற்காலம்வரை பல்கலைக்கழக மட்டத்திலும், பாடசாலை மட்டத்திலும் எழுதப்பட்டுவரும் நூல்களில் சுமார் 2000 ஆண்டுகளாக வளர்க்கப்பட்டு வந்த இந்த ஐதீகத்தின் கருப் பொருளாக ஆரிய சிங்களக் குடியேற்றமே முதன்மை பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. எனினும், 1917 இல் கந்தரோடையில் ஆய்வு செய்த சேர் போல் பீரிஸ், 1919ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி வெளிவந்த டெயிலி - நியூஸ் என்ற ஆங்கிலப் பத்திரிகையில் தமிழரின் பழைமையின் திறவுகோல் மண்ணில் மறைந்திருக்கும் அகழ்வாராய்ச்சிச் சின்னங்களை வெளிக் கொணர்வதிலே தான் உண்டு என்ற தீர்க்க தரிசனத்துடன் கூறிய கருத்தை, கடந்த கால் நூற்றாண்டாக நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள் நிரூபித்துள்ளதால் இக்கூற்றினை இங்கே பதிதல் அவசியமாகிறது. அன்று அவர் கூறியதாவது:

"I hope the Tamil People will realise that in truth there is buried in their sands the story of much more facinating development than they had hither to dreamed"

இது வரை கனவிலும் எண்ணிப் பாராத தமது நாகரிகத்தின் கவரத்தக்க வளர்ச்சிக் கட்டம் பற்றிய சான்றுகள் உண்மையாகவே மண்ணுக்குள் புதைந்திருப்பதைத் தமிழ் மக்கள் (ஒரு காலத்தில்) உணர்வார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

## தொல்லியற் பின்னணியில் ஆதிக்குடியேற்றம்.

### III

எவ்வாறாயினும், 1965களில் பாளி நூல்கள் தரும் குடியேற்ற ஐதீகம் வெறும் கட்டுக்கதையென்றும் இவற்றை நிரூபிக்க வரலாற்றுத் தொல்லியல் சான்றுகள் இல்லை என்றும் விமர்சனங்கள் தோன்றத் தொடங்கின. புகழ்பூத்த வரலாற்று ஆசிரியரான ஜி.சி. மெண்டிஸ்[21] விஜயன் கதை சீகள அல்லது சிம்கள என அழைக்கப்பட்ட நாட்டுப் பெயருக்கு ஜாதகக் கதைகளிலிருந்து புனைந்து வழங்கப்பட்ட ஐதீகமே இக்கதையாகும் எனக் கூற,





மானிடவியலாளரான எஸ்.பி.எவ். சேனாரத்தினாவும் [22] இவற்றை நிரூபிக்கச் சான்றுகள் இல்லை என்றார். இவரது கூற்றையே 1970இல் ஈழத்தில் அகழ்வாய்வு மேற்கொள்ள வந்த அமெரிக்க தொல்லியலாளரான விமலாபேக்லேயும் பின்வருமாறு ஆமோதித்துள்ளார். [23]

"புத்த சமயம் ஏற்படுத்திய முதன்மையான செல்வாக்கினால் ஈழம் பற்றிய புலமை சார்ந்த ஆய்வில் நீண்டகாலமாகப் பௌத்த இலக்கியமும் மொழியும் பற்றிய ஆய்வும், அவற்றுக்கான பொருள் கோடலிலுமே கவனஞ் செலுத்தப்பட்டது. இதனால் சாசன, தொல்லியல் சான்றுகள் போன்ற இதர சான்றுகள் அடிக்கடி பௌத்தமத இலக்கியக் கண்ணோட்டத்தில் அணுகப்பட்டன அல்லது முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டன. இத்தகைய அணுகு முறையின் விளைவாக வரலாற்று ஆசிரியர்கள் ஈழத்தின் ஆதிவரலாற்றைப் பெரும்பாலும் முழுமையாகத் தீபவம்சம், மகாவம்சம் பொன்ற பாளி இலக்கியங்களின் அடிப்படையில் படைத்துள்ளனர். இவ்விலக்கியங்கள் எத்தகைய பயனுடையனவாக இருப்பினும் மிகப் பழைய வரலாற்றை அணுகும் போது ஐதீகப் பாங்குடையனவாகவே உள்ளன."

இக்காலத்தில் ஈழத்தின் ஆதிக்குடியேற்ற மையங்களில் அகழ்வாய்வுகளும், மேலாய்வுகளும் தொடர்ந்தன. 1969இல் பண்டைய நாகரிகத்தின் மையம் எனப்பட்ட அநுராதபுரத்தில் ஈழத்துத் தொல்லியல் திணைக்களமும் [24] 1970இல் கந்தரோடை [25] பொம்பரிப்பு [26] ஆகிய இடங்களில் விமலாபேக்லே தலைமையிலும் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 1980இல் இக்குடியேற்ற மையங்களின் கலாசாரமாகிய பெருங்கற்காலம் பற்றிய கலாநிதிப் பட்ட ஆய்வுக் கட்டுரையும் நம்மால் சமர்ப்பிக்கப்பட்டது.[27] எல்லாமாக 30 மையங்கள், அதாவது பாளி நூல்கள் குறிக்கும் பிரதேசங்கள்தான் இப்பெருங்கற்கால கலாசார மையங்கள் என நம்மால் இனங்காணப்பட்டதோடு, தென்னிந்தியாவில் தற்கால திராவிட மொழிகளைப் பேசும் தமிழகம், கேரளம், ஆந்திரா, கர்நாடக மாநிலங்களில் வாழும் மக்களின் கலாசாரத்தின் படர்ச்சியே ஈழத்திலுள்ள பெருங்கற்கால மையங்களில் காணப்படும் கலாசார எச்சங்கள் எனவும், சிங்கள- தமிழ்க் கலாசாரமும் மொழிகளும் இதன் வழி வந்தவையே எனவும் நம்மால் இனங்காணப்பட்டது.[28] ஆதித்திராவிட கலாசாரத்தின் குடியிருப்புகளாகப் பொம்பரிப்பு, கதிரவெளி மட்டுமே பேராசிரியர் இந்திரபாலாவினால் இனங் காணப்பட்டன. 1980இல் ஆனைக்கோட்டை அகழ்வும் கலாநிதிப் பட்டத்திற்காகப் பொ. இரகுபதி சமர்ப்பித்த யாழ் மாவட்டத்தின் ஆதிக் குடியிருப்புகள் - ஒரு தொல்லியல் மேலாய்வு என்ற ஆராய்ச்சிக் கட்டுரையும், வட பகுதியில் ப.புஸ்பரட்ணம், செ.கிருஷ்ணராசா ஆகியோர் மேற்கொண்ட ஆய்வுகளும் இக் கலாசாரம் பற்றி மேலும் சான்றுகளை எடுத்துக் காட்டியுள்ளன. [29]

நிற்க, அநுராதபுரத்தில் 1985, 1989 ஆம் ஆண்டுகளில் தொல்லியல் திணைக்களத்தாலும் [30] 1990- 1992 ஆம் ஆண்டுகளில் புகழ் பூத்த கேம்பிறிஜ் பல்கலைக்கழகத் தொல்லியலாளரான அல்சின் தலைமையில் கொனிங்காம் என்ற ஆய்வாளரினாலும் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன.[31] எண்பதுகளில் பேராசிரியர் கஸ்வெல் தலைமையில் மாந்தையில் அகழ்வுகள் நிகழ்ந்தன.[32] கலாசார முக்கோணப் பிரிவும் பேராதனைப் பல்கலைக்கழகமும் மாத்தளை மாவட்டத்திலுள்ள பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் காணப்பட்ட இபின்கட்டுவவில் அகழ்வை மேற்கொண்டன.[33] ஜேர்மனிய தேசத்தைச் சேர்ந்த தொல்லியல் ஆய்வாளர்கள் 1990களில், பாளி நூல்கள் குறிக்கும் உரோகண இராச்சியத்தின் தலைநகரான மாகம என அழைக்கப்பட்ட இன்றைய திஸ்ஸமகாராமப்பகுதியில் உள்ள அக்குறுகொடவில் ஆய்வுகளை நடாத்தின.[34] இக்காலத்தில்தான் பாரிஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஈழத்தவரான கலாநிதி போப்பியாராய்ச்சி ஈழத்தின் மேற்கு, தென்கிழக்குப் பகுதிகளிலமைந்த துறைமுகங்களிலும் அவற்றை அண்டிய குடியிருப்புகளிலும் பெருங்கற்காலக் கலாசார மையங்களைக் கண்டுபிடித்தார்.[35]

கடந்த கால் நூற்றாண்டாக மேற்கொள்ளப்பட்ட மேலாய்வுகளும், அகழ்வாய்வுகளும் ஈழத்தின் நாகரிகத்தை உருவாக்கி வளர்த்தவர்கள் தென்னிந்தியாவைப் போன்று பெருங்கற்காலக் கலாசாரத்தை உருவாக்கிய மக்கட் கூட்டத்தினரே என்பதை எடுத்துக் காட்டியுள்ளன. இச் சந்தர்ப்பத்தில் பெருங்கற்காலக் கலாசாரம் என்றால் என்ன என்ற கேள்வி எழுகின்றது. பெரிய கற்களைக் கொண்டு ஈமச்சின்னங்களை அமைத்ததால் இது இவ்வாறு பெயர் பெற்றது. எனினும், பெருங்கற்களாலான ஈமச்சின்னங்கள் இன்றி இப்பண்பாட்டின் பிற அமிசங்களான கறுப்பு - சிவப்பு நிற மட்பாண்டங்கள் இரும்பாயுதங்கள் ஆகியன இதன் ஈமச்சின்னங்களான தாழிகள், நீளக்கிடத்தி அடக்கம் செய்தல் ஆகியவற்றில் காணப்பட்டாலும் இவையாவும் பெருங்கற்காலக் கலாசார வட்டத்திற்குள் அடங்கும். இக்கலாசாரத்தில் நான்கு கூறுகள் காணப்பட்டன. அவையாவன மக்கட் குடியிருப்புகள், ஈமச்சின்னங்கள், வயல்கள், குளங்கள் ஆகும். இவையாவும் ஒருங்கிணைந்ததே இக்கலாசாரமாகும். அநுராதபுரம், கந்தரோடை, மாந்தை திஸ்ஸமகாராம ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளிலும், இதனுடன் இணைந்த பெருங்கற்கால ஈமச்சின்னங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளிலிருந்தும் பெறப்பட்ட கலாசாரச் சின்னங்களும் இவை தென்னகப் பெருங்கற்காலத்தின் படர்ச்சியே என்பதை உறுதி செய்துள்ளன. இவ்வாய்வுகள் பாளி நூல்கள் குறிக்கும் யக்ஷர்களும் நாகர்களும் ஈழத்தின் கற்கால மக்கள் என்பதும், இவர்களது கலாசாரத்திற்கு மேலேதான் பெருங்கற்காலக் கலாசாரம் கால் ஊன்றி, ஈழத்தின் வரலாற்றுக்கால நாகரிகமாக மலர்ந்தது என்பதை உறுதி செய்துள்ளன. வரலாற்றுக்காலத்தில் இம் மக்கள்





பௌத்தத்தின் தாயகமாகிய வடஇந்தியாவுடன் கலாசாரரீதியிலும், வாணிபரீதியிலும் கொண்டிருந்த தொடர்பினை உறுதிப்படுத்தும் எச்சங்களாக வட இந்திய சில மட்பாண்ட வகைகள், எலும்பு ஊசிகள், நாணயங்கள் ஆகியனவும் காணப்படுகின்றன. இதனால் இத்தகைய தொடர்புகளைப் (கலாசாரத் தொடர்புகள்) பாளி நூலோர் வடஇந்தியக் குடியேற்றமெனக் கருதி விஜயன் பற்றிய ஐதீகத்தை வளர்த்தனர் என்பதும் உறுதியாயிற்று. இது பற்றி விரிவாக ஆராய்வது பொருத்தமாகின்றது.

விஜயன் கதை ஒரு கட்டுக்கதையென்றாலும் இது சிங்கள மொழி பேசும் ஆரியரது குடியேற்றத்தை, 2000 ஆண்டுகளுக்கு மேலாக வரலாற்று ஏடுகளிலும், பாடசாலைப் புத்தகங்களிலும் முதன்மை பெற்றிருந்த ஒரு குடியேற்றத்தை எடுத்துக் காட்டுகின்றது என்ற நம்பிக்கையின் விளைவாக இக்கதையுடன் தொடர்புடைய குடியேற்ற மையங்களை அகழ்வாய்வுக்கு உட்படுத்தும் முதல் நடவடிக்கையாக 1969இல் அநுராதபுரத்தில் அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.[36] இதுவரை வரலாற்றுக் காலத் தொல்லியற் சின்னங்களுக்கும் அதனுடன் தொடர்புடைய பௌத்தமத வழிபாட்டிடங்களுக்கும் முதன்மை கொடுத்த தொல்லியல் திணைக்களம் இப்போது இந் நாகரிகத்தை உருவாக்கியவர்களின் ஆதிக் குடியிருப்புகளின் தோற்றம் பற்றி அறியத் தீர்க்கமான நடவடிக்கை எடுத்தது ஈழத்துத் தொல்லியல் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும். இலண்டன் பல்கலைக்கழகத் தொல்லியல் ஆய்வு நிறுவனத்தின் தலைவரான கொட்றிங்ரனுடன், கலாநிதி சிரன் தெரணியாகலவும் இணைந்தே இவ்வகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வகழ்வாய்வின் போது ஆதிக் குடியேற்ற வாசிகளின் படிமங்களாகப் பத்து மீற்றர் கனமுள்ள படிமங்கள் காணப்பட்டன. அத்துடன் இதில் மூன்று கலாசாரப் படைகளும் இனங்காணப்பட்டன. அடிமட்டத்தில் முதல் கலாசாரப் படையில், கற்கால மக்களது குறிப்பாக இடைக்கற்கால அல்லது குறுணிக்கற்கால மக்களின் கற்கருவிகள் காணப்பட்டன. இக்கற்காலக் கருவிகள், பாளிநூல்கள் கூறும் அமானுஷ்யர்களான யக்ஷரும் நாகரும் உண்மையிலே மனிதர்கள் என்பதையும் இவர்கள் தான் ஈழத்தின் பூர்வீகக்குடிகளான கற்கால மக்கள் என்பதையும் இவர்கள் தென்னிந்தியாவிலிருந்து ஈழத்தை அடைந்தனர் என்பதையும் உறுதி செய்துள்ளன. இவ்வாய்வு நடைபெற்றபோது இக் கலாசாரத்தின் தோற்றம் கி.மு. 6000 ஆம் ஆண்டெனக் கொள்ளப்பட்டது. ஆனால், அண்மைக்கால ஆய்வுகளும், விஞ்ஞான ரீதியிலான தொல்லியல் காலக் கணிப்புகளும் இக்கலாசாரத்தின் தோற்றத்தைக் கி.மு. 28,000 ஆம் ஆண்டுகளென நிர்ணயித்துள்ளன.[37] இம்மக்கள் பின்னர் இவ்விடத்ததை விட்டு வெளியேறச் சில காலம் அநுராதபுரம் ஜனநடமாற்றமற்ற பகுதியாகவே விளங்கியதை இரண்டாவது படை எடுத்துக் காட்டியுள்ளது. இதன் பின்னர் பெருங்கற்காலக் கலாசாரத்திற்குரிய மக்கள் இங்கு குடியிருந்ததற்கான படிமங்கள் வெளிவந்தன. இது மூன்றாவது கலாசாரப் படையாகும். இது அ.ஆ,

என்ற இரு உப பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நான்காவது படை வரலாற்றுக் காலமாகிய எழுத்தாதாரம், நாகரிக அமிசங்கள் கொண்ட படையாக இனங்காணப்பட்டுள்ளது. மூன்றாவது படையின் ”ஆ” பிரிவு வரலாற்றுக் கால அமிசங்களையும் தன்னோடு அடக்கியிருந்ததால் பெருங்கற்கால மக்களே கற்கால மக்களைப் போலன்றித் தொடர்ச்சியாக இங்கு வாழ்ந்து ஈழத்து நாகரிகத்தை வளர்த்தெடுத்தனர் என்பது உறுதியாயிற்று. இதனால் கி.மு. 400 ஆம் ஆண்டளவில் பெருங்கற்காலக் கலாசாரம் இங்கு தோற்றம் பெற்றிருக்கலாம் எனக் கொள்ளப்பட்டாலும் அநுராதபுரத்தில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளில் கிடைத்த தொல்லியல் எச்சங்களை விஞ்ஞான காலக் கணிப்புக்கு உட்படுத்தியபோது இதன் தோற்றம் கி.மு. 1000/900 ஆக இருக்கலாம் என உறுதி செய்யப்பட்டுள்ளது. கி.மு. 300/250இல் ஆரம்பமாகிய வரலாற்றுக் காலத்தில் வட இந்தியாவுடன் கொண்டிருந்த தொடர்பினை எடுத்துக் காட்டும் ஒரு சில மட்பாண்ட ஓடுகளும், நாணயங்களும், எலும்பினாலான எழுத்தாணி ஆகியனவும் இனங்காணப்பட்டன. பௌத்த மதத்தின் வருகையும் இக்காலத்தில் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறே விமலாபேக்லே தலைமையில் 1970இல் கந்தரோடையில் அகழ்வு மேற்கொள்ளப்பட்டது.[38] இவ்வகழ்வின் போது மூன்று கலாசாரப்படைகள் இனங்காணப்பட்டன. அநுராதபுரத்தைப் போலன்றி இவ்விடத்தின் குடியேற்றம் பெருங்கற்கால மக்களுடனேதான் ஆரம்பமாகின்றது. முதலிரு படைகளும் பெருங்கற்கால மக்களின் கலாசாரத்தையும், இறுதிப்படை வரலாற்றுக்கால மக்கள் எவ்வாறு பெருங்கற்காலக் கலாசார வழிவந்தவர்கள் என்பதையும் இனங்காட்டியுள்ளன. இக் கலாசாரத்திற்கும் தென்னிந்தியக் கலாசாரத்திற்குமிடையே உள்ள ஒற்றுமையை விமலாபேக்லே பின்வருமாறு எடுத்துக் காட்டியுள்ளார். “சில மட்பாண்ட வகைகள், குறிப்பாகக் கறுப்பு- சிவப்பு நிற மட்பாண்டங்கள் தென்னிந்தியாவில் இரும்புக் காலத்திற்குரிய இவ்வகை மட்பாண்ட வகைகளை ஒத்ததாகக் காணப்படுகின்றன. இதனால் இருபகுதி மக்களும் ஒரே கலாசாரத்திலிருந்து வந்தவர்கள் அல்லது ஆகக்குறைந்த தொடர்பினை வைத்திருந்தவர்கள்” எனலாம். இதே குழுவினர் பொம்பரிப்பிலுள்ள தாழிக்காட்டிலும் அகழ்வினை மேற்கொண்டிருந்தனர்.[39] 1921இல் கண்டுபிடிக்கப்பட்ட இவ்விடம் பின்பு 1956இல் தொல் பொருள் திணைக்களத்தினால் அகழ்வாய்வு செய்யப்பட்டு மேலும் பல தாழிகள் ஆராயப்பட்டன இத்தாழிகளின் உயரம் 3 அடியாகும். இவற்றில் இறந்தவர்களது மண்டையோடுகளும், பிறமுக்கிய எலும்புகளும் மட்பாண்டங்களில் அடக்கம் செய்யப்பட்டிருந்ததோடு, இவர்கள் பயன்படுத்திய பொருட்கள் ஆகியனவும் இவற்றுடன் சேர்த்துப் புதைக்கப் பட்டிருந்தன. எல்லாமாக 8000க்கு மேற்பட்ட தாழிகள் இத்தாழிக்காட்டில் அடக்கஞ்செய்யப்பட்டுள்ளன. இவற்றைக் கொண்டு





இத்தாழிக்காட்டில் 10,000 - 12,000 வரையிலான மக்கட் கூட்டம் இங்கு வாழ்ந்திருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது.

அநுராதபுரத்தில் 1980 களிலும் 1990களிலும் அகழ்வுகள் தொடரப்பட்டன.[40] 1991-92 ஆம் ஆண்டுகளில் கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தின் புகழ்பூத்த தொல்லியலாளரான பேராசிரியர் அல்சின் தலைமையில் கொனிங்காமின் அநுசரணையுடன் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன.[41] 1980களில் மாந்தையில் ஜோன் காஸ்வெல் தலைமையில் அகழ்வு நடைபெற்ற போது பெருங்கற்கால மக்களுக்குரிய கறுப்பு-சிவப்பு நிற மட்பாண்டங்களின் பாவனை கண்டுபிடிக்கப்பட்டாலுங்கூட, இவ்வகழ்வாய்வு அறிக்கை இன்னும் விரிவான முறையில் கிடைக்கவில்லை.[42] இதற்கு முன்னர் 1954இல் இதே இடத்தில் தொல்லியல் திணைக்களத்தைச் சேர்ந்த சண்முகநாதன் அகழ்வாய்வை மேற்கொண்ட போது ஒரு மனித எலும்புக் கூடு கண்டுபிடிக்கப்பட்டது.[43] இது பெருங்கற்கால ஈமச் சின்ன வகைகளில் ஒன்றாகிய நீளக்கிடத்திக் குழிகளில் அடக்கஞ் செய்தல் வகையைச் சார்ந்ததாகும். இவ்விடத்தில்தான் புகழ்பூத்த மாந்தைத் துறைமுகம் அமைந்திருந்தது. பாளி நூல்கள் மாதோட்ட/ மாதித்த என இதனை அழைக்கின்றன. கி.பி. 12 ஆம் நூற்றாண்டுவரை வெளியுலகத் தொடர்புடைய புகழ்பூத்த ஈழத்தின் துறைமுகமாக இது விளங்கியது குறிப்பிடத்தக்கது.[44] இவ்வாறே வடபகுதியிலுள்ள துறைமுகமாக யம்புகோள பட்டினம் அமைந்திருந்ததைப் பாளிநூல்கள் கூறுகின்றன. இது விட்டுச் சென்ற தொல்லியல் எச்சங்கள் காணப்படாத நிலையில் காங்கேசன்துறை முகத்திற்கும் மாதகலுக்கும் இடையே இத்துறைமுகம் அமைந்திருக் கலாம் என யூகிக்கப்படுகின்றது.

நிற்க, 1980 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினர் ஆனைக்கோட்டையில் அகழ்வாய்வை மேற்கொண்டிருந்த போது இரு எலும்புக் கூடுகள் இனங்காணப்பட்டன.[45] இதனுடன் கறுத்த கல்லில் அமைந்த ஒரு முத்திரையும் காணப்பட்டது. மாந்தை, ஆனைக்கோட்டை, ஏன் இன்றைய வடமாகாணம் முழுவதும் பாளி நூல்கள் குறிக்கும் பண்டைய நாகதீபப்பகுதி என்பதும் ஈண்டு நினைவுகூரப்பாலது. தொல்லியல் சான்றுகள் இப்பகுதியில் அமானுஷ்யர்களான நாகர்கள் வாழ்ந்தார்கள் எனப் பாளிநூல்கள் கூறுவது ஒரு கற்பனையே என்பதை உணர்த்தியுள்ளன. அநுராதபுரம், கந்தரோடை, மாந்தை போன்று தென்கிழக்கிலமைந்த ஆரிய குடியேற்றத்தின் மையம் எனப்பட்ட அக்குறுகொடவில் (பண்டைய மகாகமவும், தற்போதைய திஸ்ஸமகாராமவும்) 90களில் ஜேர்மனிய தொல்லியல் குழுவினர் மேற்கொண்ட ஆய்வும் இதுவும் ஆரம்பத்தில் பெருங்கற்கால மக்களின் குடியிருப்பு மையமாக விளங்கியதை உறுதிப்படுத்தியுள்ளது.[46] இவ்வாறு சிங்கள மக்களின் மூதாதையினரால் ஆரம்பிக்கப்பட்டதாக நம்பப்படும் குடியேற்ற மையங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள் வடஇந்தியாவிலன்றித் தென்னிந்தியாலிருந்தே ஈழத்தின் நாகரிககர்த்தாக்களான தற்கால

சிங்கள-தமிழ் மக்களின் மூதாதையினர் வந்ததை உறுதிப்படுத்தியுள்ளன. பாளி நூல்கள் வரண்ட வலயப் பகுதியில் ஏற்பட்டிருந்த குடியேற்றங்கள் பற்றியே கூறுகின்றன.

ஆனால் நாட்டின் மேற்கு, தெற்குப்பகுதிகளிலுள்ள நதிகளையும் இவற்றின் கழிமுகத்திலமைந்த துறைமுகங்களையும் மையமாக வைத்துக் குடியேற்றங்கள் காணப்பட்டதை இப்பகுதியில் ஆய்வுகளை மேற்கொண்ட கலாநிதி போப்பியாராய்ச்சி உறுதிப்படுத்தியுள்ளார்.[47] இவரது ஆய்வின் மூலமாகத் தெதுறு ஓயா நதியிலுள்ள சலாவத்தோட்ட (சிலாபம்), களனி கங்கையிலுள்ள வத்தளை, களு கங்கையிலுள்ள கலாதித்த (களுத்துறை), பெந்தோட்ட கங்கையிலுள்ள பீமதித்த (பென்தோட்டை), ஜின் கங்கையிலுள்ள ஜிம்மதித்த (ஜின்தோட்ட), பொல் வத்த கங்கையிலுள்ள மகாவலுகம (வெலிகம), நில்வல கங்கையிலுள்ள (நிலாவலதித்த), வளவ கங்கையிலுள்ள கோதபவட்ட (கொடவாயா) ஆகிய துறைமுகங்களில் வரலாற்றுக் காலத்திலும், (சில இடங்களில் வரலாற்றுதய காலத்திலும்) பரவி இருந்த பெருங்கற்காலக் கலாசாரத்தின் எச்சங்கள் இனங்காணப்பட்டன. கறுப்பு-சிவப்பு நிறமட்பாண்டங்கள் மட்டுமன்றி இவற்றுடன் இணைந்த இக் கலாசாரத்திற்கு உரிய பல்வகைக்கற்களால் ஆன மணிகள், பிராமி எழுத்துப் பொறித்த நாணயங்கள், முத்திரைகள் ஆகியனவும் கிடைத்துள்ளன. இத்தகைய போக்கிலேதான் தென்னிந்தியாவிலும், அதாவது ஆறுகளின் கழிமுகங்களில்தான் துறைமுகங்கள் காணப்பட்டதை எடுத்துக் காட்டிய கலாநிதி போப்பியாராய்ச்சி, ஈழத்திற் கிடைத்த பலவகையான மணிவகைகள் இப்பகுதியிருந்தே ஈழத்தை இவை அடைந்ததை உறுதி செய்துள்ளன எனவும் எடுத்துக் காட்டியுள்ளார். பாளி நூல்கள் விஜயன் வரமுன்னர் இப்பகுதியில் காணப்பட்ட நாகர் பற்றியும், இவர்களுக்கும் வடபகுதியில் காணப்பட்ட நாகர்களுக்குமிடையே உள்ள உறவு முறை பற்றியும் குறிப்பிடுவதும் ஈண்டு கவனிக்கத்தக்கது. இத்தகைய குறிப்புகள் வடபகுதி போன்று இப்பகுதியும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே மனித நடமாட்டத்திற்குரிய பகுதியாக விளங்கி இருக்கலாம் என்பதை எடுத்துக் காட்டுகின்றன. இதை உறுதிப்படுத்துவதாக அமைவதுதான் களனி கங்கைப் பகுதியிலுள்ள பிலாப்பிற்றியாவில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் போது கிடைத்த வரலாற்றுதய காலத்திற்குரிய பெருங்கற்கால மட்பாண்டங்களாகும்.[48] இவ்வாறே ஈழத்தின் தென்கிழக்கே உள்ள பம்பரகஸ்தலாவ, குடும்பிகல, பனமமொதரகல, புண்டலபுதிராஜவெல ஆகிய இடங்களில் 1971 இல் தாய்லாந்தைச் சேர்ந்த பேராசிரியர் சொல்கெய்மும், கலாநிதி சிரன்தெரணியாகலவும் இணைந்தே மேற்கொண்ட மேலாய்வின் போது கறுப்பு-சிவப்பு நிறமட்பாண்டங்கள் இனங்காணப்பட்டன.[49] இப்பகுதி விஜயனுடைய சகாக்களால் ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றப் பகுதிகளில் ஒன்று என ஊகிக்கப்படுவதும் ஈண்டு நினைவுகூரப்பாலது.





இதுவரை மக்கள் வாழ்ந்த குடியிருப்புகளையும் சில பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் காணப்பட்ட இடங்களையும் ஆராய்ந்தோம் *(படம் - 1)*. ஏற்கனவே பொம்பரிப்பிற் கிடைத்த தாழி அடக்கங்கள் பற்றிக் குறிப்பிட்டு இருந்தோம் *(படம் -2-4)*. இத்தகைய அடக்க முறையின் எச்சங்கள் தெக்கம், கதிர்காமம் (புகழ்பூத்த முருகனாலயம் இருக்கும் இடம்) ஆகிய இடங்களிலும் உள.[50] நீளக்கிடத்திக் குழிகளில் அடக்கஞ் செய்தலுக்கான சான்றுகள் மாந்தை, ஆனைக்கோட்டை ஆகிய இடங்களில் வெளிவந்துள்ளன. *(படம் - 5)*. இவ்வகைகளைவிட, பெருங்கற்காலக் கலாசாரத்திற்குரிய பிற ஈமச்சின்ன வகைகளான கல்வட்டங்கள், கல்லறைகள் ஆகியனவும் காணப்படுகின்றன. கல்வட்டங்கள் வவுனியா மாவட்டத்திலுள்ள மாமடுவவில் உள. இத்தகைய கல்வட்டங்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கதிரவெளியிலும் காணப்படுகின்றன. கல்லறைகளின் எச்சங்கள் வவுனியா மாவட்டத்திலுள்ள மாமடுவ, அநுராதபுர மாவட்டத்திலுள்ள திவுல்வேவ, ரம்பவேவ, கொக்கபே, குருநாகல் மாவட்டத்திலுள்ள பின்வேவ, குருகல்கின்ன, மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கதிரவெளி, மாத்தளை மாவட்டத்திலுள்ள இபின்கட்டுவ போன்ற இடங்களில் உள. இவற்றுள் திவுல்வேவக் கல்லறைகளில் தொல்லியல் திணைக்களத்துடன் இணைந்து நம்மால் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இபின்கட்டுவவிலுள்ள கல்லறைகளில் பேராதனைப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறையினரும் கலாசார முக்கோணத்தினரும் இணைந்து அகழ்வை மேற்கொண்டுள்ளனர். இவ்வகழ்வின் போது கல்லறைகளில் தாழிகளை அடக்கஞ் செய்வதற்கான தடயங்கள் மட்டுமன்றிப் பெரிய கல்லறைகளைச் சுற்றிச் சிறிய கல்லறைகளும் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றில் கிடைத்த சான்றுகளை விஞ்ஞானக் காலக்கணிப்புக்கு உட்படுத்திய போது இவற்றின் தோற்றம் கி.மு. 700 என இனங்காணப்பட்டுள்ளது. மேற்கூறிய சின்னங்கள் ஈழத்தின் பல பகுதிகளிலும் காணப்படுகின்றன. விரிவஞ்சி இவற்றின் விபரம் இங்கே தவிர்க்கப்படுகின்றது. எனவே ஒட்டு மொத்தமாக நோக்கும் போது நாட்டின் கரையோரங்கள், வரண்ட- ஈரவலயப் பிரதேசங்கள், மூலப் பொருட்கள் - கனிவளங்கள் காணப்படும் இடங்கள் ஆகியவற்றுள் இப்பண்பாடு செறிந்து காணப்பட்டது தெளிவாகின்றது. கி.மு. 900 – 500 வரை இவற்றின் செறிவு குறைந்தும், கி.மு. 500க்குப் பின்னர்தான் இவற்றின் செறிவு அதிகரித்தும் காணப்படுவதாகவும் கருதப்படுகின்றது.

இனி, இவ்ஈமச்சின்னங்களுக்கும் தென்னிந்திய ஈமச்சின்னங்களுக்கும் இடையே இழைவிட்டோடும் ஒற்றுமையை நோக்குவோம். ஈழத்திலுள்ள ஈமச்சின்ன வகையான தாழிகள் தமிழகத்திலே உள்ள தாழிகளை ஒத்ததாகக் காணப்படுகின்றன. ஓரளவுக்கு விரிவாக அகழ்வாராய்ச்சி செய்யப்பட்ட பொம்பரிப்பிற் கிடைத்த தாழிகள் பாண்டி நாட்டிலுள்ள தாம்ரவர்ணி நதிதீரத்தில் அமைந்த ஆதிச்சநல்லூர்த் தாழிக் காட்டில் உள்ள தாழிகளை ஒத்துக்

காணப்படுகின்றன. உண்மையிலே தாழி அடக்கங்கள் விரவிக் காணப்படும் இடங்களாக வைகை தாம்ரவர்ணி ஆறுகளுக்கிடையே அமைந்துள்ள மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்கள் ஆகியன காணப்படுகின்றன. இப்பிரதேசங்களிலும் நீளக்கிடத்திக் குழிகளில் அடக்கஞ்செய்தல் போன்ற வழக்கங்கள் காணப்படுகின்றன. காரணம் மணற்பகுதிகளில் இத்தகைய அடக்கங்கள் மேற்கொள்ளப்படுவது இயல்பே. இதனால் ஆனைக்கோட்டை, திருக்கேதீஸ்வரம் (மாந்தை) ஆகிய இடங்களிற் கிடைத்த நீளக்கிடத்தி அடக்கஞ் செய்ததற்கான எச்சங்கள் தமிழகத்திலிருந்தே இங்கே இவை பரவியதையே எடுத்துக் காட்டுகின்றன எனலாம். ஈழத்திற் காணப்படும் கல்லறைகளை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவற்றுட் சில ஒரு மீற்றருக்குக் குறைவாகவும், இன்னுஞ் சில ஒரு மீற்றருக்கும் இரண்டு மீற்றருக்கும் இடைப்பட்டனவாகவும், மேலுஞ் சில இரண்டு மீற்றருக்கு மேற்பட்டனவாகவும் உள. இதே போன்ற கல்லறைகள் தமிழகத்தில் புதுக்கோட்டையின் வடக்கே ஆந்திரப் பிரதேசத்திலுள்ள சித்தூர்வரை காணப்படுகின்றன. கல்வட்டங்கள் அல்லது தாழிகளை உடைய கல்லறைகள் விதந்து காணப்படும் இடங்களாகத் தமிழகத்திலுள்ள சேலம் மாவட்டம், கேரளம் ஆகிய இடங்களும் விளங்குகின்றன. பதவிகம்பொல, கதிரவெளி போன்ற இடங்களில் காணப்படும் கல்மேசைகள் கேரள மாநிலத்திலுள்ள இத்தகைய ஈமச்சின்னங்களையும் நினைவூட்டுகின்றன.

ஈமச்சின்னங்கள் மட்டுமன்றி இவற்றிலே கிடைத்த மட்பாண்டங்களும் தென்னகத்திலிருந்தே, குறிப்பாகத் தமிழகத்திலிருந்தே இவை இங்கு பரவியதை எடுத்துக்காட்டுகின்றன. கறுப்பு-சிவப்பு நிற மட்பாண்டங்கள் பல்வேறு தோற்றமுடையதாகக் காணப்படுகின்றன. இவற்றுள் கிண்ணங்களும் வட்டில்களும் பிரதானமானவையாகும். இத்தகைய மட்பாண்டங்கள் தமிழகத்திலுள்ள ஆதிச்சநல்லூர், அமிர்தமங்கலம், சானூர், அரிக்கமேடு, திருக்காம்புலியூர், கேரளமாநிலத்திலுள்ள போர்க்களம், கர்நாடக மாநிலத்திலுள்ள பிரமகிரி ஆகிய இடங்களிற் கண்டெடுக் கப்பட்ட மட்பாண்டங்களைத் தோற்றமைப்பில் நினைவூட்டுகின்றன. இத்தகைய ஒற்றுமை இரு பிரதேசங்களிலும் கண்டெடுக்கப்பட்ட பானைகள், கூம்பு வடிவான மூடிகள், தாங்கிகள் ஆகியவற்றுக்குமிடையே காணப்படுகின்றது. இவற்றில் காணப்படும் குறியீடுகள் (Graffiti Symbols) தென்னகத்திலுள்ள பெருங்கற்கால மட்பாண்டங்களிலுள்ள குறியீடுகளை ஒத்துக் காணப்படுகின்றன. இத்தகைய குறியீடுகள் வரலாற்றுக் காலத்திற்குரிய ஈழத்தின் ஆதிப்பிராமிக் கல்வெட்டுகளில் மட்டுமன்றி நாணயங்களிலும் காணப்படுவதானது பெருங்கற்கால மக்களே ஈழத்தின் வரலாற்றுக் கால நாகரிகத்தையும் வளர்த்தெடுத்தவர்கள் என்பது உறுதியாகின்றது. மேற்கூறிய பின்னணியில், அதாவது பாளிநூல்கள் கூறும் வடஇந்தியக் குடியேற்றங்கள் நடந்ததாகக் கருதப்படும் இடங்களில் மட்டுமன்றி அவற்றுக்கு அப்பாலும் காணப்படும்





தொல்லியல் சின்னங்கள் தென்னிந்தியாவிலிருந்தே, குறிப்பாகத் தமிழகத்திலிருந்தே ஈழத்தின் நாகரிகத்தை உருவாக்கிய மக்கட் கூட்டத்தினர் இங்கு குடியேறியதை எடுத்துக் காட்டியுள்ளன.

மக்கட் கூட்டத்தினர் இவ்வாறு பெருந் தொகையாக இடம்பெயர்ந்து குடியேறியதற்குப் பதிலாக, இக் கலாசார அமிசங்கள் இங்கு சிலரால் எடுத்துவரப்படக் கற்கால மக்களே இக்கலாசாரத்தை வளர்த்தெடுத்திருக்கலாம் எனவும் சிலர் கருதுகின்றனர். இது தவறான கணிப்பீடாகும். காரணம் தென்னிந்தியாவிலோ அன்றி ஈழத்திலோ மேற்கூறிய கலாசார அமிசங்களை உள்வாங்கிப் பெருங்கற்காலக் கலாசாரத்தை வளர்த்தெடுத்ததற்கான கட்டமைப்பினைக் கற்கால சமுதாயம் கொண்டிருக்கவில்லை. அவர்கள் பெருங்கற்கால மக்களுடன் வாழ்ந்ததைத் தமிழகத்தில் மட்டுமன்றி ஈழத்திலும் பெருங்கற்காலக் கலாசார மையங்களில் கிடைத்துள்ள இவர்களின் கற்காலக் கருவிகள் உறுதிப் படுத்தினாலும் கூடப் பெருங்கற்காலக் கலாசாரத்தில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துமளவுக்கு இவர்களின் கலாசாரம் வளர்ச்சி பெறவில்லை. அத்துடன் பெருங்கற்காலக் கலாசார மையங்களிற் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகள், மரபணுவியல், மானிடவியல், சமூகவியல், சாசனவியல், மொழியியல் சான்றுகள் என்பன இக்கலாசாரத்தின் மூலகர்த்தாக்கள் தென்னிந்தியத் தமிழரே என்பதை உறுதி செய்துள்ளன. இது பற்றிச் சுசந்தா குணதிலகா பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். [51] Sinhalisation as being essentially a cultural process associated with Buddhism சிங்கள மயமாக்கம் என்பது பௌத்தத்துடன் ஒன்றிணைந்த கலாசார வளர்ச்சியியே ஆகும். ஈழத்தின் ஆதிக் குடியேற்றம் தென்னிந்தியப் பெருங்கற்காலக் கலாசாரத்தின் படர்ச்சியே என்பதைப் பேராதனைப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறைப் பேராசிரியர் சுதர்சன் செனிவரத்தினா 1996 இல் வெளியிட்ட கட்டுரையில் பின்வருமாறு உறுதிப்படுத்தியிருப்பது அவதானிக்கத்தக்கது. [52]

> “வரலாற்றுதய காலத்திற்குரிய குடியிருப்புகள், ஈமச்சின்னங்கள் காணப்படும் மையங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வானது தென்னிந்திய இரும்புக் கால கலாசாரத்தின் தொழில்நுட்ப, கலாசார அமிசங்களின் தென் எல்லையாக ஈழம் விளங்கியதை எடுத்துக் காட்டுகின்றன. இவ்விடங்களில் காணப்படும் கருவிகள் இங்கே நெல்லோடு கூடிய விவசாயம், மிருகங்களின் பயன்பாடு, குதிரையின் உபயோகம், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இரும்பு செம்பு ஆகியவற்றில் ஆயுதங்களைச் செய்தல், பல்வேறு கல்லின வகைகளில் மணிகளை உற்புத்தி செய்தல், கிராமங்களை அமைத்தல், கறுப்பு-சிவப்பு நிற மட்பாண்டங்கள் ஆகியனவற்றின் உற்பத்தி, இம்மட்பாண்டங்களில் காணப்படும் குறியீடுகள் ஆகியவை தென்னிந்தியாவிலிருந்துதான் ஈழத்திற்கு இவை

அறிமுகமாயின என்பதை உறுதிசெய்கின்றன. விஞ்ஞான காலக் கணிப்பீடு, இத்தகைய தொழில் நுட்பக் கலாசார அமிசங்களின் தாயகம் ஆகியவை ஈழத்தின் ஆதிக்குடியேற்றங்கள் பற்றிப் பாளி நூல்கள் தரும் தகவல்களை உறுதிப்படுத்தவில்லை.. .. .. அநுராதபுரம் போன்ற வரலாற்றுதய கால மையப் பீடங்களில் கிடைத்த விலங்கியல், தாவரவியல் சான்றுகள் இம்மக்கள் வேட்டையாடுதல், மந்தை வளர்ப்புடன் நெல் உற்பத்தியிலும் ஈடுபட்டதை எடுத்துக் காட்டுகின்றன. கள ஆய்வுகள் இத்தகைய சிறுசிறுகுடியேற்றங்கள் கரையோரப்பகுதிகள், நதியோரங்களிலுள்ள வளமான இடங்கள், கனிப் பொருட்கள் காணப்படும் இடங்கள் ஆகியவற்றில் பரந்திருந்ததை உறுதிசெய்கின்றன. இத்தகைய ஆதி இரும்புக் காலக் கலாசார அமிசங்கள் வரலாற்றுதயகாலம் வரலாற்றுக் காலமாக மலரும் வரை மட்டுமன்றி ஆரம்பகால வரலாற்றுக் காலம் வரை நீடித்தன. வரலாற்றுதயகாலக் குடியேற்ற மையங்கள், அவற்றுடன் இணைந்த ஈமச்சின்னங்கள் ஆகியவற்றுடன் நெருங்கிக் காணப்படும் பழைய பிராமிக் கல்வெட்டுகளைத் தாங்கி நிற்கும் குகைகள், வரலாற்றுதய கால மக்களின் சந்ததியினரே புதிய கலாசாரப் படர்க்கைக் காலம் வரை நீடித்திருந்ததை எடுத்துக் காட்டுகின்றன.

இதனால் ஈழத்தின ஆதிநாகரிக கர்த்தாக்களே வரலாற்றுக்கால நாகரிகத்தையும் வளர்த்தெடுத்தவர்கள் என்பதும் இம்மக்கள் மத்தியில் தான் பௌத்த மதமும் பரவியதென்பதும் தெளிவாகின்றது. பௌத்த மதத்திற்கு அளிக்கப்பட்ட தானங்களை எடுத்தியம்பும் பிராமிக் கல்வெட்டுகள் இக்கலாசார மையங்களை அண்டிக் காணப்படுவதும், பெருங்கற்காலக் கலாசாரத்திற்குரிய பானை ஓடுகளில் காணப்படும் குறியீகள் இப்பிராமிக் கல்வெட்டுகளில் காணப்படுவதும் பெருங்கற்கால மக்களே பௌத்தத்தை அநுசரித்தமையை உறுதி செய்கின்றது.

## மானிடவியல், மரபணுவியல், சமூகவியல் — சான்றுகள்.

### IV

பெருங்கற்காலக் கலாசார மையங்களில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளை ஆராய்ந்த அறிஞர்களும் இம்மக்கட் கூட்டத்தினர் தென்னிந்தியாவிலிருந்து இங்கு புலம்பெயர்ந்துள்ளனர் என எடுத்துக் காட்டியுள்ளனர். பொம்பரிப்பிற் கிடைத்த எலும்புகளை ஆராய்ந்த மானிடவியலாளர்கள் தென்னிந்தியப் பெருங்கற்காலக் குடியிருப்பு களில் காணப்படும் எலும்புகளை இவை ஒத்தவையென்றும், இத்தகைய மக்கட் கூட்டத்தினரைத் தவிர்த்து ஒரு புதிய மக்கட் கூட்டத்தினர் இங்கு கால்கொள்ளவில்லை என்பதையும் எடுத்துக் காட்டியுள்ளனர்.[53] இவ்வாறே மாந்தையில் கிடைத்த எலும்புக் கூட்டினை ஆராய்ந்த பேராசிரியர்களான சண்முகம், ஜெயவர்த்தனா





ஆகியோர் இவை தென்னிந்திய வர்க்கத்தைச் சார்ந்தவை என எடுத்துக் காட்டியுள்ளனர்.[54] ஆனைக்கோட்டையில் கிடைத்த எலும்புக் கூடுகள் இந்திய இராணுவ நடவடிக்கைகளால் மறைந்துவிட்டாலும் கூட இவை அடக்கஞ் செய்யப்பட்ட பாங்கிலன்றித் தோற்ற அமைப்பிலும் மாந்தையில் கிடைத்த எலும்புக் கூட்டை ஒத்துக் காணப்படுவது கவனிக்கத்தக்கது.[55] இது மட்டுமன்றி இவ்வெலும்புக் கூட்டில் காணப்படும் இருவரிவடிவ அமைப்பில் உள்ள முத்திரையும் இவற்றின் திராவிடத்தன்மையை உறுதி செய்கின்றது. இருவரி வாசகங்களில் முதல்வரி வடிவம் பெருங்கற்கால மட்பாண்டங்களில் காணப்படும் சித்திர எழுத்து முறையையும், இரண்டாவது வரிவடிவம் பிராமி வரிவடிவ எழுத்து முறையையும் பிரதிபலிக்கின்றன. இதனால் பெருங்கற்காலக் கலாசார மக்களே சித்திர எழுத்து முறையிலிருந்து பிராமி வரிவடிவமுறையைக் கைக்கொண்டனர் என்பதும் உறுதியாகின்றது. இவற்றைவிட இம்முத்திரையிலுள்ள வாசகமும் " கோவேந்த" "கோவேத" அல்லது "கோவேந்தம்", "கோவேதன்" எனப் பலவாறு வாசிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. அரசன் அல்லது தலைவன் என்பதே இதன் பொருளாகும்.[56]

தொல்லியல், மானிட இயல் ரீதியில் மட்டுமன்றி மரபணுஆய்வு மூலமும் அறிஞர்கள் ஈழத்துக் குடியேற்ற வாசிகளின், நாகரிக கர்த்தாக்களின் தாயகத்தை இனங்காண முயற்சித்துள்ளனர். இவர்களில் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த மானிடவியலாளரான கேர்க் முதன்மையானவர்.[57] விஜயனது மூதாதையினர் புலம்பெயர்ந்து வந்த இடங்கள் என நம்பப்படும் வடமேற்கு, வடகிழக்கு இந்தியாவில் இன்று வாழும் மக்கட் கூட்டத்தினரின் இரத்தத்தையும் தற்காலச் சிங்கள மக்களினது இரத்தத்தையும் ஒப்பிட்டு ஆராய்ந்த போது வடமேற்கு இந்திய மக்கட் கூட்டத்தினரின் இரத்தத்திற்கும் தற்காலச் சிங்கள மக்களது இரத்தத்திற்கும் எதுவித தொடர்பும் இல்லை என்றும், சிங்கள மக்களது இரத்தம் வடகிழக்கே வங்காளிகளதும், விசேடமாக தென்னிந்தியத் தமிழரதும் இரத்தத்துடன் ஒத்துக் காணப்பட்டதையும் விளக்கியுள்ளார். வங்காளிகள் ஆரிய கலாசாரத்திற்கு அப்பாற்பட்டவர்கள் என்பதும் ஈண்டு நினைவுகூரற்பாலது. நம்நாட்டவரான டாக்டர் விஜயசுந்தரவும் இவ்வாய்வில் ஈடுபட்டுச் சிங்கள- தமிழ் மக்களின் இரத்த உறவிலுள்ள ஒற்றுமையை எடுத்துக் காட்டியுள்ளார்.[58] மரபணு ஆய்வு மட்டுமன்றிச் சமூகவியலாளர்கள் மேற்கொண்ட ஆய்வுகளும் இத்தகைய ஒற்றுமையை மேலும் வலியுறுத்தியுள்ளன. இதற்குச் சான்று பகருவனவே உறவுமுறைப் பெயர்களாகும். ஒரு சமூகம் எத்தகைய செல்வாக்குக்கு உட்பட்டுத் தனது தனித்துவத்தை இழந்தாலுங்கூட அதில் வழக்கிலிருக்கும் உறவு முறைப் பெயர்கள் ஒரு போதும் மாற்றமடையாதது மட்டுமன்றி, அச்சமூகத்தின் உற்பத்தி முறையையும் பொருளாதாரப் பாரம்பரியத்தையும் எடுத்துக்காட்டு வதாயமையும்.[59] அப்பா, அம்மா, அக்கா, மாமா போன்ற பெயர்கள் இரு சமூகத்தினரிடமும் காணப்படும் பெயர்களாகும். அப்பாவின் மூத்த சகோதரனைப் பெரியப்பா எனவும்,

இளைய சகோதரனைச் சித்தப்பா எனவும் அழைக்கும் வழக்கு தமிழில் உண்டு. இதனை ஒத்த பதம்தான் சிங்கள வழக்காற்றில் உள்ள மகா அப்பா, குட அப்பா போன்றனவாகும். விரிவஞ்சி, ஏனைய பெயர்கள் தவிர்க்கப்படுகின்றன.

சிங்கள-தமிழ்ச் சமூக கலாசாரப் பாரம்பரியத்தைச் சமூக வியல் கண்ணோட்டத்தில் ஆராய்ந்த அறிஞர்கள் வட இந்தியாவிலிருந்து ஆதிக் குடியேற்றம் ஏற்பட்டிருந்தால் இங்கு நிலவிய சாதி அமைப்பையும் இந்த மக்கட் கூட்டத்தினர் கொண்டுவந்திருக்கவேண்டும் என வாதிட்டு, அதற்கான சான்றுகள் இங்கு காணப்படவில்லை எனவும் எடுத்துக் காட்டியுள்ளனர். வட இந்தியச் சமூகம் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என நான்கு பிரிவுகளாக அல்லது வர்ணங்களாகக் காணப்பட்டது. ஈழத்தில் அத்தகைய வழக்கு இருந்ததற்கான சான்றுகள் காணப்படவில்லை. பிராமணர்கள் பற்றி இலக்கியங்களிலும் பழைய பிராமிக்கல்வெட்டுகளிலும் சான்றுகள் காணப்படுகின்றன. ஆனால், வட இந்தியாவைப் போல் இவர்கள் சமூகத்தில்உயர்ந்தவர்களாக, வலுவான ஒரு பிரிவினராக ஈழத்தில் விளங்கியதற்கான சான்றுகள் இல்லை. அரண்மனையில் வைத்தியர்களாக, அரசரின் ஆலோசகர்களாக விளங்கியது மட்டுமன்றி வேதங்களில் விதிக்கப்பட்ட தமது கடமைகளுக்கு அப்பால் வேறு தொழில்களில் ஈடுபட்டதையும் பிராமிக் கல்வெட்டுகள் எடுத்துக்காட்டுகின்றன. சத்திரியர் பற்றியும், வைசியர் பற்றியும் இலக்கியங்களில் ஒரு சில இடங்களில் குறிப்புகள் காணப்பட்டாலும் இவர்களை ஒரு சமூகப் பிரிவினர் என்ற ரீதியில் இக்குறிப்புகள் எடுத்துக் காட்டவில்லை. சூத்திரர் பற்றிக் குறிப்புகளே இல்லை.[60] இதனால் தமிழகச் சமூக, சாதி அமைப்பை ஒத்த அமைப்பே இன்று சிங்கள மொழி பேசும் மக்களது அமைப்பு என்பதைச் சமூகவியலாளர்கள் இனங் கண்டுள்ளனர். திராவிடச் சமூக அமைப்பில் விவசாயிகள் முன்னிலை பெற்றிருந்தது போன்றே சிங்கள சமூக அமைப்பிலும் விவசாயிகள் முன்னிலை பெற்றிருந்தனர். விவசாயிகளைச் சுற்றித் தொழிலடிப்படையில் ஏனைய பிரிவினரும் செயலாற்றியதைச் சிங்கள-தமிழ் சமூகங்களிடையே நிலவும் சாதி முறை எடுத்துக் காட்டுகின்றது.[61] சிங்கள-தமிழ்ச் சமூகங்கள் ஆதியில் தாய்வழிச் சமூதாய மரபில் உருவாகின என்பதும், பின்னரே தந்தை வழிச் சமூதாய மரபில் உருவாகின என்பதும், பின்னர் தான் தந்தை வழிச் சமுதாய மரபிற்கு மாறினர் என்பதும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.[62] ஈழத்துப் பிராமிக்கல்வெட்டுகளில் காணப்படும் "மருகன்" என்ற பதம் இன்றும் கேரள மாநிலத்தில் வழக்கிலிருக்கும் தாய்வழிச் சமூதாய அமைப்பான மருமக்கட் தாய முறையின் எச்சமாக விளங்குகின்றது. மருமகன் என்ற பதம் திருமண உறவுகளில் இரு சமூகங்களும் பேணிய பாரம்பரிய வழக்குகளையும் எடுத்துக் காட்டுவதாகவும் உள்ளது.





பௌத்த மதத்தைச் சிங்கள மக்களின் மூதாதையினர் தழுவமுன்பு தமிழகத்தைப் போன்ற சமய நம்பிக்கைகளையே கடைப்பிடித்து இருந்தனர் என்பதை இன்று சிங்கள பௌத்தர்கள் மத்தியில் நாட்டார் வழிபாடாக (Folk Religion) விளங்கும் சங்க கால நாநிலக் கடவுட் கோட்பாடு விளங்குகின்றது என்பதை ஜெர்மனிய அறிஞரான பெச்சாட் விளக்கியுள்ளார்.[63] தொல்காப்பியம் [64] இத்தகைய வழக்கைப் பின்வருமாறு கூறுகின்றது:

மாயோன் மேய காடுறை யுலகமுஞ்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமணை லுலகமும்
முல்லை குறிஞ்சி மருத, நெய்த லெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே

*(தொல்.பொருள். அகத். சூ. 5)*

இதில் சங்க காலத்தில் முதன்மை பெற்ற தெய்வங்களாக மாயோனும் சேயோனும் விளங்க, இவர்களுக்கு அடுத்தாற் போல் வேந்தனும், வருணனும் காணப்படுகின்றனர். இந்த வேந்தன் வருணன் ஆகிய தெய்வங்கள்கூடத் தமிழகப் பழைய தெய்வங்கள் மறைய அவற்றிடத்தில் வட இந்திய கலாசாரத்தின் செல்வாக்கால் இவ்வாறு இடம்பெற்றுள்ளன எனக் கருதுவாருமுளர். எவ்வாறாயினும், நான்கு நிலத் தெய்வக் கோட்பாடே பௌத்த மதத்தின் வருகையால் நாற்றிசைத் தெய்வங்களாக (Guardian deities) உருமாறின எனக் கூறும் இவர்கள் சங்க கால நானிலக் கடவுளரின் முதன்மை பெற்ற கடவுளர்களான மாயோனும், சேயோனும் முறையே சிங்கள மக்கள் வழிபாட்டில் உப்புல்வனாகவும் (நீலோற்பலன்). கதிர்காமக் கடவுளாகவும் (கதறகமத்தெய்யோ) முதன்மை பெற அடுத்த இரு கடவுள்களுக்கும் பதிலாகஇராமனும் இலட்சுமணனும், சில சமயம் நாதனும் பத்தினியும் வழிபடப்படுகின்றனர் எனவும் கூறுகின்றனர். இந் நானிலக் கோட்பாட்டு மரபில் பௌத்தம் எவ்வாறு இணைந்து மேலோங்கியது என்பதற்கு இந்துவிழாவாக விளங்கிய கண்டிப் பெரஹரா, கி.பி. 17 ஆம் நூற்றாண்டில்தான் பௌத்த மதச்சின்னமாகிய தந்த தாதுவையும் இணைத்து ஒரு பௌத்த விழாவாக உருமாறியது தலைசிறந்த சான்றாகும். சமய நம்பிக்கைகள், விழாக்கள், உணவுப் பழக்க வழக்கங்கள் ஆகியனவும் இரு சமூகங்களும் பொதுக் கலாசாரத்தின் வழிவந்தன என்பதை எடுத்துக் காட்டுகின்றன. இதற்கு நல்ல உதாரணமாக விளங்குவதுதான் தமிழ்- சிங்களப் புதுவருடப் பிறப்பாகும்.

## பிராமிக் கல்வெட்டுகளின் சான்றுகள்.

### V

நாம் மேலே எடுத்துக் காட்டிய தொல்லியல் மானிடவியல், சமூகவியல் பின்னணியில் ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுகளை ஆராய்வதும் அவசியமாகின்றது. இக் கல்வெட்டுகள் யாவும் இன்றைய தமிழ்-சிங்கள வரிவடிவத்தின் மூலமாகிய பிராமி வரிவடிவத்தில் அமைந்திருப்பதால் இவற்றைப் பிராமிக் கல்வெட்டுகள் என அழைப்பர். இப்பிராமி வரிவடிவம் மத்திய கிழக்கிலிருந்துதான் இந்தியாவை வந்தடைந்தது. பின்னர் ஈழத்திற்கு வந்தது எனப் பரவலாகக் கருதப்படுகின்றது. இந்தியாவில் இவ்வரிவடிவம் வடஇந்தியாவிலும், தென்னிந்தியாவிலும் வழக்கில் வந்த போது தனித்தனியான பிராந்தியத் தன்மைகளைப் பெற்றிருந்தது. தென்னிந்தியாவில் வழக்கிலிருந்த பிராமி வரிவடிவம் வடஇந்தியப் பிராமி வடிவத்தைப் போலன்றித் தனியான தோற்றம் உடையதால் இதனைத் "திராவிடி" எனவும் கல்வெட்டாய்வாளர்கள் அழைக்கின்றனர்.[65] தமிழகத்திலுள்ள பிராமி வரிவடிவம் ஜைனத்துறவிகளுக்கு அளிக்கப்பட்ட தானங்களை எடுத்தியம்புவதோடு தமிழ் மொழியை எழுதப் பயன்படுத்தப்பட்டதால் தாமிழி அல்லது தமிழ் -பிராமி எனவும் இது அழைக்கப்படுகின்றது.[66] ஈழத்திலோ எனில் கருங்கற்களாலமைந்த குகைகள் காணப்படும் இடங்களில் இவை பொறிக்கப்பட்டுள்ளன. இக்குகைகள்தான் பௌத்த துறவிகளின் வாசஸ்தலங்களாக விளங்கின.

விஜயன் கதையிலும் வடஇந்தியாவிலிருந்து ஏற்பட்ட ஆரியக் குடியேற்றத்திலும் நம்பிக்கை கொண்ட வரலாற்று ஆசிரியர்கள் இப்பிராமிக் கல்வெட்டிலுள்ள பிராகிருத மொழி சிங்களமொழியின் மூலமொழியென எடுத்துக் காட்டி இவை சிங்கள மக்களின் குடியேற்றத்தை எடுத்தியம்பும் சான்றுகளாக விளங்குகின்றன எனக் கருதினர். ஆனால் பௌத்தம் பரவிய பிரதேசங்களில், குறிப்பாகத் தென்னிந்தியாவில் ஆந்திரா போன்ற மாநிலங்களில் எல்லாம் இப்பிராகிருதமொழி மதத்தின் மொழியாக இருந்ததே ஒழிய மக்களின் மொழியாக இருக்கவில்லை. அத்துடன் இங்குள்ள கல்வெட்டுகள் யாவும் கி.பி. 5ஆம் நூற்றாண்டு வரை இம்மொழியிலேதான் எழுதப்பட்டன. உதாரணமாக ஆந்திரா மாநிலத்தில் மக்கள் மொழி திராவிட மொழியாகிய தெலுங்காகும். ஆனால் பௌத்த மதத்தைச் சேர்ந்த பிராமிக் கல்வெட்டுகள் பிராகிருத மொழியிலேயே காணப்படுகின்றன. இதனால் மதத்தின் மொழியை மக்களின் மொழியாக ஈழத்து வரலாற்று ஆசிரியர்கள் தவறாகப் புரிந்துள்ளனர் எனலாம். இப்பிராமிக் கல்வெட்டுகளிற் காணப்படும் குறியீடுகளும் பெருங்கற்காலக் கலாசாரத்தின் பானை ஓடுகளிற் காணப்படும் குறியீடுகளை ஒத்துக் காணப்படுவதால் பெருங்கற்காலக் கலாசாரத்திற்குரிய திராவிட மக்களே பௌத்த மதத்தைத் தழுவினர் என்பது உறுதியாகின்றது. பௌத்தத்திற்கு





அளித்த தானங்களை எடுத்தியம்பும் இக் கல்வெட்டுகளில் இந்துப் பெயர்களான சிவ, மகாசிவ, காலசிவ, சிவகுத்த, சிவரக்சித, நந்திவேல், விசாக, குமார, ஸ்கந்த, சாமிதத்த, கண்ண, வினு, ராம, பதும, துர்கா, காளி, (கடி), திரு, மற்சியாக்ஷி, போன்ற பெயர்களும் காணப்படுகின்றன. இதில் இடம்பெறும் பிராமணகுலங்களும் மேலே எடுத்துக் காட்டிய சங்ககால நானிலக் கடவுளர் வழிபாட்டில் திளைத்திருந்த தமிழகம் பின்னர் வடஇந்திய வைதிக அலையின் செல்வாக்கால் வடஇந்தியக் கடவுளரின் வழிபாட்டு மரபுகளைப் பேணிக் கொண்டதுபோல் ஈழத்திலும் நடந்தது என்பதை எடுத்துக் காட்டுகின்றன.[67] பிராமிக் கல்வெட்டுகளை அளித்த பௌத்த மதத்தோர் சூடியிருந்த மேலே எடுத்துக் காட்டிய இந்துப் பெயர்கள் புதிய மதத்தின் பெயர்களைச் சூடமுன்னர் தமது பழைய நம்பிக்கைகளைப் பிரதிபலிக்கும் பெயர்களையே இவர்கள் சூடியிருந்ததை எடுத்துக்காட்டுகின்றன.

ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுகளின் பிராமி வரிவடிவம் பௌத்தத்துடனேதான் இங்கு அறிமுகமாக, அதனுடன் இணைந்த ஒரு வரிவடிவமாக இதனைக் கொள்ளும் வழக்கு ஆராய்ச்சியாளர்களிடையே காணப்பட்டாலும்கூட, இவ்வரிவடிவம் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் இதில் இருபடைகள் உள என எடுத்துக் காட்டியுள்ளனர். இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் பேராசிரியர் பெர்ணாண்டோ,[68] கலாநிதி சத்த மங்கல கருணாரத்தினா[69] ஆவர். ஈழத்திலுள்ள பிராமி வரிவடிவ அமைப்பினையும் தமிழகத்திலுள்ள தமிழ்-பிராமி வரிவடிவ அமைப்பினையும் ஆராய்ந்த இவர்கள் பௌத்தத்துடன் பிராமி வரிவடிவம் இங்கு புகுத்தப்பட முன்னர் தமிழகம், ஈழம் ஆகிய இடங்களில் பௌத்தத்திற்கு முந்திய பிராமி வரிவடிவம் காணப்பட்டதென்றும் இத்தகைய வரிவடிவத்தின் எஞ்சியுள்ள எழுத்துகளான அ,இ,ம,ள,ழ,ய,ப,த,ச,க,உ,எ ஆகியவை இவ்விரு பிரதேசங்களிலும் அசோகச்சக்கரவர்த்தி காலத்தில் (கி.மு. 250 அளவில்) பௌத்த மதத்துடன் பிராமி வரிவடிவம் ஈழத்திற்கு அறிமுகமாக முன்னர் தமிழகம் "ஈழம்" ஆகிய பிரதேசங்களில் காணப்பட்டது என்கின்றனர். மேற்கூறிய எழுத்துகளுக்கும், அசோக வரிவடிவம் குறிக்கும் எழுத்துகளுக்குமிடையே உருவ அமைப்பிலுள்ள வேறுபாட்டை இனங்கண்டு இத்தகைய முடிபுக்கு இவர்கள் வந்துள்ளனர். இவ்வரிவடிவத்தின் சிறப்பான எழுத்துகளான அ, இ, ம, ள, ழ, ன போன்றன காலகதியில் அசோக கால வரிவடிவத்தின் செல்வாக்கினால் வழக்கொழிய இவற்றினிடத்திலே பௌத்தத்துடன் வந்த பிராமி வரிவடிவம் செல்வாக்குப் பெற்றது என வாதிட்டுள்ளனர். பௌத்தத்திற்கு முந்திய இவ்வரிவடிவத்தை "திராவிடி" வரிவடிவம் எனக் கலாநிதி சத்தமங்கல கருணாரத்தினா எடுத்துக் காட்டியுள்ளார்.[70] தமிழகத்தில் வழக்கிலிருந்த இவ்வரிவடிவந்தான் "திராவிடி" என்ப பியூலரினாலும், தமிழ்- பிராமி எனத் தமிழகக் கல்வெட்டாய்வாளர்களினாலும் அழைக்கப்படுவது ஈண்டு நினைவு கூரற்பாலது. தமிழகத்திலுள்ள தமிழ்-பிராமி

வரிவடிவத்திலுள்ள ள,ழ,ன போன்ற வரிவடிவங்களும் ஈழத்தில் எச்ச சொச்சமாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இத்தகைய எழுத்துகள் பௌத்தத்துடன் வந்த அசோகச் சக்கரவர்த்தி காலப் பிராமியில் இல்லை. தமிழ்மொழிக்கே சிறப்பான எழுத்தாகிய "ள" கரம் ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுகளில் பரவலாகக் காணப்பட்டாலும் "ழ" கரம் வவுனியாவிலுள்ள பெரிய புளியங்குளக் கல்வெட்டிலும், கிழக்கு மாகாணத்திலுள்ள பம்பரகஸ்தலாவக் கல்வெட்டிலும், தென் மாகாணத்திலுள்ள மங்குள் மகாவிகாரைக் கல்வெட்டிலும் காணப்படுகின்றது எனக் கலாநிதி சத்தமங்கல கருணாரத்தினா எடுத்துக் காட்டியுள்ளார்.[71] அண்மையில் அநுராதபுர அகழ்வில் கிடைத்த மட்பாண்ட ஓடுகளில் மட்டுமன்றிப் [72] பூநகரியில் கிடைத்த மட்பாண்ட ஓடுகளிலும் [73] இத்தகைய வடிவம் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. கலாநிதி போப்பியாராய்ச்சி மேற்கொண்ட ஆய்வின் மூலமாகத் தென்மாகாணத்திலுள்ள திஸ்ஸமகாராமப் பகுதியிலுள்ள அக்குறுகொடையில் தமிழகப் பிராமியில் காணப்படும் "ன" வடிவம் கிறிஸ்தாப்த காலத்திற்கு முந்திய இரு நாணயங்களில் காணப்படுவது உறுதியாகியுள்ளது. [74] இவை முறையே "உதிரன்", "சபிஜன்" என வாசிக்கப்பட்டுள்ளன. அசோக பிராமி வரிவடிவத்தில் காணப்படாத இவ்வரிவடிவம் ஈழத்தில் காணப்படுவது மட்டுமன்றித் தமிழ் மொழியின் நெடுங்கணக்கிலுள்ள எழுத்தை எழுதப் பயன்படுத்தப்பட்ட வடிவமாக இது விளங்குவதும் ஈண்டு அவதானிக்கத்தக்கது.

அசோகச் சக்கரவர்த்தி காலத்தில் வடஇந்தியாவிலிருந்து புகுந்த வரிவடிவத்திற்கு முந்திய "திராவிடி" வரிவடிவம் தமிழகம் - ஈழம் ஆகிய பகுதிகளில் காணப்பட்டதை அவற்றின் எச்ச சொச்சங்களாக இக்கல்வெட்டுகளில் காணப்படும் வடிவங்கள் காட்டும் அதே நேரத்தில் பௌத்தத்துடன் வந்த வரிவடிவம் கிறீஸ்தாப்த காலத்தில் இவ்வடிவங்களை அமிழ்த்தியதை எடுத்துக்காட்டும் விதத்தில் இவை வழக்கொழிந்தமை அமைகின்றது. அசோகனுக்கு முந்திய வரிவடிவத்தில் பயின்ற மக்கள், ஒரே கலாசாரத்தில் திளைத்த மக்கள், பௌத்தத்துடன் வந்த வரிவடிவத்தையும் இணைத்து மாறி மாறிச் சில காலம் கல்வெட்டுகளில் இவ்விரு வரிவடிவங்களையும் பயன்படுத்தினாலும் பழைய வடிவங்கள் ஈற்றில் வழக்கொழிந்ததையே இவை எடுத்துக்காட்டுகின்றன.

இப்பிராமிக் கல்வெட்டுகள் பௌத்தத்தின் மொழியாகிய வட இந்தியப் பிராகிருத மொழியில் எழுதப்பட்டாலும் இவற்றின் எச்சசொச்சமாக எஞ்சி நிற்கும் திராவிடக் குலப்பெயர்கள் பௌத்தம் இங்கு அறிமுகமாவதற்கு முன்னர் தமிழகத்தை ஒத்த குலங்களே இங்கு காணப்பட்டதை எடுத்தியம்புகின்றன. வடஇந்திய நால்வகை வர்ண, சாதி அமைப்புப் பற்றி எந்தவித சான்றுகளும் இக்கல்வெட்டுகளில் காணப்படாத நிலையில் தமிழகக் குலங்கள் பற்றி இவற்றில் உள்ள குறிப்புகள் ஈழம் பழந்தமிழகத்தின் ஒரு பகுதியாக விளங்கியதையே எடுத்துக் காட்டுகின்றது. இப்பிராமிக்





கல்வெட்டுகளைத் துருவி ஆராய்ந்த கனகரத்தினம் [75], பேராசிரியர் வேலுப்பிள்ளை[76], இக்கட்டுரையாசிரியர் ஆகியோருள், இக்கட்டுரை யாசிரியர் [77] இதைப் பல்வேறு கட்டுரைகளாக வெளியிட்டுள்ளார். இவற்றில் முதன்மை பெறுவது "பருமக" என்ற வடிவமாகும் [78]. கிறிஸ்தாப்தத்திற்கு முந்திய 1200 கல்வெட்டுகளில் 400 கல்வெட்டுகளில் இப்பதம் இடம்பெற்றுள்ளது. பிராமிக் கல்வெட்டுகளைத் துருவி ஆராயும் பொழுது குலங்களின், விரிவடைந்த குழுக்களின் தலைவர்களாக விளங்கிய இவர்கள் அக்காலச் சமுதாயத்தில் பிரபுத்துவ நிலையில் காணப்படுவதோடு, நாட்டின் நிருவாகத்தில் முதுகெலும்பாக விளங்கி, விவசாய, வாணிப நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தனர்.

இவர்கள் வகித்த தூதுவர், அமைச்சர், சேனாதிபதி, கணக்காளர் போன்ற பதவிகளும் அக்கால அரசியல் பொருளாதாரத்துறைகளில் இவர்கள் பெற்றிருந்த முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றன. அரசர்களோடு மணத்தொடர்பு கொண்டிருந்தது மட்டுமன்றி, இப்பதம் இக்கல்வெட்டுகளில் கி.பி. 1ஆம் நூற்றாண்டளவில் வழக்கொழிந்தாலுங்கூட, கி.பி. 10ஆம் நூற்றாண்டு வரை சிங்கள மன்னர்கள் மாபருமக/ மகாபருமக என்ற இவ்விருதுப் பெயரைச் சூடியிருந்தமையானது இக்குலங்களின் தலைவர்களில் ஒருவன்தான் காலகதியில் அரசனாக வந்தமை உறுதியாகின்றது. இதன் மூலத்திற்குப் பலவாறு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. பிரதான விளக்கமாக அமைவது வடமொழிப் பிரமுகவின் வழிவந்ததே இ·.தாகும் என்பதாகும். பிரமுகவிலிருந்து தான் சிங்களப் "பமுக" பாளிப்பமொக்கோ/பாமொக்கோ ஆகியன மருவியதென்பதே இவர்கள் தரும் விளக்கமாகும். இப்பதத்தை ஒலியமைப்பிலும், உருபனியலமைப்பிலும் ஆராய்ந்து பார்க்கும் போது மேற்கூறிய சொற்பிறப்பாராய்ச்சி இதன் உண்மையான கருத்தை விளக்கவில்லை என்பது தெரிகின்றது. இதனை வடமொழிச் சொல்லாகிய பிரமுகவின் திரிபெனக் கொண்டால் இச் சொல் மருவிய விதம் ஏற்றுக் கொள்ளக்கூடிய தொன்றாகத் தென்படவில்லை. பிரமுகவில் வரும் "பிர" என்பது "ப" அல்லது "பர" எனத் திரியுமேயொழிய "பரு" வாகப் பிராகிருத மொழியில் திரியமாட்டாது. எவ்வாறெனில் சமஸ்கிருதத்தில் உள்ள "பிரியா", "சந்திரா" என்ற பதங்கள் பிய, "சண்ட" எனத் திரிபது போலாகும். இதனால் பருமுக போன்றல்லாது சிங்கள, பாளி வடிவங்கள் வடமொழிப் பிரமுகவின் வழிவந்தவை என்பது புலனாகும். அத்துடன் இக்கல்வெட்டுகளில் எட்டு இடங்களில் இதன் பெண்பால் வடிவமாகிய "பருமகள்" காணப்படுவதால் பொதுப் பால் வடிவமாகிய வடமொழிப் பிரமுகவிலிருந்து இக்கல்வெட்டுகளிலுள்ள "பருமக" என்ற வடிவம் உருவாகியிருக்க முடியாது என்பது புலனாகும். தமிழிலுள்ள "பிரமுகர்" என்ற வடிவமும் வடமொழிப் பிரமுக வழிவந்ததே. உண்மையிலே இது ஒரு பழந்தமிழ் வடிவமாகும் இதனை இருவாறு புணர்த்தலாம். பரு அல்லது பெரு என்ற

பகுதியுடன் மக/ மகன் என்ற விகுதியை இணைத்தால் பருமகன் அல்லது பெருமகன் என இது மலரும். "மகன்" என்றதன் பழைய வடிவந்தான் "மக" ஆகும். இதனால் "பருமக" என்பது பழைய வடிவமே எனக் கொள்ளலாம். மக பின்னர் "மான்" என மருவி வழங்கி வந்ததைச் சங்க இலக்கியங்களில் காணப்படும் குறிப்புகள் எடுத்தியம்புகின்றன. சங்க இலக்கியங்களில் பெருமகன் என்பது மறவர் பெருமகன், பாணர் பெருமகன், குறவர் பெருமகன், பூலியர் பெருமகன் போன்றும், மான் என்பது சேரமான், அதிகமான் நெடுமானஞ்சி, மலையமான் திருமுடிக்காரி, தொண்டைமான் இளந்திரையன் போன்றும் வழக்கில் வந்திருப்பதை நோக்கும் போது குலங்களின் தலைவர்களாக, குறுநிலத் தலைவர்களாக விளங்கிய இவர்கள் அக்கால அரசியலில் முக்கிய பங்காற்றியமை தெரியவருகின்றது. இத்தைகையோரே ஈழத்திலும் இத்தகைய பங்கினை ஆற்றியதை இக்கல்வெட்டுகளின் எண்ணிக்கையில் இவை மூன்றிலொரு விழுக்காட்டில் காணப்படுவது மட்டுமன்றி, பெருங்கற்காலப் பானை ஓடுகளிலுள்ள குறியீடுகளும் இப்பிராமிக் கல்வெட்டுகளில் காணப்படுவதும் உறுதி செய்கின்றது.

இக்கல்வெட்டுகளில் காணப்படும் இன்னொரு பதம் "வேள்" ஆகும்.[79] பிராமிவரிவடிவத்திலுள்ள "ள" வை "ளு" என இனங்கண்டு இதனை "வேளு" எனப் பரணவித்தானா வாசித்து இது வடமொழி "வைல்வ" என்ற பதத்தின் மருவுதலே எனக் கொண்டார். ஆனால் இதே பதம் தமிழகப் பிராமிக் கல்வெட்டுகளில் "வேள்" என வாசிக்கப்பட்டதை நோக்கும்போது ஈழத்திலும் இதே பொருளையே இது தந்து நிற்கின்றது எனலாம். சங்க இலக்கியங்கள் குறிக்கும் வேள்கள் குறுநில மன்னர்களாகத் தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் ஆட்சி செலுத்தினாலுங்கூடத் தற்காலத் திருவனந்தபுரம், மதுரை ஆகிய மாவட்டங்களே "வேள்நாடு" என அழைக்கப்பட்டது ஈண்டு குறிப்பிடத்தக்கது. சங்க இலக்கியங்களில் இவர்கள் "தொன்முடிவேளிர்", "முதுகுடிவேளிர்" என அழைக்கப்பட்டார்கள். தமிழக வரலாற்றறிஞரான பேராசிரியர் செம்பகலக்ஷ்மி அம்மையார் சங்க இலக்கியங்களில் காணப்படும் வேள்களின் குடியிருப்புகளுக்கும் பெருங்கற்காலக் கலாசாரக் குடியிருப்புகளுக்கு மிடையே இழைவிட்டோடும் ஒற்றுமையை எடுத்துக் காட்டியுள்ளதோடு தமிழ்நாட்டில் விவசாயப் புரட்சியை ஏற்படுத்தியவர்களாகவும் இவர்களை இனங்கண்டுள்ளார்.[80] இத்தகைய பணியையே ஈழத்திலுள்ள வேள்களும் ஆற்றினார்கள் என்பது தர்க்கரீதியானதே.

வேள்களின் ஒரு கிளையினரே ஆய்களாகும். வேள்களைப் போன்று இவர்களும் குறுநில மன்னர்களே. ஈழத்தில் ஐம்பதுக்கு மேற்பட்ட கல்வெட்டுகளில் "அய", "அபி" என்ற வடிவங்கள் காணப்படுகின்றன. அய என்ற வடிவத்திற்கு இளவரசன் என்றும், அபி என்ற வடிவத்திற்கு இளவரசி என்றும் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவற்றிலுள்ள "அபி" என்ற வடிவம் மனைவியையும், மகளையும் குறிக்கும் எனவும்





கொள்ளப்பட்டுள்ளது. நிற்க, தமிழகப் பின்னணியை அறியாத சிங்கள ஆய்வாளர்கள் மதிப்பிற்குரியவன் எனப் பொருள்படும் வடமொழி "ஆர்ய", பாளி , "ஐய" ஆகியவற்றிலிருந்தே அய உருவாக்கம் பெற்றது என விளக்கம் அளித்துள்ளனர்.[81] இன்னும் சிலர் தமிழ் ஐயன்தான் இக்கல்வெட்டுகளில் "அய" என இடம்பெற்றுள்ளது எனவும் கருதுகின்றனர்.[82] ஈழத்துப்பிராமியில் குறில் நெடில்களைக் குறிக்க அசோகப் பிராமியில் இருப்பது போன்று தனிக்குறியீடுகள் காணப்படாதிருப்பதாலும், மெய்யெழுத்துக்களுக்குரிய புள்ளி இக்காலத்தில் காணப்படாததாலும் இதனை "ஆய்" என வாசிப்பதே பொருத்தமானதாகும். இதே போன்ற வடிவம் தமிழகத்திலும் இவ்வாறே இனங்காணப்பட்டதும் ஈண்டு நினைவுகூரற்பாலது. தமிழிலுள்ள அவ்வை / அம்மை கன்னடத்திலுள்ள அப்பே என்பனவே இக்கல்வெட்டுகளில் "அபி" என வழங்கப்பட்டுள்ளது. இதன் பொருள் மதிப்பிற்குரியவள் / பெரியவள் ஆகும். வ.ப, வாக மாறும் வழக்கம் இக்காலக் கல்வெட்டுகளில் காணப்படுவதும் கருத்தில் கொள்ளத்தக்கது.[83] இவற்றைவிட மேலும் பல பழந்தமிழ் வடிவங்கள் பிராகிருத வெள்ளத்தில் தப்பிப் பிழைத்த நிலையில் இக்கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளன.

கிட்டத்தட்ட இருநூறுக்கு மேற்பட்ட கல்வெட்டுகளில் பத்திலொரு விழுக்காட்டில் பத/பரத என்ற வடிவம் உள்ளது.[84] இவ்வடிவத்தோடு "பதிர" போன்ற வடிவங்களும் உள. ஆனால் பரணவித்தானாவோ எனில் இதை ஒரு விருதுப்பெயராகவே கொண்டு "பிரபு" என்ற கருத்தில் இது வழங்கப்பட்டது என்றார். எல்லாவலையும் பரணவித்தானாவின் கருத்தை ஏற்றுக் கொண்டுள்ளார்.[85] உண்மையில் இயற்பெயர்களை அண்டிவரும் இப்பெயர்களைத் தென்னிந்தியக் குல அமைப்பு முறையை விளங்கிக் கொள்ளாத இவ்வறிஞர்கள் பட்டப்பெயராகவே கருதினர். ஆனால் இதைக் குலப்பெயராகவே கொள்ளுதல் பொருத்தமுடைய தாகும். சங்க இலக்கியங்களில் நெய்தல் நிலத்தில் வாழ்ந்த பரதர் குலம் பற்றிய குறிப்புள்ளது. "பரதன்" என்பதுதான் இவற்றுள் பரதவாக இடம்பெற்றுள்ளது. இதன் குறுகிய வடிவந்தான் பதவாகும். பாண்டி நாட்டின் கரையோரத்தில் வாழ்ந்த இவர்களில் இரு பிரிவினர் காணப்பட்டனர். ஒரு பிரிவினர் பொருளாதார ரீதியில் சிறப்புறாது, குடிசைகளில் வாழ்ந்து மீன்பிடித்தல், முத்துக் குளித்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டவர்கள். மற்றையவர்கள் வாணிபத்தில் முதன்மை பெற்று வசதியான மாடமாளிகைகளில் வாழ்ந்தவர்கள், குதிரை வியாபாரம் போன்றவை இவர்களின் தொழிலாக அமைந்தன. நற்றிணைச் செய்யுள் ஒன்று பரதவர் பனையை வழிபட்டதை கூறுகின்றது. கி.மு. 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அநுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ள தமிழ் வணிகரின் கல்வெட்டில் தமிழகத்தவரைக் குறிக்கும் தமிழ (தமேட) ஈள (ஈழ), ஆகிய பதங்கள் காணப்படுகின்றன. இதில் ஈழத்தில் வாழ்ந்த ஈழத்துப்

பரதனும் தமிழகத்தைச் சேர்ந்த சமணனும் தமிழகத்து வணிகக்குழுவுக்கு அமைத்துக் கொடுத்த மண்டபம் பற்றிய குறிப்புள்ளது. இம்மண்டபம் வாணிப நடவடிக்கைகளுக்காக இவர்களால் பயன்படுத்தப்பட்டது.[86] இவ்வணிகக் குழுவினரின் பெயர்கள் இவர்களுக்காக அமைக்கப்பட்ட ஆசனங்களில் காணப்படுகின்றன. அவையாவன: சக, நசத, க..திஸ, குபிரசுயத, குபிர ஆகும். குபிர என்பவன் கராவ (கரையான்) எனக் குறிப்பிடப்பட்டு "நாவிக" எனவும் விளிக்கப்பட்டுள்ளான். நாவிக என்றால் கப்பலோட்டி ஆகும். இவனின் ஆசனம் உயரத்திற் காணப்படுவதால் இவனே இக்குழுவின் தலைவனாக விளங்கினான் எனலாம்.

பாண்டிநாட்டின் தென்கோடியில் வாழ்ந்த பரதவர்கள் குதிரை வியாபாரம், முத்துக் குளித்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுகளில் குறிப்பாகப் பொலநறுவை மாவட்டத்திலுள்ள பரதவரின் டுவேகலக் கல்வெட்டில் பாய்மரக் கப்பல் ஒன்றின் வரைபடம் உள்ளது.[87] இத்தகைய வரைபடம் 90களில் மேற்கொள்ளப்பட்ட அநுராதபுர அகழ்வின் போது கிடைத்த பானை ஓட்டிலும் உள்ளது.[88] தென் மாகாணத்திலுள்ள அக்குறுகொடவிலுள்ள மட்பாண்டத்திலும், றிடியாகம[89] விலுள்ள கறுப்பு-சிவப்பு நிற மட்பாண்டங்களிலும் இத்தகைய பாய்மரக் கப்பல் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இத்தகைய கப்பல்கள் தமிழக நாகபட்டினப் பகுதியிலும், தமிழக-ஈழ வாணிபத்திலும் பிற்காலத்தில் பயன்படுத்தப்பட்டதை நோக்கும் போது தமிழக-ஈழப் பரதவர்களின் வாணிப நடவடிக்கைகளின் எச்சங்களாக மேற்கூறிய வரைவுகள் விளங்குகின்றன எனலாம்.

தமிழகத்தில் வாழ்ந்த பழங்குடிகளில் பழையர் என்போரும் ஒருவராவர். இவர்களின் பெயரும் இக்கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளன.[90] பாண்டிய வம்சத்தின் தோற்றத்திற்கும் பழையர் குலத்திற்கும் நெருங்கிய ஒற்றுமை ஒன்றுண்டு எனச் சில வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். காரணம் "பழையர்", "பண்டையர்" அல்லது "பண்டு" ஆகியன ஒரே பொருளைத் தந்து நிற்பன மட்டுமன்றிப் பாண்டியரையே குறித்தன எனலாம். இச்சந்தர்ப்பத்தில் மேகஸ்தினிஸ் ஈழத்து மக்கள் "பழகோனி" என அழைக்கப்பட்டனர் எனக் குறிப்பதை நோக்கும் போது ஆதிக் குடியேற்றத்தில் பாண்டியர் பெற்றிருந்த முக்கியம் விளங்குகின்றது.[91] ஏன் பிற்பட்ட மத்திய காலச் சோழக் கல்வெட்டுகளில் கூட தென்னிந்தியாவிற்குத் தெற்கே (ஈழம் தவிர்ந்த) தீவுகள் யாவும் பழந்தீவுகள் என அழைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இதனாற் போலும், விஜயன் கட்டுக்கதையில்கூட விஜயனுக்குப் பட்டத்தரசியாகத் தென்மதுரைப் பாண்டிய இளவரசி மட்டுமன்றி அவளோடு வந்த எழுநூறு தோழியர்களும் குறிப்பிடப்படுகின்றனர். அது மட்டுமன்றிப் பதினெண்வினைஞர் கூட்டத்தினரையும் இளவரசி அழைத்து வந்ததாகவும் கூறப்படுகின்றது. இதன் மூலம் ஈழத்து





நாகரிக வளர்ச்சிக்குப் பாண்டி நாடு ஆற்றிவந்த பங்கு ஐதீக ரூபத்திலாவது வெளிக் காட்டப்பட்டுள்ளது எனலாம். அத்துடன் விஜயன் தொட்டுத் தேவநம்பிய தீசன் வரை ஆட்சி செய்த மன்னர்களின் பெயர்கள் சிலவற்றில் "பண்டு" என்ற வடிவம் காணப்படுவதும் ஆராயற்பாலது. இவை முறையே "பண்டுவாசுதேவ" "பண்டுகாபய" ஆகும். பண்டுகாபய மன்னன் இளமைக் காலத்தில் "பண்டுல" என்ற பிராமணனிடம் கல்வி கற்றதோடு இப்பிராமணன் வாழ்ந்த இடமாகப் "பண்டுலாகம"வும் மகாவம்சத்திற் குறிப்பிடப்படுகின்றது.[92] அத்துடன் பண்டுகாபயன் வாழ்ந்த இடங்களில் ஒன்றாகத் துவார மண்டலமும் கூறப்படுகின்றது. கபாடபுரத்தின் மற்றொரு வடிவந்தான் துவார மண்டலம் என்பதும் ஈண்டு நினைவு கொள்ளத்தக்கது.[93] துவார மண்டலந்தான் ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுகளில் (தவிறிகிரிய) என அழைக்கப்படுகின்றது.[94]

வரலாற்று ஆசிரியர்கள் இப் "பண்டு" என்ற பதத்தை வடநாட்டிலுள்ள புத்தரின் வமிசத்துடன் இணைத்ததாலுங் கூடத் தொல்லியல் பின்னணியில் நோக்கும்போது, பாண்டி நாடு ஈழத்தின் நேரெதிரே காணப்படுவதால் இவ்வடிவம் பாண்டியரைக் குறித்தது எனலாம். இதனாற் போலும் நிக்கலஸ் போன்றோர் வடஇந்தியாவிலிருந்து ஏற்பட்ட விஜயனது குடியேற்றத்தில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தாலுங்கூட, இத்தகைய வடஇந்தியக் குடியேற்றம் ஈழத்தில் ஏற்பட்ட போது தென்னிந்தியர் ஏன் அதனை எதிர்க்கவில்லை என்றும், அவ்வாறு எதிர்த்திருந்தாலும் அவர்களின் எதிர்ப்பினைச் சமாளித்து ஈழத்தில் வடஇந்தியர் ஒரு ஸ்திரமான அரசைக் கி.மு. நான்காம் நூற்றாண்டிலோ அல்லது அதற்கு முன்னரோ எவ்வாறு அமைத்தனர் என்பது பற்றியும் திருப்திகரமான முடிவுக்கு வரமுடியாது எனக் கூறியிருப்பதும் ஈண்டு அவதானிக்கத்தக்கது.[95] பழையர் என்ற பெயரை நினைவு கூருவதாக அமைவதுதான் கி.மு. 2ஆம் நூற்றாண்டில் ஈழத்தை ஆட்சி செய்த பாண்டிய மன்னர்கள் சிலர் "பழையன் மாறன்" "பனையன் மாறன்" போன்ற பெயர்களைச் சூடியிருந்தமையாகும்.[96] ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுகளில் "ஆய்மாற" என்ற வடிவம் காணப்படுகின்றது.[97] இது "மாற" என்ற பாண்டியரின் பெயரைச் சூடியிருந்த ஆய்வுகளைக் குறித்தது எனலாம். இக்கல்வெட்டுகளில் காணப்படும் மற்றுமோர் வடிவந்தான் புலையர் ஆகும். பரணவித்தானா[98] இதனைப் "புலய" என்ற முனியின் வழிப்பிறந்த வடிவமாகக் கொண்டாலுங்கூட இதனைத் தமிழகப் பின்னணியில் நோக்கும்போது இது தமிழகப் புலையரையே குறித்து நின்றது எனலாம்.

சுள, சுட என்பது மன்னர்களுக்கும் பிரதானிகளுக்கும் வழங்கப்பட்ட பெயராக இக்கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளது[99] ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுகளில் "ழ" வடிவம் காணப்பட்டாலும் வட இந்தியப் பிராமி வரிவடிவத்தில் "ழ" வடிவம் காணப்படவில்லை. இதனால் இது வரும் இடங்களில் ல அல்லது ள அல்லது ட பயன்படுத்தப்பட்டுள்ளது. அநேகமாக "ட" தான் பயன்படுத்தப்

பட்டுள்ளது. இதனால் "சுள" ,"சுட" ஆகிய பதங்கள் தமிழக வமிசத்தவராகிய சோழரையே குறித்தது எனலாம். பிராமிக் கல்வெட்டுகளில் காணப்படும் மற்றுமோர் வடிவந்தான் "உதிய", "உதி" எனப்பலவாறு காணப்படுகின்றது. உதியன் என்ற பெயரின் குறுக்கமாகவே இவற்றைக் கொள்ளலாம். இப்பெயர் தமிழகத்தில் ஆட்சி செய்த சேர வம்சத்தவரை நினைவு கூருகின்றது. பதிற்றுப்பத்தில் முதலாவது சேர மன்னன் உதியஞ்சேரல் என அழைக்கப்படுவதும் நோக்கற்பாலது. அது மட்டுமன்றி உதியர் என்பது சங்க காலத்தில் வாழ்ந்த இனக் குழு ஒன்றின் பெயராக விளங்கியதும் ஈண்டு அவதானிக்கத்தக்கது.[100]. அடுத்து முக்கியத்துவம் பெறுவது "மருமகன்" என்ற வடிவமாகும். [101] இது ஒரு தமிழ்ச் சொல்லாகும். இதற்குத் தமிழ் அகராதி [102] பின்வரும் பொருள்களைத் தருகின்றது. (1) ஓர் ஆணின் சகோதரியின் மகன் அல்லது பெண்ணின் சகோதரனின் மகன் (2) மணத்தால் மருவிய மருமகன் (3) சந்ததியோன். தமிழிலோ எனில் மருமகன், மருமான் எனவும், மணப்பினோர் என்பது வழிவந்தோர் அல்லது முன்னோர் எனவும் பொருள்படும். மருகி, மருமகள் ஆகியவை இவற்றின் பெண்பால் வடிவங்களாகும். சிங்களத்தில் இன்றும் வழக்கிலிருக்கும் "முன்புற" என்ற வடிவம் சந்ததியினன் என்ற கருத்திலும் உபயோகத்திலுள்ளது. மருமகன் சிங்கள தமிழ் சமுகத்தில் இன்றும் பெறும் முக்கியத்துவத்தை நோக்கும் போது முன்பொருகால் வழக்கிலிருந்த தாய் வழிச் சமுதாய அமைப்பின் எச்சங்களே இவைகள் என எண்ணத் தோன்றுகின்றது. இன்றும் மலையாளத்தில் வழக்கிலிருக்கும் மருமக்கட் தாய அமைப்பு முறையும் இப்பழைய அமைப்பின் எச்சங்களாகும். இவற்றைவிடக் கல்வெட்டுகளில் எஞ்சி நிற்கும் வடிவங்களாகக் கோட்டை, கடவை, பங்கு, திரு, நகரம் பொன்ற சிலவற்றைக் குறிப்பிடலாம். இறுதியாகச் சங்க நூல்களில் "திரையர்", "தியர்" என்ற குலம் பற்றிய குறிப்புள்ளது. இதற்கும் ஈழத்தில் இக்கல்வெட்டுகளில் காணப்படும் "திஸ்ஸ" (படம் -6) என்ற வடிவத்திற்கும் உள்ள தொடர்பு ஆராய்தற்பாலது.

## மொழியியற் சான்றுகள்

### VI

இவ்வாறு ஈழத்துத் தொல்லியல், மானிடஇயல், மரபணுவியல், சமூகவியல், சாசனவியல் ஆகியனவற்றின் சான்றுகள் பௌத்தத்துடன் அறிமுகமான பிராகிருத மொழியும் அதன் கலாசாரமும் பரவ முன்னர் இதற்கு முந்திய படையாகத் தென்னிந்தியத் தமிழ், தமிழோடு ஒத்த இதன் கிளை மொழி ஆகியன இங்கு காணப்பட்டதை எடுத்தியம்புகின்றன. இதனை மனதிற் கொண்டுதான் பேராசிரியர் சுதர்சன் செனிவரத்தினா பௌத்த கலாசாரம் பரவமுன்னர் இந்தோ ஒஸ்ரிக் முண்டா, திராவிட மொழிகள் பேசிப்பட்டிருக்கலாம் என்ற கருத்தை ஏற்றிருந்தார்.[103]





> " It is quite likely that the earliest groups may have spoken Indo-Austric Munda and Proto – Dravidian Languages"

இத்தகைய மொழிகளைப் பேசியோரில் திராவிட மொழிக் கூட்டத்தினரே முக்கிய பங்காற்றினர் என்றும், பௌத்தத்துடன் வந்த பிராகிருத மொழிச் செல்வாக்கால் ஈழத்தில் மொழி மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதையும் 90களில் அநுராதபுரத்தில் அகழ்வை மேற்கொண்ட கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கொனிங்காம் பின்வருமாறு கூறியிருப்பது அவதானிக்கத்தக்கது. [104] ஈழத்தில் ஏற்கனவே நிலவிய மொழிகளுக்குப் பதிலாகப் பிறிதொரு மொழி அதன் இடத்தைப் பெற்றமைக்கான காரணம் ஒன்றோ அல்லது பலசக்திகளின் சேர்க்கையோ என்பது பற்றி இன்னும் தெளிவில்லை. ஈழத்தின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வெறு காரணிகள் இத்தகைய மொழி மாற்றத்திற்கு வழி வகுத்திருக்கலாம். இந்த முழுமையான விளைவிலிருந்து இத்தகைய போக்குக்கு வழிவகுத்த உந்து சக்தியைப் பிரித்துப் பார்ப்பதோ அல்லது இனங்காணுவதோ முடியாதுள்ளது. பிராகிருத மொழியில் பெருந்தொகையினதாகிய கல்வெட்டுகள் எழுதப்பட்டதை அடிப்படையாகக் கொண்டு அம் மொழியைப் பேசியவர்கள் அல்லது எழுதியவர்கள் அதிகமாயிருந்தனர் என்பது அவசியமன்று.

> "It is still unclear which process or combination of processes, were the cause of Sri Lankan language replacement. It is possible that very different processes were at work in different areas of the Island and that we cannot isolate or identify a prime mover from the overall result. The presence of a number of inscriptions written in Prakrit, however, don't necessarily indicate a large number of writers or presumably speakers in that language"

இத்தகைய மொழி மாற்றத்திற்கு உதாரணமாக 1679இல் (17 ஆம் நூற்றாண்டில்) கண்டி அரசனின் சிறையிலிருந்து ஓடிய றொபேட் நொக்ஸ் என்ற பிரித்தானிய மாலுமி அநுராதபுரத்தில் தாம் கதைத்த சிங்கள மொழியை அப்பகுதி மக்கள் புரிந்துகொள்ள முடியவில்லை என்ற கூற்றையும் எடுத்துக் காட்டியுள்ளார். [105]

> "Nor could they understand the Chingulay (Sinhalese) language in which we spoke to them"

பௌத்தத்தின் மொழியாகிய பிராகிருதமொழி பரவமுன்னர் ஈழத்தில் நிலவிய மொழி திராவிடமொழியே என்ற கொன்னிங்காமின் கூற்றை

ஆதரிப்பதற்கோ அன்றி நிராகரிப்பதற்கோ போதிய சான்றுகள் இல்லை எனக் கூறும் பிரபல தொல்லியலாளரான கலாநிதி சிரன் தெரணியாகல பின்வருமாறு கருத்துத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய கூற்று அநுராதபுர அகழ்வின் போது பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகளின் மொழியை மையமாக வைத்துக் கூறப்பட்டதும் அவதானிக்கத்தக்கது. [106]

> இக்கல்வெட்டுகளின் மொழியை ஆராயும் போது இது இந்தோ ஆரிய பிராகிருதமாகும். பிராகிருதம் ஈழத்திற்கு அறிமுகமாக முன்னர் நிலவிய மொழி பற்றி அறியமுடியாதுள்ளது. சிங்கள மொழியில் காணப்படும் ஆரிய மொழியல்லாத, திராவிட மொழியல்லாத சொற்களை நோக்கும் போது பிராகிருத மொழிக்கு முந்திய மொழியாக வேடர் மொழியோ அல்லது திராவிட மொழியோ அல்லது வேறொரு மொழியோ விளங்கியதென்பது தெரியாது. எவ்வாறாயினும், மேன்மக்களது மேலாதிக்கம் ஈழத்தின் ஆதிமொழியில், பிராகிருத மொழியின் அழுத்தம் ஏற்படுவதற்குப் பிரதான காரணியாக இருந்திருக்கலாம்.

> Language of the inscriptions where discernible is Indo-Aryan Prakrit. There is no way of ascertaining what language was in use before Prakrit in Sri Lanka, whether Vedda, Dravidian or some other category as evidenced by the occurrence of certain non-Indo Aryan, non-Dravidian words in the Sinhalese language. It is probable that elite dominance was the prime factor responsible for the supersession of the earlier base language of Sri Lanka by Prakrit.

இதனால் இத்தகைய ஈழத்தின் ஆதிமொழிகளில் ஒன்று மேன்மக்களது மேலாதிக்கத்தினால் எவ்வாறு உருமாற்றம் பெற்றது என்பது தெளிவாகின்றது. உண்மையிலே தற்காலச் சிங்களமொழியில் பலவேறு வகையான படைகள் உள. இது தமிழ் மொழியைப் போன்று ஈழத்தில் ஆதிக்குடியேற்றம் நிகழ்ந்த போது இங்கு காணப்பட்ட ஒஸ்ரலோயிட் இன மக்களின் (தற்கால வேடர்களின் மூதாதையர்கள்) மொழியாகிய ஒஸ்ரிக் மொழிச் சொற்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. ஆதித் திராவிட மொழியாகிய இது பின்னர் ஏற்பட்ட மேன்மக்களது மேலாதிக்கத்தின் விளைவாகப் பௌத்தத்துடன் வந்த பிராகிருத, பாளி மொழிகளின் செல்வாக்குக்கு உட்பட்டது வரலாறாகும்.





## தமிழ் — சிங்கள மொழிகளின் உறவுகள்

### VII

தொல்லியற் பின்னணியில் மேற்கூறிய உருமாற்றம் பெற்றதை இன்று நாம் விளங்கிக் கொள்ளுவதற்கு முன்னர் இந்நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ் சிங்களம் ஆகிய மொழிகளில் புலமைமிக்க இரு அறிஞர்கள் மொழியியல்ரீதியில் சிங்கள மொழி அடைந்த உருமாற்றம் பற்றிக் கருத்துத் தெரிவித்துள்ளமையை இங்கே சுட்டிக் காட்டுவதும் அவசிமாகின்றது. இவர்கள் இவ்வாய்வில் ஈடுபட்டபோது சிங்கள மொழிக்குப் பல வகையிலும் தொண்டாற்றிய ஜெர்மனிய தேசத்தவரான வில்லியம் கெய்கர் [107] சிங்கள மொழி வடஇந்திய ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழி என வாதிட்டாலுங்கூட அதனை அம்மொழிகளில் ஒன்றுடன் இணைக்கமுடியாது, அதிலிருந்து இது பிறந்ததென்று நிரூபிக்க முடியாது தத்தளித்தார். காரணம் சிங்கள மொழி தனிப்பண்புகளையுடையதாக விளங்கியதேயாகும். அது மட்டுமன்றி இதில் திராவிடச்சாயல் உண்டென்று கூறி இவ்வாய்வில் திராவிடமொழியில் பாண்டித்தியம் பெற்ற ஒருவர் ஈடுபடுவது பயனுடையதாகும் என்றார். இத்தகைய ஆய்வில்தான் நாம் மேலே சுட்டிக் காட்டிய சிங்கள-தமிழ் மொழிகளில் பாண்டித்தியம் பெற்ற முதலியார் டபிள்யூ . கெ. குணவர்த்தனாவும், சுவாமி ஞானப்பிரகாசரும் ஈடுபட்டனர். முதிலியார் குணவர்த்தனா அவர்கள் 1918 இல் செப்ரம்பர் மாதம் 28 ஆம் திகதி ஆனந்தாக் கல்லூரியில் சிங்கள மொழி பற்றி ஆற்றிய உரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது. [108]

> "விஞ்ஞான ரீதியாக நோக்கும் போது மொழி ஒன்றினைத் தீர்மானிக்கும் காரணி அதனது சொற்றொகுதி அல்ல, ஆனால் அதனது வசன அமைப்பே ஆகும். அதாவது கருத்து வெளிப்பாட்டில் சொற்களை ஒருங்குபடுத்திப் பரஸ்பரம் சீராக்குவது பற்றியதாகும். இவ்வாறு நோக்கும் போது சிங்களம் அடிப்படையில் ஒரு திராவிட மொழி எனக் கூறல் வேண்டும். இது மட்டுமல்ல இதன் பரிணாம வளர்ச்சியும் தமிழ் மொழியை அடிப்படையாகக் கொண்டதாகத்தான் தெரிகின்றது. சொற்றொகுதியின் அடிப்படையில் சிங்களம் பாளியினதும் சமஸ்கிருதத்தினதும் குழவி எனக் கொள்ளும் வேளையில் அதன் உருவ அமிசங்களிலும், அமைப்பிலும் அடிப்படையில் தமிழ் மொழியின் குழவி எனக்கூறுவது பொருத்தமானதாகத் தோன்றுகின்றது."

தற்கால விஞ்ஞான ரீதியான மொழியியல் ஆய்வாளர்களாலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்து யாதெனில் ஒரு மொழிக்குத் தனித்துவத்தைக் கொடுப்பது அதன் சொற்செறிவல்ல -வசன அமைப்பே ஆகும். இவரது கருத்தைச் சிங்கள மொழி வடஇந்திய

ஆரிய குடும்பத்தைச் சார்ந்த மொழியே என்று வாதிட்ட கெய்கர், பரணவித்தான ஆகியோர் எதிர்க்காத காரணம் ஒன்றே இவரது கருத்து நியாயமானது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. சுவாமி ஞானப்பிரகாசரும் சிங்கள மொழியானது ஈழத்தின் ஆதி நாகரிக கர்த்தாக்களின் மொழியினை உறுதிப்படுத்தும் நினைவுச் சின்னமே என்றார். பௌத்தத்துடன் வந்த பிராகிருத, பாளி மொழிகளின் செல்வாக்கால் தான் சிங்கள மொழி வடஇந்திய ஆரிய மொழிப் பண்பைப் பெற்றுள்ளது என்பது இவர்கள் காட்டும் காரணங்களாகும். தொல்லியற் சான்றுகள் இதனையே உறுதிப்படுத்துகின்றன.

சிங்கள மொழியின் தன்மையை மேலும் ஒரு உதாரணத்தால் விளக்கலாம். சிங்கள நெடுங்கணக்கில் இரண்டு வகை உண்டென்பதை கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட முதல் சிங்கள இலக்கண நூலாகிய " சிதற்சங்கராவ" குறிக்கின்றது. அவையாவன எலு, கலப்பு நெடுங்கணக்காகும். இவற்றில் எலு நெடுங்கணக்கில் பாளி சமஸ்கிருத உச்சரிப்புகள் காணப்படவில்லை. கலப்பு நெடுங்கணக்கைவிட இது காலத்தால் பழையது. சிங்களக் கல்வெட்டுகளை உபயோகித்தவர்கள்கூட ஆரம்பகாலத்தில் இக்கலப்பு நெடுங்கணக்கை உபயோகிக்காததை நோக்கும் போது, இந்நெடுங்கணக்கு அவர்களின் வழக்கத்திற்குப் புறம்பானதானதொன்றாகவே காணப்படுகின்றது. இதனால் தற்காலச் சிங்கள மொழியின் மூதாதை மொழியாக "எலு" விளங்குகின்றமை தெரிகின்றது. சிங்கள மொழி பற்றி ஆராய்வோர் அம் மூதாதை மொழிச் சொற்கள் தற்காலச் சிங்களத்தில் உள்ளதை அங்கீகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இது பற்றிப் பின்னர் பார்ப்போம். இவ்வாறு எலு மொழியைப் பேசியோர் சிங்கள மயமாக்கலால் எவ்வாறு உருமாறினர் என்பதை நாம் மேலே குறிப்பிட்ட கேம்பிறிஜ் பல்கலைக்கழக ஆய்வாளரான கொன்னிங்காமின் கருத்தினை இங்கு பதிவதன் மூலம் எடுத்துக் காட்ட விரும்புகின்றோம்.[109]

"சிங்கள மயமாக்கும் சித்தாந்தத்தின் நோக்கில், தென்னிந்திய அரசுகள் ஈழத்தினைக் கலாசார ரீதியில் தம் வயமாக்கும் முயற்சியினை வலுவாக எதிர்த்தன. இத்தகைய சூழலில் ஈழத்தின் தனித்துவமான இறைமையைப் பேணுவதற்கு அரசர்களும் பௌத்த சங்கத்தினரும் ஈழத்தின் வடஇந்திய பௌத்த கலாசாரத்தன்மையை வலியுறுத்தியிருக்கலாம். இத்தகைய அழுத்தத்தின் விளைவாக ஈழத்தில் இருமொழிப்பாரம் பரியத்திற்குப் பதிலாக ஒரு மொழிப் பாரம்பரியம் படிப்படியாக வளர்ச்சியடைந்திருக்கலாம். உண்மையாகவே மரபணு ஆய்வாளர்கள் சிங்கள மக்கள் வட இந்தியாவில் வாழும் மக்களிலும் பார்க்கத் தென்னிந்திய மக்களுடனே தான் மரபணு ரீதியில் நெருங்கிய தொடர்புடையவர்கள் எனக் கருதுகின்றனர்."

"By Progressive Sinhalisation they resisted the attempts by the south Indian states to assimilate the Island. In such circumstances the Indo-European Buddhist nature of the Island may have been stressed by Kings and Buddhist communities in order to preserve sovereignty. This emphasis could have resulted in the gradual spread of a monolingual in place of bilingual one. Certainly geneticists have suggested that the Sinhalese are more closely related to south Indian populations than to North Indian groups"

எனவே சிங்களத்தின் மூதாதை மொழியாகிய "எலு" பௌத்த மதத்தின் மொழிகளாகிய பிராகிருதம், பாளி ஆகியவற்றின் செல்வாக்கால் வடஇந்திய ஆரிய மொழிச் சாயலைப் பெற்றதென்பதே உண்மையாகும். ஈழத்தின் ஆதிப் பிராமிக் கல்வெட்டுகளிலே காணப்படும் எச்சங்களான "திராவிடவரிவடிவமும் திராவிடக்குல/குழுப் பெயர்களும் இதை மேலும் உறுதிப்படுத்து கின்றன. செல்வாக்குள்ள மொழியொன்று ஏனைய மொழிகளுடன் கலக்கும் போது கலக்கும் மொழியில் சில சமயம் தனது சாயலை அழுத்திவிடுவதும், சில சமயம் அதை அழிப்பதும், சில சமயம் அதை உருமாறச் செய்வதும் வரலாற்று நிகழ்ச்சிகளாகும். இவற்றை விளக்குவதற்கு மொழியியல் அறிஞரான நூலன் சில உதாரணங்களைத் தந்துள்ளார்.[110] தற்கால இத்தாலி நாட்டில் அன்று இத்தாலிய மொழி வர்க்கத்தைச் சேர்ந்த பல மொழிகள் வழக்கிலிருந்தன. ஆனால் இம்மொழிகளை இலத்தீன் மொழி கிறிஸ்தாப்த காலத்தை அண்டியுள்ள காலப்பகுதியில் விழுங்கிவிட்டு ஒரு செல்வாக்குள்ள மொழியாக வளர்ச்சி பெற்றது. செல்ரிக் மொழிகள் ஒரு கால் ஐரோப்பா முழுவதும் பேசப்பட்டமை வரலாறு. ஆனால் உரோம சாம்ராஜ்ஜியத்தின் படர்ச்சியால் அதன் மொழியாகிய இலத்தீன் மொழி இச் செல்ரிக் மொழிகளை அமிழ்த்திவிட்டது. இதே போன்று இஸ்லாமியரின் எழுச்சியால் ஆபிரிக்கா, மேற்காசியா ஆகிய பகுதிகளில் இருந்த சுதேச மொழிகளை அராபிய மொழி அமிழ்த்திவிட்டது மட்டுமன்றிப் பல மொழிகளின் சாயல்களையும் மாற்றிவிட்டது. உதாரணமாக இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த பழைய ஈரானிய மொழியாகிய பேர்சிய மொழி அராபிய மொழியின் செல்வாக்கால் 70% க்கு மேற்பட்ட சொற்செறிவைத் தன்னுள்ளே பெற்றது. ஒரு மதமும் அதனுடன் இணைந்த மொழியும் இன்னொரு மொழிமீது அரச ஆதரவுடன் ஏற்படுத்தும் பாதிப்பால் பாதிக்கப்படும் மொழி தன் சுயசாயலை இழப்பதற்கு இது ஒரு நல்ல உதாரணமாகும். இதே

கதிதான் சிங்கள மொழியின் மூலமாகிய திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த எலுவுக்கும் நடந்தது. பௌத்தத்தின் வருகையால் ஏற்பட்ட பிராகிருத, பாளி, வடமொழிச் செல்வாக்கால் இவற்றின் சொற்செறிவை அது பெற்று உருமாறினாலும், இதன் உள் தோற்ற அமைப்பு இன்றும் இதன் திராவிடப் பூர்வீகத்தை உறுதி செய்கின்றது எனலாம்.

## கொடுந்தமிழ் மொழியாகிய எலுவே சிங்கள மொழியாகிறது.

## VIII

அப்படியாயின் எலு மொழியின் பூர்வீகம் என்ன என்ற கேள்வி அடுத்து எழுகின்றது. கி.மு. 3ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதென நம்பப்படும் தொல்காப்பியம் அக்காலத்தில் தமிழகத்திலிருந்த 12 கிளைமொழிகளைப் பின்வருமாறு கூறுகின்றது.[111]

**செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்**
**தங் குறிப்பினவே திசைச் சொற் கிளவி**

*(தொல்.சொல்.எச்.சூ.400)*

இவை பற்றிப் பேராசிரியர் தே. பொ. மீனாட்சிசுந்தரனார் ஆராய்ந்து இவை வழக்கிலிருந்த பிரதேசங்ளையும் இனங்கண்டுள்ளார்.[112] *(படம் -7)* இச்சூத்திரத்தை நோக்கும் போது அக்காலத் தமிழகத்தின் 12 மாநிலங்களிலும் தனித்தனியாகத் தமிழோடு ஒத்த கிளைமொழிகள் இருந்தன எனக் கொண்டாலுங் கூட, தொல்லியற் சான்றுகளை நோக்கும் போது பாண்டி நாட்டில் காணப்பட்ட மொழியே செந்தமிழ் மொழியாகிச் சங்கத் தமிழாய் இலக்கணமுங் கண்டது. இது செம்மொழியாக வளர்ச்சி பெற ஏனையவை கொடுந்தமிழ் மொழிகளாயின. செந்தமிழ் மொழி வளர்ந்த பிரதேசமே பாண்டி நாடாகும். இங்கே தான் முச்சங்கங்கள் விளங்கின. இவை முறையே வடமதுரை, கபாடபுரம், தென்மதுரை ஆகிய இடங்களிற் காணப்பட்டன. சங்க இலக்கியங்களில் ஈழத்துப் பூதந்தேவனார் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. ஈழத்தவராகிய இவரே மதுரையில் வாழ்ந்ததால் மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் எனப் பெயர் பெற்றார் எனக் கூறப்படுகின்றது. இவரின் மூன்று பாடல்கள் அகநானூற்றிலும், மூன்று பாடல்கள் குறுந்தொகையிலும், ஒன்று நற்றிணையிலும் உள.[113] ஈழத்தின் குருநாகல் மாவட்டத்தில் உள்ள பண்டுவாசுநுவரவில் இவர் வாழ்ந்திருக்கலாம் என்ற கருத்தை இவரின் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை முன் வைத்துள்ளார். எவ்வாறாயினும், தமிழகத்திலுள்ள சங்கத்திற்குச் சென்று தமது பாடல்களை ஈழத்துப் புலவர் அரங்கேற்றினார் என்பதை நோக்கும் போது ஈழத்தில் தமிழ்





மொழி சிறப்பான முறையில் இக்காலத்தில் வளர்ச்சி பெற்றிருந்த ஒரு நிலையையே இது எடுத்துக் காட்டுகின்றது எனலாம். இன்றும் தமிழகத்தில் வழக்கொழிந்தாலும் யாழ்ப்பாணத்தில் வழக்கொழியாது நிற்கும் சங்ககாலத் தமிழ்ச் சொற்கள் மேற்கூறிய கருத்தினை உறுதி செய்கின்றன. தொல்காப்பியம் குறிப்பது போன்று ஆணை மட்டுமன்றிப் பெண் பிள்ளையையும் மோனே என அழைப்பதும், ஐந்து, அதர், உது, உவன், வந்தாரே போன்ற சொற்கள் இதற்கான சில உதாரணங்களாகும். இச் சொற்கள் பற்றி ஆராய்வது பயனுடையதாகும்.[114] இவ்வாறு ஈழத்தில் தமிழ் மொழி நிலவியிருந்ததற்கான சான்றுகள் உண்டெனில் "எலு" மொழியின் நிலை என்ன என்ற கேள்வி அடுத்து எழுகின்றது. இவ்வெலு மொழியைத் தமிழகத்தில் நிலவிய கொடுந்தமிழ் மொழியாகக் கொள்ளலாம். இக் கொடுந்தமிழ்தான் பின்னர் சிங்கள மொழியாக ஈழத்தில் வளர்ச்சி பெற்றது. சிங்கள-தமிழ் மொழிகளுக்கிடையே உருவ அமைப்பில் காணப்படும் ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டு முதலியார் குணவர்த்தனா சிங்கள மொழியைத் தமிழ் மொழியின் குழவி என இந்நூற்றாண்டின் முற்பகுதியிலே கூறியிருந்த கருத்தை நாம் மேலே எடுத்துக் காட்டியுள்ளதும் ஈண்டு நினைவு கூரற்பாலது.

இவ் "எலு" மொழி நமது நாட்டின் பழைய பெயராகிய ஈழத்திலிருந்துதான் தோன்றியது என்பது சுவாமி ஞானப்பிரகாசரின் கருத்தாகும். ஈழம் ஒரு திராவிடச் சொல் என்பது பிரபல மொழியியலாளரான பேராசிரியர் பரோவின் கூற்றாகும்[115] ஆனால் தமிழக ஈழக் கல்வெட்டுகள், இலக்கியச் சான்றுகள் ஆகியவற்றை உற்று நோக்கும் போது இதன் மூலவடிவமாக "ஈழ" இருந்தது புலனாகின்றது. முதலில் தமிழகப் பிராமிக் கல்வெட்டுகளை நோக்குவோம். மதுரை மாவட்டத்திலுள்ள திருப்பரங்குன்றக் கல்வெட்டில் ஈழ-குடும்பிகன் பற்றிய குறிப்புள்ளது.[116] போலாலையன் என அழைக்கப்பட்ட இவன் எருக் கொத்தூரில் வசித்தவனாவான். இவ்வாறே கீழவளவுக் கல்வெட்டில் தொண்டியில் வசித்த "ஈழவன்" அளித்த பள்ளி பற்றிய குறிப்புள்ளது.[117] சித்தன்னவாசல் கல்வெட்டில் சிறுப்பாவில் வசித்த "ஈழயர்" பற்றிய குறிப்புளது.[118] ஈழத்திலுள்ள பிராமிக் கல்வெட்டுகளிலும் "ஈழ" பற்றிய குறிப்புளது. அநுராதபுரத்தில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ் வணிகரின் கல்வெட்டில் ஈளபரத (ஈழபரத) அதாவது ஈழத்துப் பரத என்ற குறிப்புளது.[119] "ழ" வுக்குப் பதிலாக "ள" எழுதும் வழக்கமும் உண்டு. அத்துடன் வடஇந்தியப் பிராமி வரிவடிவத்தில் "ழ" இல்லாததால் "ழ"வுக்குப் பதிலாக "ள" அல்லது "ல" அல்லது "ட" பயன்படுத்தப்படுவது வழக்கமாகும். இவ்வாறே பூநகரியில் கண்டெடுக்கப்பட்ட பானை ஓடுகளில் ஈள/ஈலா என்ற பதங்கள் காணப்படுகின்றன.[120] தமிழுக்குரிய சிறப்பான எழுத்துகளாகிய "ழ"கரத்துக்குப் பதிலாக "ள" கரத்தின் அல்லது லகரத்தின் பயன்பாடு இக்காலத்தில் காணப்பட்டதையே இது எடுத்துக்

காட்டுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் ஈழத்து மன்னர்களில் ஒருவனாக கி.பி. முதலாம் நூற்றாண்டில் ஆட்சி செய்த ஈழநாக பற்றி மகாவம்சம் குறிப்பிடுவது அவதானிக்கத்தக்கது.[121] இவ் ஈழநாக தான் பிற்பட்ட ராஜவலிய என்னும் சிங்கள நூலில் "எலுன்நாக" என அழைக்கப்படுவதால் "ஈழ", "எலு" ஆகியவை ஒன்றிலிருந்து ஒன்று மருவிய பதங்களே எனக் கொள்ளலாம்.[122]

பேராசிரியர் வேலுப்பிள்ளை இறையனார் அகப் பொருளுரையில் கடலால் விழுங்கப்பட்ட எழுபத்தொன்பது நாடுகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது.[123] இவை முறையே ஏழ்தெங்கநாடு, ஏழ்மதுரைநாடு, ஏழ்முன்பாலைநாடு, ஏழ்பின்பாலைநாடு, ஏழ்குன்றநாடு, ஏழ்குணகரைநாடு, ஏழ்குறும்பைநாடு ஆகும். இங்கே குறிக்கப்படும் "ஏழ்" என்பது இலக்கம் 7ஐக் குறித்து 7 X 7 = 49 எனக் கொள்ளுவதற்குப் பதிலாக இந்நாடுகள் "ஏழ் நாடுகள் என அழைக்கப்பட்டன எனக் கொள்ளுதலே பொருத்தமாகும் எனக் குறிப்பிட்டுள்ளார். இதனால் ஈழ, எலு, ஏழ் ஆகியவற்றுக்கிடையே இழைவிட்டோடும் ஒற்றுமை புலனாகின்றது. ஈழநாக, எலுன்நாக என ராஜவலியவில் அழைக்கப்படுவதால், ஈழமும் இவற்றில் தப்பிப் பிழைத்த நாடாக இருக்கலாம். அத்துடன் கி.பி. 8ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் உள்ள சிங்களக் கல்வெட்டுகளிலும் கி.பி.9ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் உள்ள சிங்கள இலக்கியங்களிலும் சிங்கள மக்களை அல்லது மொழியைக் குறிக்க கெல, கல (Hela / Hala) போன்ற வடிவங்களும்,[124] சிகிரியாக் குகை ஓவியங்களில் உள்ள குறியீடுகள் ஒன்றில் நம்நாடு "கெலதிவி" "Heladivi" என அழைக்கப்படுவதும் காணப்படுகின்றது.[125] இக் கெல, கல ஆகியன சிங்கள மக்களின் மொழியின் பழைய பெயரெனக் கொண்டு பாளிச் சீகள/Sihala போன்ற வடிவத்திலிருந்து தான் இது பிறந்தது எனப் பரணவித்தானா போன்றோர் கருதினர்[126]. ஆனால் பாளி மூலமாகிய சீகளவில் (Sihala) உள்ள "சீ" எவ்வாறு விடுபட்டதென விளக்கங் கொடுக்க இவர்கள் தவறிவிட்டனர். இதனால் இத்தகைய சொற்பிறப்பாய்வு தவறாகும். ஈழ, எலு ஆகிய வடிவங்கள் ஒத்த வடிவங்கள் என்பது பற்றி நாம் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். இதனால் மூலவடிவமாகிய ஏழ் அல்லது ஈழ என்பது எல, எலு, கெல், கெல, கல (El/Ia – Ela- Elu- Hel-Hela-Hala) எனத் திரிந்தது எனக் கொள்ளலாம். பின்னர் கெலவுக்குத் "திருவைக் குறிக்கும் வடமொழிச் "சிறீ"யின்(Sri) பிராகிருத வடிவமாகிய "சீ" ஐச் சேர்க்கச் சீகள என்ற வடிவம் வந்தது எனக் கொள்வதே பொருத்தமாகும். இப்பாளி "சீகள" வடிவந்தான் சமஸ்கிருதத்தில் சிம்கள என வழங்கலாயிற்று.

சில வரலாற்றாசிரியர்கள் சீகளவிலிருந்துதான் ஈழ அல்லது ஈழம் மருவியது எனக் கொள்ளுகின்றனர்.[127] இது பொருத்தமற்ற





கூற்றாகும். காரணம் "சீகள" என்ற வடிவம் கிறிஸ்தாப்தத்திற்கு முந்திய ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுகளில் காணப்படவில்லை. இது முதல் முதலாகக் கி.பி. 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆந்திர மாநிலத்திலுள்ள அமராவதியில் உள்ள கல்வெட்டில்தான் காணப்படுகின்றது.[128] அதுவும் நமது நாட்டின் பெயராகத் தம்பபண்ணியுடன் தான் இது இங்கே இடம்பெற்றுள்ளது. கி.பி. 4ஆம் நூற்றாண்டுக்குரிய தீபவம்சத்திலும் இது நாட்டின் பெயராகவே குறிப்பிடப்படுகின்றது.[129] மகாவம்சத்தில் இரு இடங்களில் இவ்வடிவம் இடம்பெற்றுள்ளது.[130] ஒன்று விஜயன் கதையிலும் மற்றது வட்டகாமினி மன்னனின் பட்டப் பெயராக மகாகாலசீகள எனவும் இதில் இடம்பெற்றுள்ளது. இதனால் "சீகள" என்ற வடிவம் ஈழத்திலிருந்து பிறந்ததென்பது தெளிவு. இதுவும் ஈழத்தைப் போலவே ஆரம்பத்தில் நாட்டையே குறித்துப் பின்னர் ஒரு குறிப்பிட்ட மொழியைப் பேசும் மக்கள் கூட்டத்தினரைச் சுட்டி நிற்கின்றது எனலாம். இச்சந்தர்ப்பத்தில் மகாவம்ச ஆசிரியர் விஜயனது குடியேற்றத்தின் போது இதற்குக் கொடுத்த விளக்கம் பற்றி ஆராய்வது இங்கே பொருத்தமானதாகும். அதாவது சிங்கத்தைக் கொன்றதால் சிங்கபாகு, சீகள என அழைக்கப்பட்ட அவனுக்கும் அவர்களுக்குமிடையே இருந்த உறவால் (விஜயனும் பரிவாரங்களும்) "சீகள" என அழைக்கப்பட்டனர்.[131] உண்மையிலே இக்காலத்தில் சீகள என அழைக்கப்பட நாட்டின் பெயருக்கு மகாவம்ச ஆசிரியர் இதனை ஒரு இனத்துடன் இணைத்துக் கொடுக்கப்பட்ட விளக்கமாகவே இது உள்ளது. சீகள என்ற வடிவத்தை சீகள, என்ற பகுதி விகுதிகளாகப் பிரித்த இவர் சீ என்பது சிங்கத்தையும், கள என்பது கொல்லலையும் குறித்து நின்று சிங்கத்தைக் கொன்றவன் வழிவந்தோர் எனக் கல்லாமுறைச் சொல்லாராய்ச்சி (Folk etymology)மூலம் விளக்கங் கொடுத்துள்ளார். உண்மையிலே இத்தகைய சொற்பிறப்பாராய்ச்சி நாம் மேலே எடுத்துக் காட்டிய சான்றுகளிலிருந்து ஆராயும் போது பொருத்தமானதல்ல என்பது தெளிவாகின்றது. இதனால் பிற்காலச் "சீகள" வின் மூல வடிவம் ஏழ் அல்லது ஈழ அல்லது ஈழமென்பது தெளிவாகின்றது.

## இடப்பெயர்கள் தரும் சான்றுகள்.

### IX

விஜயன் கூட்டத்தினர் வந்திறங்கிய இடத்தைத் தம்பபண்ணி எனக்கூறும் மகாவம்ச ஆசிரியர் இவர்கள் இந்நாட்டுக்குக் கால் வைத்தபோது தாம் இறங்கிய நிலத்தைத் தொட்டபோது கை சிவப்பாக மாறியதால் அந்த இடத்திற்கும் இத்தீவிற்கும் "தம்பபண்ணி" எனப் பெயரிடப்பட்டது என்கிறார்.[132] ஆனால் தமிழகத்து இலக்கிய சாசன ஆதாரங்களை நோக்கும் போது வடமொழித் தாம்ரவர்ணிதான் தம்பபண்ணியாகப் பிராகிருத மொழியில் வழங்கப்பட்டது தெரிகின்றது. இவ்வடமொழித் தாம்ரவர்ணி கூடப் பழந்தமிழ் வடிவமாகிய தண்பொருநையின்

உருமாற்றம் எனக் கொள்ளப்படுகின்றது. இதனால் இப்பகுதியில் பாண்டிநாட்டின் தண்பொருநை நதிக்கரையிலிருந்து ஆதிக்குடியேற்றம் ஏற்பட்டதால் ஈழத்திற்கு இப்பெயர் வழங்கப்பட்டதெனலாம். பாண்டிநாட்டிலுள்ள இந்நதிதீரத்தில்தான் இந்தியாவின் மிகப்பெரிய தாழிக்காடான ஆதிச்சநல்லூர் விளங்குகின்றது. விஜயன் குழுவினர் வந்திறங்கியதெனக் கருதப்படும் மன்னார்த்துறையில், அதுவும் கால ஓயா நதிக்கரையிற்றான் ஈழத்தின் புகழ்பூத்த பெருங்கற்காலத் தாழிக்காடான பொம்பரிப்பு காணப்படுகின்றது. இதில் அகழ்வாய்வின் போது கிடைத்த எச்சங்கள் யாவும் ஆதிச்சநல்லூரில் அகழ்வாய்வின் போது கிடைத்த தொல்லியல் எச்சங்களை ஒத்துக் காணப்படுவதால் ஈழத்தின் ஆதிக்குடியேற்ற வாசிகளில் ஒரு பகுதியினர் இப்பகுதியிலிருந்தே இங்கு வந்திருப்பர் எனக் கொள்ளலாம்.[133] அத்துடன் பொம்பரிப்பு என்பது உண்மையிலே பொன்பரப்பி ஆகும். இதன் பொருள் செம்மண் அல்லது சிவப்புப் பூமியாகும். இது மட்டுமன்றி மாந்தைத் துறைமுகத்தைக் குறிக்கும் மாந்தை என்ற வடிவம், யாழ்ப்பாணத்தின் பழைய பெயரான மணற்றி போன்றன சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள பெயர்களாகும். அத்துடன் துறைமுகங்களைக் குறிக்கும் "பட்டன" என்பதும் தமிழ் வடிவமாகும். பாளி நூல்கள் வடபகுதியிலிருந்த துறைமுகங்களாக ஜம்புகோள பட்டன, மாதித்த பட்டன ஆகியவற்றைக் குறிக்கின்றன. இவ்வாறே கி.பி. 1ஆம் நூற்றாண்டுக்குரிய பிராமிக் கல்வெட்டு வளவகங்கைப் பகுதியிலிருந்த துறைமுகத்தைக் கொதபவட்டபட்டின என அழைக்கின்றது. மாந்தைக்கு அடுத்த துறைமுகமாக உருவெல பட்டன கூறப்படுகின்றது. இவ்வாறே வடமேற்கே, தெற்கே உள்ள நதி தீரங்களில் உள்ள துறைமுகங்கள் தோட்ட அல்லது தித்த எனவும் அழைக்கப்படுகின்றன. ஏன் திருகோணமலைத் துறைமுகங்கூடக் கோகன்னதித்த என அழைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இவை எலு மொழிச் சொற்கள் என எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இவற்றோடு நதிகளைக் குறிக்கும் ஓயா, கங்கை போன்றன வேடரின் மூதாதையரான ஒஸ்ரிக் மொழி பேசியோர் இட்டபெயர்கள் என இனங்காணப்பட்டுள்ளன. இதற்கு உதாரணமாகக் கால ஓயா, தெதுறு ஓயா, வளவ கங்கை, மகாவலிகங்கை ஆகியவற்றைக் கொள்ளலாம். இவற்றிற் பிராகிருத மொழியின் தாக்கத்திற்கு முன்னர் ஒஸ்ரிக், திராவிட மொழிப் பெயர்களே இடப் பெயர்களாக, விளங்கியமை தெரிகின்றது. வடஇந்தியக் கலாசாரத்தின் செல்வாக்கிருந்தும் கூட இன்றும் பழைய வடிவத்துடன் இவை காணப்படுவது இவற்றின் தொன்மையை எடுத்துக் காட்டுகின்றது எனலாம்.

நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி விஜயனுக்குப் பின் அரசு கட்டிலேறியவர்களில் பண்டுவாசுதேவ, பண்டுகாபய (பகுண்ட), போன்ற பெயர்கள் காணப்படுகின்றன. இதற்கு வரலாற்று ஆசிரியர் கொடுக்கும் விளக்கமாவது இப் "பண்டு" என்பது வட மேற்கிந்தியாவில் அரசோச்சிய புத்தரின் வமிசமே என்பதாகும். ஆனால் பாளி நூல்களை விரிவாக ஆராயும் போது "பண்டு" என்ற





பதம் தமிழகப் பாண்டியரையே குறித்து நிற்பதைக் காணலாம். இதனால் பிராகிருத மொழிக் கலாசாரத்தின் செல்வாக்கால் பண்டு என்பது பாண்டியரைக் குறித்து நின்றது என்பது மறக்கப்பட்டு, வடஇந்தியக் கண்ணோட்டத்தில் புத்தரின்வமிசத்தோடு இம்மன்னர்கள் இணைக்கப்பட்டனர் என்பது தெளிவாகின்றது.

## வரலாற்றுக் காலத்தில் தமிழரின் ஆதிக்கம்.

X

இனி வரலாற்றுக் காலத்தில் ஏற்பட்ட படையெடுப்புகளை ஆராய்வோம். தேவநம்பியதீசனின் வழிவந்தோர் காலத்தில் ஏற்பட்ட தமிழகப் படையெடுப்புகள் பற்றியும் பாளி நூல்கள் குறிக்கின்றன. குதிரை வியாபாரியின் மகன்களான சேனன் குத்திகன் ஆகியோர் தேவநம்பியதீசனின் தம்பியாகிய சுறதிஸ்ஸவைத் தோற்கடித்து நீதி தவறாது 22 ஆண்டுகள் ஈழம் முழுவதையும் ஆண்டனர்.[134] அசேலனிடம் ஆட்சியைக் கைப்பற்றிய சோழநாட்டிலிருந்து வந்த எலாற (எல்லாளன்) நீதி தவறாது 44 ஆண்டுகள் ஆட்சி செய்தான்.[135] எல்லாளனை வென்ற துட்டகைமுனு (கி.மு.161–137) அக்காலத்தில் நாட்டின் பல பகுதிகளில் ஆட்சி செய்த முப்பத்திரண்டு தமிழரசர்களை வெற்றிகொண்டுதான் ஈழத்தரசனானான்[136]. வட்டகாமினி காலத்தில் (கி.மு. 103-89) புலஹத்த, பாஹிய, பனயமாற, பிலயமாற, தாதிக என்ற ஐந்து தமிழகத்தோர் பதினான்கு வருடங்களும் ஏழு மாதங்களும் ஆட்சி செய்தனர்.[137] வடுக, நீலிய என்போர் அநுலா அரசி காலத்தில் (கி.மு. 48-44) ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி ஒருவருடமும் 8 மாதமும் ஆட்சி செய்ததாகக் கூறப்படுகின்றது.[138]

இதனால் வரலாற்றுதய காலத்தில் மட்டுமன்றிக் கிறிஸ்தாப்தத்தின் தொடக்கத்திலிருந்து தேவநம்பியதீசன் வரையிலான 250 வருடங்களில் மூன்றிலொரு காலப்பகுதியில் தமிழகத்தோர் அநுராதபுர அரசாட்சியைப் பெற்றிருந்ததைப் பாளி நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. ஈழத்தின் வடபகுதியில் மட்டுமன்றித் தென்கிழக்கிலும் தமிழகத்திலிருந்து வந்த பாண்டிய வமிசத்தினரின் ஆட்சி நடைபெற்றதைக் காணலாம். மகாவம்சம் போன்ற நூல்களில் கதிர்காமம், சந்தனாகம ஆகிய இடங்களில் காணப்பட்ட சத்திரியர்கள் என இவர்கள் கூறப்படுகின்றனர்.[139] இவர்களுக்குரிய தனித்துவத்தை விளக்க வந்த வரலாற்று ஆசிரியர்கள் வடநாட்டிலிருந்து ஈழத்தின் வடமேற்கு, கிழக்கு ஆகிய பகுதிகளில் நதிகளை அண்டிக் குடியேறிய மக்கட் கூட்டத்தினரைவிட, வேறு ஒரு அலையாக வடஇந்தியாவிலிருந்து வந்து குடியேறியவர்களே இவர்கள் எனவும் விளக்கம் தந்துள்ளனர்.[140] அநுராதபுரத்தில் பௌத்த அரச மரக்கிளை நாட்டு வைபவத்தில் பங்கு கொண்டவர்களாக இவர்கள் குறிப்பிடப்படுகின்றனர். இதன் பின்னர் இவர்கள் பற்றிய குறிப்புகளே காணப்படவில்லை. ஆனால்

குசலன்கந்த, மொட்டயக்கல்லு, கெனென்னேகல, கல் உடுப்பொத்தான போன்ற இடங்களிற் காணப்படும் கல்வெட்டுகள் இவர்களுடையதே என்று இன்று இனங்காணப்பட்டுள்ளது.[141] இக்கல்வெட்டுகள் யாவற்றிலும் மீன் இலட்சினை காணப்படுவது பாண்டியத் தொடர்பை எடுத்துக் காட்டுகின்றது. இதனால் இங்கு ஆட்சி செய்தவர்கள் பாண்டிய வமிசத்தோடு தொடர்புடையவர்களாக இருத்தல் வேண்டும் எனக் கருதலாம். இக்கல்வெட்டுகளில் ''மீனவன்'' என்ற பாண்டிய மன்னரின் பெயரைப் பிராகிருத மொழியில் மஜிமராஜ என எடுத்துக் காட்டும் வடிவம் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கெனென்னேகலவில் காணப்படுகின்றது.[142] இது போன்ற வடிவம் திஸ்ஸமகாராமவிலுள்ள அக்குறுகொடையில் உள்ள நாணயத்தில் ''மஜிம'' என இடம்பெற்றுள்ளது.[143] பிராமிக் கல்வெட்டுகளில் தமிழகத்தோர் ஈழத்துடன் நெருங்கிய வாணிபத் தொடர்பினை வைத்திருந்ததை உறுதிப்படுத்தும் சான்றுகளும் உள. இதற்கான சான்றுகள் அநுராதபுரம், வவுனியா, சேருவில, குடுவில் ஆகிய இடங்களில் உள.[144] வணிகர் அமைப்பு ரீதியாக இயங்கியதை அநுராதபுரக் கல்வெட்டு எடுத்துக் காட்டுகின்றது. தமிழக வணிகரைக் குறிக்கும் ''தமேட வணிஜ'' என்ற குறிப்பு இவற்றுள் காணப்படுவதும் ஈண்டு நினைவுகூரற்பாலது.[145] தமிழக-ஈழத் தொடர்புகளை ஈழத்திற் காணப்படும் தமிழக நாணயங்களும் பல்வகைக் கற்களாலான மணிகள் ஆகியனவும் உறுதி செய்கின்றன.

எனவே ஈழத்தமிழரின் ஆதிக் குடியேற்றத்தில் இரு அலைகளைக் காணலாம். ஒன்று வரலாற்றுதய காலக் குடியேற்றம் (கி.மு.1000-250வரை).மற்றையது வரலாற்றுக் காலத்தில் கிறிஸ்தாப்த காலத்திற்கு முன்னருள்ள காலப்பகுதியில் (கி.மு. 250-1) ஏற்பட்ட குடியேற்றமாகும். வரலாற்றுதய காலக் குடியேற்றம் பற்றிய பாளி நூல்கள் தரும் சான்றுகள் கட்டுக்கதையாகும். தென்னிந்தியாவிலிருந்து ஏற்பட்ட இக்குடியேற்றத்தைத் தொல்லியல், மானிடவியல், மரபணுவியல், சமூகவியல், சாசனவியல் சான்றுகள் உறுதி செய்கின்றன. தமிழகத்தை ஒத்த அரச உருவாக்கமே ஈழத்திலும் காணப்பட்டதை மகாவம்சத்தைப் போலன்றிப் பிராமிக் கல்வெட்டுகள் தரும் நாடெங்கிலும் பரந்து காணப்பட்ட குறுநில மன்னர்கள் பற்றிய தகவல்கள் உறுதி செய்கின்றன [146] *(படம் -8).* இவர்கள் பௌத்தத்துடன் வந்த வடஇந்தியக் கலாசாரச் செல்வாக்கால் அதனுடன் இணைந்த தமது அரசஅதிகாரத்தைப் புதிய கலாசாரத்தைக் கடைப்பிடிப்பதன் மூலமும், அதற்குரிய அரச பதவிகளைக் குறிக்கும் பெயர்களைச் சூடுவதன் மூலமும் ஸ்திரப்படுத்திக் கொண்டனர். பருமக எனப்பட்டோர் இவ்வழியில் முன்னின்றதை இவர்கள் சூடிய ராஜ, மகாராஜ, கமினி போன்ற பெயர்கள் மட்டுமன்றி, கி.பி. 10ஆம் நூற்றாண்டுவரை இவர்களின் மூலத்தை எடுத்துக் காட்டும் ''மாபருமக'' (மகாபருமக) என்ற விருதை மன்னர்கள் சூடியிருந்தமையானது கலாசார உருமாற்றம் பெற்றதை உறுதி செய்கின்றது. எனினும், இவற்றுள் எஞ்சி நிற்கும்





வேள், ஆய் போன்ற வடிவங்கள் தமிழகத்தின் அரசியல் போக்கே ஈழத்திலும் காணப்பட்டதை உறுதி செய்கின்றன. இக்காலத்தில் தமிழகத்திலிருந்து ஏற்பட்ட புலப்பெயர்வுக்குத் தமிழகத்தில் காணப்பட்ட சனநெருக்கம், ஈழத்தில் காணப்பட்ட மண்வளம், நதிகளின் நீர்வளம், கனிப் பொருள்கள், வாணிபம் ஆகியன பிரதான காரணிகளாக இருந்திருக்கலாம். வரலாற்றுக் காலத்தில் ஏற்பட்ட குடிப்பெயர்வுக்கு அரசியல் ஆதிக்கவிழைவு, வியாபாரத்தில் மேலாண்மையைப் பெறல் ஆகியன முக்கியமான காரணிகளாக விளங்கியிருக்கலாம்.

வரலாற்றுக் காலத்தில், கிறீஸ்து பிறப்பதற்கும் வரலாற்றின் ஆரம்ப காலத்திற்குமிடைப்பட்ட காலமாகிய சுமார் 80 ஆண்டுகள் தமிழரின் ஆட்சி அநுராதபுரத்தில் காணப்பட்டதை மகாவம்சமே குறிப்பதிலிருந்தும், துட்டகைமுனு கி.மு. 2ஆம் நூற்றாண்டில் 32 தமிழ்ச் சிற்றரசர்களைத் தோற்கடித்தே ஈழம் முழுவதும் தனது அதிகாரத்தை நிலைநாட்டினான் என மகாவம்சம் குறிப்பதிலிருந்தும் இக் காலத்திலும் தமிழரின் ஆதிக்கம் ஈழத்தில் காணப்பட்டது புலனாகின்றது. தமிழகத் தமிழர் ஈழத்துடன் கொண்ட வாணிப நடவடிக்கைகளுக்கு ஈழத்தில் காணப்பட்ட முத்து, கறிவகைகள், யானைத் தந்தம் போன்றன பிரதான காரணிகளாக அமைந்தன. உரோமர்கள் ஈழத்துப் பொருட்களைத் தமிழகத்திலிருந்தே (ஈழத்துக்கு வருவதற்குப் பதிலாக) தொடக்கத்தில் எடுத்துச் சென்றதால் ஈழத்து வாணிபத்திலும் தமிழக வணிகர் முக்கிய பங்காற்றியமை புலனாகின்றது.

## தொகுப்புரை

ஏற்கனவே குறிப்பிட்ட வண்ணம் ஈழ வரலாற்றை மூன்று காலப்பரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (கி.மு. 125000- 1000), வரலாற்றுதய காலம் (கி.மு. 1000-250), வரலாற்றுக் காலம் (கி.மு. 250க்குப் பின்) ஆகும். ஈழத்து ஆதிக்குடியேற்றங்களை எடுத்துக்காட்டும் சான்றுகள் வரலாற்றுதய காலத்திலே தான் காணப்படுகின்றன. பாளி நூல்களான தீபவம்சம், மகாவம்சம் போன்றன இத்தகைய குடியேற்றத்தினை ஐதீகமாக உருவகப்படுத்தியுள்ளன. இதுதான், விஜயன் கதையாகும். தமிழ் நூல்களைப் பொறுத்தமட்டில் இவற்றில் தமிழ் மக்களின் ஆதிக் குடியேற்றங்கள் பற்றிய ஐதீகங்கள் இல்லை. இதனால் விஜயன் கதைதான் ஈழத்து ஆதிக் குடியேற்றம் பற்றி எடுத்துக் கூறும் கதையெனக் கொள்ளப்பட்டு இக்கதை வடஇந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்து வந்து இங்கு குடியேறிய ஆரிய மக்களின் குடியேற்றத்தை எடுத்துக் காட்டுவதாகவும் விளக்கமளிக்கப்பட்டு வந்துள்ளது. இதனால், இந்நாட்டின் நாகரிக கர்த்தாக்கள் சிங்கள மக்களின் மூதாதையினரே எனவும் கொள்ளப்பட்டது. பாளி நூல்களில் தமிழகத்திலிருந்து ஏற்பட்ட படையெடுப்புக்களைப் பற்றி

வரும் தகவல்கள் தமிழ் மக்கள் படையெடுப்பாளர்கள், ஆக்கிரமிப்பாளர்கள் என்ற பாவனையிலும், வாணிப நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் என்ற பாவனையிலுமே உள்ளன. இந்நாடு சிங்கள பௌத்த மக்களுக்குரிய நாடு என்ற கோட்பாட்டின் அடிப்படையில் வளர்க்கப்பட்ட விஜயன் கதையே வரலாற்று நூல்களில் முக்கிய இடத்தினை வகித்தது.

இக்கதையினை ஆராய்ந்த அறிஞர்கள் இது ஒரு கட்டுக்கதை என்பதை எடுத்துக் காட்டத் தவறவில்லை. கடந்த மூன்று தசாப்தங்களாக ஈழத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் இக்கதைகூறும் வடஇந்தியக் குடியேற்றத்திற்கான தடயங்களை அளிக்கவில்லை. மாறாக, தென்னிந்தியாவிலிருந்து கி.மு. 1000 ஆண்டிலிருந்து ஏற்பட்ட புலப்பெயர்வுகளையே உறுதி செய்கின்றன. ஈழத்தில் வாழ்ந்த கற்கால மக்களுக்கு அடுத்தாற் போல் ஏற்பட்ட புலப்பெயர்வே இ்.தாகும். இப்புலப்பெயர்வினை உறுதிப்படுத்தும் சான்றாக விளங்குவதுதான் இவர்களால் அறிமுகஞ் செய்யப்பட்ட பெருங்கற்காலக் கலாசாரமாகும். இதில் நான்கு பிரதான கூறுகள் காணப்பட்டன. அவையாவன: குடியிருப்புகள், ஈமச்சின்னங்கள், குளங்கள், வயல்கள் ஆகும். பாளி நூல்கள் குறிக்கும் ஆதிக் குடியேற்ற மையங்களான அநுராதபுரம், கந்தரோடை, மாந்தை, திஸ்ஸமகாராம (மாகம) ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளும், ஈமச்சின்னங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளும் பெருங்கற்காலக் கலாசாரத்தின் படர்ச்சியே ஈழத்துப் பெருங்கற்காலக் கலாசாரம் என்பதை உறுதி செய்துள்ளன.

இக் கலாசாரத்தின் குடியிருப்புகளில் கிடைத்த எலும்புக் கூடுகள் முக்கியமான சான்றாக விளங்குகின்றன. இவ்வாறே மரபணுவாய் வாளரும் சிங்கள-தமிழ்ச் சமூகங்கள் இரத்த உறவில் ஒரே தன்மை படைத்துக் காணப்படுவதை எடுத்துக் காட்டியுள்ளனர். அதே நேரத்தில் தற்காலச் சிங்கள மக்கள் வடஇந்தியாவிலிருந்து குடியேறியதாகக் கருதப்படும் இந்தியாவின் வடமேற்கு/வடகிழக்குப் பகுதி மக்களின் வழித்தோன்றல்கள் அல்லர் என்பதை உறுதிப்படுத்துவதாய் இம்மரபணுவாய்வு விளங்குகின்றது. சமூகவியற் பார்வையில், சிங்கள-தமிழ்ச் சமூக அமைப்பு, உறவு முறைப் பெயர்கள், வழிபாட்டு மரபுகள், பழக்க வழக்கங்கள் ஆகியனவும் சிங்கள-தமிழ்ச் சமூகங்கள் ஒரு பொதுக் கலாசாரமாகிய பெருங்கற்காலக் கலாசார வழிவந்தவர்கள் என்பதை காணக்கூடியதாகவுள்ளது.

இத்தகைய கலாசாரம் கி.மு. 3ஆம் நூற்றாண்டில் பௌத்த மதத்தின் வருகையால் வடஇந்தியக் கலாசாரச் சாயலைப் (சிங்கள மயமாகும் சாயலை) பெற்றது என்பதை ஈழத்தின் மிகப் பழைய கல்வெட்டுகளாகிய பிராமிக் கல்வெட்டுகள் உறுதி செய்கின்றன.





பௌத்த மதத்திற்குக் கொடுக்கப்பட்ட தானங்களை எடுத்தியம்பும் இவை சிங்கள மக்களின் ஆதிக்குடியேற்றத்திற்கான சான்றுகளாக மட்டுமன்றி, இவற்றிற் காணப்படும் பிராகிருத மொழிதான் (ஒரு மதத்தின் மொழி) ஈழத்து மக்களின் மொழி எனவும் தவறாகக் கருதப்பட்டு வந்தது. இப்பிராமிக் கல்வெட்டுகள் பெருங்கற்கால கலாசார மையங்களுக்குக்கிட்டக் காணப்படுவது மட்டுமன்றி இவற்றில் காணப்படும் குறியீடுகள், பெருங் கற்கால மக்களின் பயன்பாட்டில் இருந்த பானை ஓடுகளில் உள்ள குறியீடுகளை ஒத்துக் காணப்படுவதால், பெருங்கற்கால மக்களே பௌத்த மதத்தைத் தழுவினர் என்பது உறுதியாகின்றது. இம்மக்கள் அளித்த தானங்கள் பௌத்தத்தின் மொழியாகிய பிராகிருத மொழியிலே பதியப்பட்டதையே இவை எடுத்துக் காட்டுகின்றன. பிராகிருத மொழி மட்டுமன்றி இவற்றை எழுத வடஇந்தியப் பிராமி வரிவடிவமும் புகுந்தது. அண்மைக் கால ஆய்வுகள் இப்பிராமிக் கல்வெட்டுகளின் வரிவடிவில் இரு படைகள் உள என்பதை எடுத்துக் காட்டியுள்ளன. ஒன்று பௌத்தத்துடன் வந்த வடஇந்திய வரிவடிவத்திற்கு முன்னர் வழக்கிலிருந்த வரிவடிவம். இரண்டாவது பௌத்தத்துடன் வந்த வரிவடிவம். முன்னைய வரிவடிவம் தமிழகத்தில் வழக்கிலிருந்த "திராவிடி வரிவடிவம்" ஆகும். தமிழை எழுதப் பயன்பட்டதால் தமிழ்-பிராமி எனவும் இது அழைக்கப்பட்டது. இத்தகைய வடிவமே தமிழகம்-ஈழம் ஆகிய பகுதிகளில் பௌத்தத்துடன் வந்த வடஇந்தியப் பிராமி வரிவடிவத்திற்கு முன்னர் வழக்கிலிருந்தது. பௌத்தத்துடன் வந்த பிராமி வரிவடிவத்தின் செல்வாக்கால் கிறிஸ்தாப்த காலத்தில் இது வழக்கொழிய, வடஇந்தியப் பிராமி வரிவடிவமே ஈழத்தின் ஆதிப்பிராமி வரிவடிவமாக வளர்ச்சி பெற்றதும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இப்பிராமி வரிவடிவத்தில் காணப்படும் குல/குழுப் பெயர்களான வேள், ஆய், பத/பரத போன்றவையும், பருமக போன்ற பிற தமிழ்ப் பெயர்களும் தமிழை ஒத்த மொழி பேசியோரே இன்றைய தமிழ், சிங்கள மொழிகளின் மூதாதையினராக விளங்கினர் என்பதை உறுதி செய்கின்றன.

தமிழைப் போலன்றிச் சிங்கள மொழியின் தோற்றம், அதன் நெடுங்கணக்கின் ஆரம்பம் கி.பி. 7/8ஆம் நூற்றாண்டுகள் எனக் கொள்ளப்படுகின்றது. அத்துடன் சிங்கள மொழியின் வளர்ச்சியையும் அறிஞர்கள் மூன்று காலப்பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். அவையாவன:- பிராகிருத சிங்களம் (Sinhalese Prakrit) கி.பி. 4ஆம் நூற்றாண்டுவரை, ஆதிச் சிங்களம் (Proto- Sinhala) கி.பி. 7ஆம் நூற்றாண்டு வரை சிங்களம் (Sinhala) கி.பி. 7ஆம் பின். மேலும் கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிதற் சங்கராவ என்ற சிங்கள மொழியின் இலக்கண நூல் சிங்கள மொழிக்கு இரு நெடுங்கணக்கைத் தந்துள்ளது. அவையாவன:- எலு நெடுங்கணக்கு, பிராகிருதம் பாளி, சமஸ்கிருதம் ஆகியவற்றுடன் இணைந்த மற்றைய நெடுங்கணக்காகும். இதனால் பிராகிருத

மொழியின் தாக்கம் பௌத்தத்துடன் ஏற்படுமுன்னர் சிங்கள மொழியின் மூதாதை மொழியாக "எலு" விளங்கியது தெரிகின்றது. இந்த எலு மொழிதான் பௌத்த பிராமிக் கல்வெட்டுகளிற் காணப்படும் பிராகிருத மொழியின் தாக்கத்திற்கு, செல்வாக்கிற்கு உட்பட்டது. இவ்வெலு மொழிதான் இதே காலத்தில் தமிழகத்தில் வழக்கிலிருந்த தமிழின் கிளை மொழிகளில் (கொடுந்தமிழ் மொழிகளில்) ஒன்றாகும். இக்கூற்றினைச் சிங்கள-தமிழ் மொழிகளிடையே காணப்படும் அடிப்படை ஒற்றுமை எடுத்துக் காட்டுகின்றது. இது தான் பிராகிருத பாளி மொழிகளின் செல்வாக்கால் இக் காலத்திலிருந்து வட இந்தியமொழிகளின் பண்பைப் பெறத் தொடங்கியது. இதனை மொழியியலாளர்களும் எடுத்துக் காட்டியுள்ளனர். இந்த எலு என்ற பதம் கூட இந்நாட்டின் ஆதிப் பெயரான ஏழ் /ஈழ/ஈழத்தின் வழிவந்ததே. இதற்குச் சான்றாக அமைவது தான் மகாவம்சத்தில் காணப்டும் "ஈழநாக" என்ற பெயராகும். ராஜவலியாவில் எலுன்நாக என இவன் விளிக்கப்படுவதானது இரண்டும் ஒரே தன்மை படைத்தவை என்பதை மட்டுமன்றி ஒன்றிலிருந்து மற்றையது மருவியது என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது. தமிழ் நூல்கள் கூறும் கடலில் அழிந்த நாடுகளான "ஏழ்" என்ற அடைமொழியுடன் காணப்படும் நாடுகளோடு இணைந்து பின்னர் தப்பிப்பிழைத்த நாடாக ஈழம் விளங்கியிருக்கலாம். காரணம் ஏழ், ஈழ, எலு ஆகிய பதங்களுக்கிடையே நெருங்கிய ஒற்றுமையுண்டு.

சிங்கள மக்கள் கல்வெட்டுகளில் கெல, கெல், கல, Hela, Hel, Hala எனவும், சிகிரியாக் கீறல் ஓவியத்தில் நம்பாடு, கெலதீவி எனவும் அழைக்கப்படுவதை நோக்கும் போது ஏழ், ஈழ, எல தான் பின்னர் கெல, கல, ஆக உருமாற, இவ்வடிவத்திற்கு முன்னர் திரு எனப் பொருள் தரும் "சிறீ" என்ற சமஸ்கிருத வடிவத்தின் பிராகிருத வடிவமாகிய "சீ"யை இணைக்க இது சீகள ஆனது எனலாம். "சீகள" என்ற வடிவம் (நாட்டைக் குறிக்கும் வடிவம்) ஈழ என்ற வடிவத்திற்குப் பிந்தியே காணப்படுவதால், அதாவது கி.பி. 3/4ஆம் நூற்றாண்டுகளில் காணப்படுவதால், "ஈழ" என்ற வடிவமோ எனில் கிறிஸ்தாப்த காலத்திற்கு முன்னரே இலக்கிய சாசனங்களில் இடம் பெற்றுள்ளதால் சீகள என்பது "ஈழ" என்ற மூலவடிவத்திலிருந்து பிறந்தது தெளிவாகின்றது. சிங்கள மொழி பிராகிருத மொழிக்கால நிலையைத் தாண்டிக் கி.பி.4ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 7ஆம் நூற்றாண்டு வரை ஆதிச் சிங்கள மொழிக் காலத்தை அடைந்த நேரத்தில் தான் மகாவம்ச ஆசிரியரால் சீகள என்ற வடிவத்திற்குச் சிங்கத்தைக் கொன்றோன் வழிவந்தவர்கள் என்ற விளக்கம் கொடுக்கப்பட்டது. எவ்வாறெனில் இதனைச் சீ, கள எனப்பிரித்து சிங்கம், கொல்லல் என கருத்துக் கொடுக்கப்பட்டு சிங்கத்தைக் கொன்றோன் வழிவந்தவர்களே சிங்களவர்கள் என்ற ஜதீகத்தை இக்காலத்தில் உருவாக்கினர். கொன்னிங்காம் நன்றாக விளக்கிக் கூறியவாறு இக்காலத்தில் தமிழகக் கலாசாரத்தின்





தாக்கத்திலிருந்து பௌத்த கலாசாரத்தின் தனித்தன்மையை, அதன் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்குப் பௌத்த சங்கத்தினரும், அரசரும் முயன்றனர். இதன் விளைவாக வடஇந்தியக் கலாசாரச் செல்வாக்கு மேலோங்கத் தற்காலச் சிங்கள மொழி உருவானது என்பர். இதனால்தான் சமூகவியலாளர் Sinhalisation as being essentially a cultural process associated with Buddhism என்பர். அதாவது சிங்கள மயமாக்கம் என்பது பௌத்தத்துடன் ஒன்றிணைந்த கலாசார வளர்ச்சியாகும். இதனால் கி.மு. 250க்கு முன்னர் இந்நாட்டில் திராவிட மொழிகளான தமிழ், எலு மொழிகளைப் பேசிய மக்கட் கூட்டத்தினரும் கற்கால மக்களின் மொழியாகிய ஒஸ்ரிக் மொழி பேசிய மக்கட் கூட்டத்தினரும் காணப்பட்டதைத் தொல்லியல், மொழியியற் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இது நடந்தது வரலாற்றுதய காலத்திலாகும் (கி.மு. 900-250). தமிழகத்தில் தொல்காப்பியரின் காலத்தில் செந்தமிழும் கொடுந்தமிழும் காணப்பட்டன என்பது பற்றிக் குறித்திருந்தோம். ஈழத்துப் பூதந்தேவனார் செந்தமிழ் விளங்கிய மதுரை சென்று தமது பாடல்களை அரங்கேற்றியதை நோக்கும் போது ஈழத்திலும் செந்தமிழும் (தமிழ்) கொடுந்தமிழும் (எலு) காணப்பட்டன எனக் கருதலாம்.

பௌத்தம் அறிமுகமாகிய வரலாற்றுக் காலம் கி.மு. 250இல் தொடங்குகின்றது. பாளிநூல்களின் சான்றுகளை நோக்கும் போது கிறிஸ்து பிறப்பதற்கு முன்னருள்ள 250 ஆண்டுக் காலத்தில் கூட, தமிழகத்திலிருந்து ஏற்பட்ட படை எடுப்புகளின் விளைவாக 1/3 காலப்பகுதியில் அநுராதபுரத்தை மையமாகக் கொண்டு தமிழராட்சி ஈழம் முழுவதும் காணப்பட்டது. அநுராதபுரத்தில் மட்டுமல்ல எல்லாளன்-துட்டகைமுனுப் போர் நடந்த காலத்தில் ஈழத்தின் பல பகுதிகளிலும் 32 தமிழ் அரசர்கள் ஆட்சி செய்ததாக மகாவம்சம் கூறுகின்றது. தமிழ் வம்சத்தவரான பாண்டியரின் ஆட்சி அநுராதபுரத்தில் மட்டுமன்றி ஈழத்தின் தென் கிழக்குப் பகுதியில்-பாளி நூல்கள் விளிக்கும் உரோகண இராச்சியத்திலும் காணப்பட்டதைக் கல்வெட்டொன்றிலும், நாணயத்திலும் பாண்டியரைக் குறிக்கும் "மீனவனின்" பிராகிருத வடிவமாகிய "மஜிமராஜ", "மஜிம" போன்ற வடிவங்கள் மட்டுமன்றிப் பாண்டிய வம்சத்தவரின் மீன் சின்னம் இக் கல்வெட்டுகளில் காணப்படுவதும் உறுதி செய்கின்றது. தமிழகத்தோர் ஈழத்துடன் வாணிபத் தொடர்புகளை வைத்திருந்ததை இக்கல்வெட்டுகளில் காணப்படும் தமேழ/தமேட என்ற பதம் எடுத்துக் காட்டுகின்றது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்குரிய இக்கல்வெட்டுகள் அநுராதபுரம், வவுனியா, சேருவில, குடுவில் ஆகிய இடங்களில் உள. ஈழத்தமிழர் கலாசார ரீதியில் தமிழகத்துடன் கொண்டிருந்த தொடர்பினை எடுத்துக் காட்டும் எச்சமாகச் சங்க நூல்களில் இடம்பெற்றுள்ள பூதத்தேவனாரின் பாடல்கள் அமைகின்றன. இதனால் சுவாமி ஞானப்பிரகாசரின் ஈழத்தின் நாகரிக கர்த்தாக்கள் திராவிடரே, தமிழர்

சிங்களவர்களாக மாறினர் என்ற கட்டுரைகளைத் தொல்லியல் பின்னணியில், பன்முகப் பார்வையில் அணுகும் போது இன்றும் ஏற்புடைய கருத்தாகவே அமைகின்றது. தொல்லியல் ரீதியாக இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதை அநுராதபுர அகழ்வுகளும் பிற அகழ்வுகளும் எடுத்துக் காட்டியுள்ளன.

இன்றைக்கு மூன்று தசாப்தங்களுக்கு முன்னர், தமிழ் நூல்களில் சான்றுகள் இல்லாத நிலையில், அகழ்வாய்வு முதன்மை பெறாத நிலையில், பானி நூல்களை மையமாக வைத்தே பேராசிரியர் கா. இந்திரபாலா அவர்கள் ஈழத்தமிழரின் ஆதிக் குடியேற்றம் பற்றிய ஆய்வை மேற் கொண்டிருந்தார். அவரது ஆய்வுக்குப் பின்னர் அகழ்வாய்வு மூலம் கிடைத்த சான்றுகள் தமிழ்க் குடியேற்றத்தின் பழைமையை மேலும் எடுத்துச் சென்றதை உணர்ந்த அவர் பின்னர் தமது கருத்தையும் மாற்றியிருந்தார். தற்போதைய ஆய்வுகள், அதுவும் பன்முகப் பார்வையில் கிடைத்துள்ள சான்றுகள் இற்றைக்கு மூவாயிரம் வருடங்களுக்கு முன்னரே சுமார் கி. மு. 1000 ஆண்டளவில் ஈழத்தில் தமிழ் மொழி பேசுவோரும் தற்காலச் சிங்கள மொழி பேசுவோரின் மூதாதை மொழியாகிய தமிழின் கிளைமொழியாகிய எலு மொழி பேசுவோரும் வாழ்ந்ததை உறுதி செய்கின்றன. இன்னொரு கோணத்தில் நோக்கும் போது தொல்காப்பியர் காலத்தில் (கி.மு. 3ஆம் நூற்றாண்டு) தமிழகத்தில் செந்தமிழும், கொடுந்தமிழும் காணப்பட்டது போன்றே ஈழத்திலும் (செந்தமிழ்) தமிழ், எலு (கொடுந்தமிழ்) ஆகிய மொழிகள் காணப்பட்டன எனலாம்.

நாம் எழுதிய பண்டைய தமிழகம் நமது ஆசானாகிய பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் தொட்டதையும், விட்டதையும் நிறைவு செய்கின்றதென்றால், இன்றைய உரையும் நமது ஆசானாகிய பேராசிரியர். கா. இந்திரபாலா அவர்கள் தொட்டதையும், விட்டதையும் பூர்த்தி செய்வதோடு ஈழத்தமிழர் வரலாறு பற்றிய நமது ஆய்வுக்கு மேலும் உரமளிக்கின்றது என்ற மனநிறைவுடன் உங்களிடமிருந்து விடைபெறுகின்றேன்

**வணக்கம்.**






## வரலாற்றுதய காலக் குடியேற்ற மையங்கள்

**ஈமச்சின்ன வகைகள்**

- தாழி அடக்கம்
- குழி அடக்கம்
- கல்லறை
- தாழிகளை உள்ளடக்கிய கல்லறை
- கல்மேசை
- கல்வட்டம்
- பெருங்கற்காலக் குடியிருப்பு மையங்கள்
- கறுப்பு - சிவப்பு நிற மட்பாண்டங்கள் காணப்படும் இடங்கள்
- சுனைமகங்கள் வ
- கோகன்னதித்த


**பெருங்கற்காலக் கலாசார மையங்கள்**

1. காரைநகர்
2. ஆனைக்கோட்டை
3. கந்தரோடை
4. மாந்தை
5. தெக்கம்
6. பொம்பரிப்பு
7. அக்குறுகொட
8. முக்கறுகொட
9. பின்வேவ
10. சாம்பன் குளம்
11. அலுத்பொம்புவ
12. மாமடுவ
13. தமனெல்ல - கொடல்ல
14. வடிகவேவ
15. குருகல்கின்ன
16. கொக்கபே
17. திபுல்வேவ
18. ரம்பாவேவ
19. அநுராதபுரம்
20. மச்சாகம
21. கதிரவெளி
22. ம ப கல
23. கதிர்காமம்
24. கல்அத்தார
25. மக்கேவிற்ற
26. படவிகம்பொல
27. இபன்கட்டுவ
28. நல்லே
29. கலொதுவெவ



படம் -01


அளவுத்திட்டம்:- 1செ.மீ: 32கி.மீ




படம் -02







தாழிகள், மூடப்பட்ட சட்டிகள்.
(பொம்பரிப்பு)
அலங்கார வேலைப்பாடுள்ள
தாழி. (பொம்பரிப்பு)
படம்:3.
தாழிகள், மூடப்பட்ட சட்டிகள்.
(பொம்பரிப்பு)
அலங்கார வேலைப்பாடுள்ள
தாழி. (பொம்பரிப்பு)
படம்:3.

படம் -03









படம் -04







மாந்தை


ஆனைக் கோட்டை


ஆனைக் கோட்டை


படம்-05




படம்-06









1. அருவா வடநாடு (தமிழ்நாட்டின் வடபகுதி)
2. மலாடு (தென் ஆர்க்காட்டின் ஒரு பகுதி)
3. அருவா நாடு (தமிழ்நாட்டின் வட எல்லையில் அமைந்த பகுதி)
4. புனல் நாடு (சோழநாடு)
5. பாண்டி நாடு (பாண்டி நாடு)
6. தென்பாண்டி நாடு (திருநெல்வேலி மாவட்டத்தின் தென் பகுதி)
7. வேணாடு (திருவனந்தபுரத்தின் தென்பகுதி)
8. குட்ட நாடு ( தற்கால கேரளமாநில,கொட்டயம் குயிலன் பகுதிகள்)
9. குட நாடு (வடகேரள பகுதி)
10. கட்க நாடு(தற்கால கோயம்புத்தூரின் ஒரு பகுதியை உள்ளடக்கியது)
11. சீநாடு (நீலகிரியையும், கோயம்புத்தூரின் ஒரு பகுதியையும் உள்ளடக்கியது)
12. புலிநாடு (கன்னியாகுமரி மாவட்டம்)

படம்-07

## அரச உருவாக்கத்திற்கு முந்திய காலச் சிற்றரசுகள்




படம்-08

* சிற்றரச வம்சங்களால் வெளியிடப்பட்ட கல்வெட்டுகள் காணப்படும் இடங்கள்





## உசாத்துணை


1. Indrapala, K. Early Tamil Settlements in Ceylon, Journal of the Royal Asiatic Society, Ceylon Branch (J.R.A.S. (C.B.) N.S. Vol. XIII, 1969, பக். 43-63.

2. Indrapala, K. Dravidian Settlements in Ceylon and the Beginnings of the Kingdom of Jaffna, 1966. Unpublished Ph.D. Thesis, University of London,(London) 1966.

3. பேராசிரியர் கா. இந்திரபாலா குறிக்கும் தமிழ் நூல்களாவன: வையாபாடல் (பதிப்பு) நடராசா க.செ. (கொழும்பு) 1980, யாழ்ப்பாண வைபவமாலை (பதிப்பு) சபாநாதன், குல. (கொழும்பு) 1953, கைலாய மாலை (பதிப்பு) ஜம்புலிங்கம்பிள்ளை, சா. வே. (சென்னை), 1939, மட்டக்களப்பு மான்மியம் (பதிப்பு) நடராசா எவ். எக்ஸ். சி. (கொழும்பு) 1962.

4. Coningham, R.A.E., Allchin, F.R., Batt C.M and Lucy.D "Passage to India? Anuradhapura and the Early use of the Brahmi Script" Published in the Cambridge Archaeological Journal, Vol. 6, No.1, April 1996, ப. 77.

5. Dipavamsa (Tr & ed) Law, B.C, The Ceylon Historical Journal, Vol.VII July and Oct. 1957 and Jan. and April 1958 Nos. 1-4 அதி .X-XI

6. Mahavamsa (Tr. & ed. ) Geiger, W. (Colombo), 1950. அதி. VIII I–X. மேற்படி அதி. VI, VII. Dipavamsa மு. கு. நூல் அதி. IX.

7. Paranavitana, S. (ed) History of Ceylon, Vol.I, Part I (Colombo)1959, பக் 82-94

8. Mahavamsa, மு.கு.நூல். அதி. VII 40-42

9. Ellawala, H. Social History of Early Ceylon (Colombo) 1969. அதி. VI.

10. Paranavitana, S. (ed) மு.கு. நூல் . 1959, பக். 82-94

11. Mahavamsa, மு.கு. நூல் அதி. VII வரி 42.

12. Gunawardana, R.A.L.H. The Kinsmen of the Buddha; Myth as a Political Charter in the Ancient and Early Medieval Kingdoms of Sri Lanka: The Sri Lanka Journal of the Humanities, Vol.2, No. I, June 1976, பக். 53-62.

13. Mahavamsa, மு.கு.நூல். அதி. XXV வரி 109 –111

14. Rutnam, James, T. The Tomb of Elara at Anuradhapura (Jaffna) 1981: இரத்தினம். ஜே. எல்லாளன் சமாதியும் வரலாற்று மோசடியும் - ( தமிழாக்கம் - கனகரட்னா ஏ.ஜே) மறுமலர்ச்சிக் கழக வெளியீடு, யாழ்ப்பாணம். 1981.

ஜெயவர்த்தனா, குமாரி. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இலங்கையில் நிலவிய வர்க்க, இன உறவுகளின் சில அம்சங்கள் - இலங்கையில் இனத்துவமும் சமூக மாற்றமும், சமூக விஞ்ஞானிகள் சங்க வெளியீடு. கொழும்பு. (தமிழ்ப்பதிப்பு, யாழ்ப்பாணம். 1985 பக். 141-180)

16. Godakumbura, G.C., History of Archaeology in Ceylon, J.R.A.S. (C.B.) N.S. Vol. XIII. 1969 பக். 1-38.

17. Rasanayagam, C., Ancient Jaffna, (Madras), 1926.

18. Gnanaprakasar, Swami, "Tamils turn Sinhalese ", Tamil Culture, Vol.I, No. 2. Feb. 1952. பக். 132-142

19. Gnanaprakasar, Swami, "Ceylon Originally a land of Dravidians" Tamil Culture, Vol.I, No. I, Feb. 1952. பக். 27-35.

20. Gnanaprakasar, Swami, "Dravidian Element in Sinhalese" J.R.A.S (C.B.). Vol.XXXIII, No. 89, Parts I,II,III and IV. 1937. பக். 233-253.





21. Mendis, G.C., "The Vijaya Legend" Jeyawickrama, M.A. (ed) Paranavitana Felicitation Volume, (Colombo) 1965, பக். 263-279.

22. Senaratne, S.P.F. Pre-Historic Archaeology of Ceylon (Colombo) 1969.

23. Begley, V. Excavations of Iron Age Burials at Pomparippu 1970, Ancient Ceylon, No. 4, 1981, ப. 53.

24. Deraniyagala, S.U. The citadel of Anuradhapura, 1969. Excavations in the Gedige Area. Ancient Ceylon, No. 2, 1972, பக். 48-162.

25. Begley, V. Proto- historical material from Sri Lanka (Ceylon) and Indian Contacts, Kennedy, K.A.R. and Possehl, E.L. (ed) Ecological Backgrounds of South Asian Pre-History, (New Orleans) 1973, பக் 191-196.

26. Begley, V. மு.கு.க. 1981., பக். 49-94.

27. Sitrampalam, S.K. The Megalithic Culture of Sri Lanka., Unpublished Ph.D. Thesis, University of Poona, (Poona), 1980.

28. Sitrampalam. S.K. Proto-Historic Sri Lanka – An Interdisciplinary Perspective. Paper presented at the 11th International Conference of Historians of Asia, Colombo. 1988. Later this was published in the Journal of Asian Studies, Vol.VIII, No. 1 Sept. 1994 பக். 1-18.

29. Ragupathy, P. Early Settlements in Jaffna, - An Archaeological Survey (Madras) 1987.

30. Deraniyagala, S.U. and Abeyratne, M. "Radio Carbon Chronology of Iron Age and Early Historic Anuradhapura, Sri

lanka; Revised Age Estimate, (Abstract) Paper presented at the 14th International Conference of the European Association of South Asian Archaeologists, Rome 7-11. July 1997.

31. Allchin, F.R. and Coningham Robin. Anuradhapura Citadel Archaeological Project: Preliminary report of the Third Season of Sri Lanka British Excavations at Salgaha Watta, July – Sept. 1991, South-Asian Studies, 8, 1992. பக். 155-167.

32. Carswell, J. and Prickett, M. 1984: Mantai 1980: A Preliminary Investigation, Ancient Ceylon 5: பக் 3-80.

33. Karunaratne Piyantha, "A Brief Report of the Excavation at Ibbankatuva, a Proto and Early Historic Settlement site, (University of Peradeniya) no-date".

34. Weisshaar Hans Joachim "Ancient Mahagama – Archaeological Research in South Ceylon" Domroes manfered and Roth Helmut (ed) Sri Lanka Past and Present. Archaeology, Geography and Economics (Wurzburg) Germany. 1998. பக். 38-50.

35. Bopearachchi. Osmand, "Archaeological evidence on changing patterns of International trade relations of Ancient Sri Lanka" Bopearachchi Osmand and Weerakkody, D.P.M. (ed) Origin, Evolution and Circulation of foreign coins in the Indian Ocean, (New Delhi), 1998.

36. Deraniyagala, S.U. மு.கு.க. 1972.

37. Deraniyagala, S.U. Pre and Proto –historic settlements in Sri Lanka, Economic Review, Vol. 23, Nos 7/8, Oct/Nov. 1997.

38. Begley, V. மு.கு.க. 1973, பக். 191-196.

39. Begley, V. மு.கு.க. 1981.





40. Deraniyagala, S.U. and Abeyratne, M, மு.கு.க 1997.

41. Coningham Robin and Allchin, F.R., மு.கு.க 1992. பக். 155-167.

42. Carswell. J and Prickett.M. 1984 மு.கு.க.

43. Shanmuganathan, S., Excavations at Thirukketiswaram, Vaithianathan, K (ed) Thirukketiswaram Papers (Colombo), 1960.

44. Shinde Vasant, Mantai: An important settlement in North – West Sri Lanka, East and West. Vol. 37. Nos 1&2, 1981, பக். 327-336, Kiribamune Sirima; The role of the Port city of Mahatittha (Mantota) in the Trade networks of Indian Ocean, The Sri Lanka Journal of the Humanities, Golden Jubilee Commemoration Double number, University of Peradeniya, Vol. XVII- XVIII. Nos. 1&2 1991-92, Published in 1994, பக். 171-192.

45. Sitrampalam, S.K. Ancient Jaffna; An Archaeological Perspective, Journal of South Asian Studies, Vol. 3 Nos 1& 2, 1984, பக் 1-16.

46. Weisshaar Hans Joachim மு.கு.க. 1998 பக். 38-50; Roth Helmut "Excavations at the Port of Godavaya, Hambantota district, Sri Lanka, Domroes Manfred and Roth Helmut (ed) Sri Lanka Past and Present, Archaeology, Geography and Economics"(Wurzburg) Germany, 1998, பக். 1-37.

47. Bopearachchi, Osmand. மு.கு.க. 1998

48. Bopearachchi. Osmand, "Archaeological evidence on maritime and Inland Trade of Ancient Sri Lanka", Multidisciplinary International Conference on the occasion of the 50th

Anniversary of the Independence of Sri Lanka. Feb. 23-28. 1998.

49. Solheim. W.G. and Deraniyagala, S.U., Archaeological Survey to investigate South East Asian Pre- historic presence in Ceylon, Ancient Ceylon, Occasional Paper, No. I. 1972.

50. Sitrampalam. S.K. மு.கு.க. 1990. Seneviratne, Sudharshan, "The Archaeology of the Megalithic Black and Red ware complex in Sri Lanka" Ancient Ceylon, No. 5, 1984. பக். 237-307.

51. Goonetilleke, Susantha, Sinhalisation: Migration or Cultural Colonisation, Lanka Guardian, Vol.3, No.I, May I, May 15, 1980, பக். 22-29; 18-19.

52. Seneviratne, Sudharshan. Peripheral Regions and Marginal Communities Towards an Alternative Explanation of Early Iron Age Material and Social Formations in Sri Lanka, Champakalakshmi, R and Gopal, S.(ed) Tradition, Dissent and Ideology, Essays in honour of Romila Thapar, (Oxford University Press), 1996, பக். 264-310.

53. Luckas John R and Kennedy Kenneth A.R., "Biological Anthropology of Human remains from Pomparippu", Ancient Ceylon, No.4, 1981, பக். 97-142

54. Chanmugam, P.K. and Jayawardena, F.L.W., Skeletal remains from Tirukketiswaram", Ceylon Journal of Science, Section (G), 5(2), 1954, பக். 65-68

55. Sitrampalam, S.K. மு.கு.க 1984.

56. Ragupathy. P., மு.கு. நூல் 1987, பக். 200-203.





57. Kirk. R.I., The legends of Prince Vijaya – A study of Sinhalese Origins, American Journal of Physical Anthropology, Vol. 45, No.1 1976, பக். 91-99.

58. Wijesundara, C. de S., "Presidential Address given at the 14th Annual Conference of the Sri Lanka Paediatric Association on 31st of Sept. 1977. "

59. Goonetilleke Susantha, மு.கு.க. 1980, Karve. I. Kinship Organisation in India (Bombay), 1968, Bryce Rayan, Caste in Modern Ceylon – The Sinhalese system in Transition (New Jersey), 1953.

60. Karunatilaka. P.V.B., Early Sri Lankan Society – Some reflections on Caste Social groups and ranking, The Sri Lanka Journal of the Humanities, Vol. IX, Nos 1 & 2 1983, (Published in 1986), பக். 108-143.

61. Bechert Heinz (ed) Culture of Ceylon in Medieval Times, (Wiesbaden), 1960.

62. Bechert. H, Mother right and succession to the throne in Malabar and Ceylon, The Ceylon Journal of Historical and Social Studies, Vol. VI, No.I, 1963, பக். 25-39.

63. Bechert. H., The cult of Skanda Kumara in the Religious History of South India and Ceylon' Proceedings of the Third International Conference Seminar of Tamil Studies, Paris (Pondichery), 1973, பக். 199-201.

64. தொல்காப்பியம், பொருளதிகாரம், பதிப்பு. தாமோதரம்பிள்ளை, சி.வை, சென்னை. 1885.

65. Buhler. J.C., Indian Palaeography. (Indian – Antiguary, Vol. XXXIII) 1904.

66. Nagasamy.R, The Origin and Evolution of the Tamil, Vatteluttu and Grantha Scripts, Proceedings of the Second International Conference Seminar of Tamil Studies, (Madras), 1968, பக். 410-415; Mahadevan. I, Corpus of the Tamil Brahmi Inscriptions (Madras), 1966.

67. Sitrampalam. S.K., "The Brahmi Inscriptions as a source for the study of Puranic Hinduism in Ancient Sri Lanka, Ancient Ceylon, Vol. I, No. 7, 1990 பக். 285-309, Paper presented at the International Seminar towards the Second Century of Archaeology in Sri Lanka, on the 7th – 13th July 1990, Organized by the Dept. of Archaeology in Sri Lanka. (Colombo), 1990.

68. Fernando. P.E., The Beginnings of the Sinhala Script, Education in Ceylon – A Centenary Volume I, Colombo 1969, பக். 19-24.

69. Karunaratne, Saddhamangala, 'Epigraphia Zeylanica, Vol. VII, Being lithic and other inscriptions of Ceylon ' (Colombo), 1984.

70. மேற்படி , பக். 10

71. மேற்படி , பக். 71-91

72. Wimalasena. N. A. A New Chronology for the letters appearing on the Pottery found near the place in the citadel of Anuradhapura, Paper submitted (in Sinhala) for the section – E of the Sri Lanka Historical Association on the occasion of the Multi – Disciplinary International Conference on the occasion of 50th Anniversary of Independence of Sri Lanka (Feb. 23 – 35, 1998) (பக். 27. அநுராதபுர அகழ்வின் போது கிடைத்த மட்பாண்ட ஓடுகளிலுள்ள திராவிட 'ழ' தவறுதலாக 'ர' வாக வாசிக்கப்பட்டுள்ளமையை மேற்கூறிய ஆசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார்.)





73. Sitrampalam S.K, and Pushparatnam. P, The Potsherd Inscriptions from Poonakary – A Historical Perspective, Gopalakrishna Iyer .P, Sivachandran. R, and Pushparatnam. P (ed) – Professor Sivasamy – Abhijnamala. (Jaffna), 1995. பக்.

74. Bopearachchi Osmand and Wickremesinghe, Rajah, 'Rohuna – An Ancient Civilization Re-visited – Numismatic and Archaeological Evidence on Inland and Maritime Trade (Nugegoda – Colombo) 1999, பக். 56-59.

75. Kanagaratnam. D.J. Tamils and Cultural Pluralism in Ancient Sri Lanka (Colombo), 1978.

76. Veluppillai. A, Tamil Influence in Ancient Sri Lanka with special reference to Early Brahmi Inscriptions, Journal of Tamil Studies, Vol. 16, Dec, 1979, பக் 63 - 77, and Vol. 17, June, 1980, பக். 6-19.

77. Sitrampalam. S.K., மு.கு.க 1980; சிற்றம்பலம் .சி.க. 'பிராமிக் கல்வெட்டுகளும் தமிழும்', சிந்தனை, தொகுதி, 2 இதழ் 1, பங்குனி, 1983, பக். 57-86.

78. Sitrampalam. S.K., The title Parumaka found in Sri Lankan Brahmi Inscriptions A Reappraisal, Sri Lanka Journal of South Asian Studies, No I (New series), 1986/87 பக். 13-25.

79. Sitrampalam S.K., The form Velu (Vel) of Sri Lankan Brahmi Inscriptions A Reappraisal, Paper presented at the XVII Annual Congress of Epigraphical society of India, Tamil University, Thanjavur in Feb, 2-4, 1991. This article was later published in The Sri Lanka Journal of South Asian Studies, No. 3. New series 1991/92 பக். 60-71.

80. Champakalakshmi. R. 1975 –6 Archaeology and Tamil literary Tradition, Puratattva, Bulletin of the Indian Archaeological Society. No. 5 பக். 110-122.

81. Paranavitana. S., Inscriptions of Ceylon – Vol. I Early Brahmi Inscriptions (Colombo), 1970 பக். IXVI

82. Gunawardana, R.A.L.H, Prelude to the state; An Early phase in the Evolution of Political Institutions in Ancient Sri Lanka ' The Sri Lanka Journal of the Humanities, Vol. VIII, Nos. 1 & 2 , 1982. பக் 7.

83. Sitrampalam.S.K, The Title Aya of Sri Lankan Brahmi Inscriptions – A Reappraisal; Summary of the paper submitted to the Archaeological Congress (Colombo), 1988; Sitrampalam,S.K மு.கு.க 1980.

84. Seneviratne, Sudharshan, The Baratas A case of community-integration in Early Historic Sri Lanka', Amerasinghe A.R.B. and Sumanasekara Banda (ed), James Thevathasan Rutnam Festschrift 1985, Sri Lanka UNESCO National Commission (Ratmalana), 1985, பக். 49-56.

85. Ellawala, H. மு.கு. நூல். பக்.41.

86. Sitrampalam S.K. Tamil House Holders Terrace Inscription at Anuradhapura: A Reappraisal, Manivasagar A.V. (ed) Reading in Social Sciences- Essays in Honour of Dr, S.K.S. Nathan, University of Jaffna, Sri Lanka, (Colombo), 1998. பக். 1-9.

87. Paranavitana, மு.கு.நூல் 1970 கல். இல. 270.

88. Coningham R.A.E., Allchin.F.R., Batt, C.M. and Lucy D. மு.கு.க. 1996, பக் 70-96.

89. Bopearachchi Osmand மு.கு.க. 1998, பக்.150.

90. Paranavitana, S. மு.கு.நூல். 1970, கல்.இல: 58,159.





91. Nicholas, C.W. Historical Topography of Ancient and Medieval Ceylon, Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society, N.S., Vol. VI, 1959 பக்.9.

92. Mahavamsa. மு.கு.நூல். அதி.10. வரி. 1

93. மேற்படி.

94. Paranavitana. S. மு.கு.நூல். 1970 கல். இல: 1051-52, தோணிகலக்கல்வெட்டில் இப்பதம் தவிறிகியநகர என இடம் பெற்றுள்ளது.

95. Nicholas, C.W., மு.கு.க, 1959, பக். 7-8.

96. Mahavamsa, மு.கு..நூல் அதி XXXIII, வரி 51-61

97. Paranavitana. S மு.கு.நூல் 1970, கல்.இல. 610, 684, 968, 1097.

98. மேற்படி. கல். இல. 279, 712.

99. Paranavitana. S. மு.கு. நூல். 1970. கல் இல: 44, 71, 98, 125, 198, 203, 266, 297, 299, 343, 358, 372, 374, 376, 400-2, 536, 538, 578, 582, 586, 666, 670, 680, 684, 707, 752, 807, 828, 856, 955, 968, 995, 998, 1020, 1088, 1112, 1113, 1128, 1195, 1210, 1227.

100. Paranavitana. S, மு.கு. நூல். 1970, கல் இல: 17, 24, 34, 46, 47, 104, 109, 168, 173, 179, 238, 248, 279, 296, 305, 338-341, 343, 377, 378, 471, 488, 538, 550, 617. 706, 892, 896, 958, 960, Rangaswamy Dorai, The Surnames of the Sangam Age – Literary and Tribal (Madras) 1968 பக். 243-245.

101. Paranavitana. S மு.கு.நூல் 1970. கல். இல: 83, 289, 487, 643, 744, 1142, 1161, 1202.

102. Tamil Lexican, Vol.V part I , 3090.

103. Seneviratne, Sudharshan, மு.கு.க. 1996.

104. Coningham. R.A.E., Allchin F.R, Batt.C.M and Lucy .D. மு.கு.க.ப. 94.

105. மேற்படி கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

106. Deraniyagala. S.U and Abeyratne. M. , மு.கு.க., 1997, ப 14.

107. Geiger. W., The Grammar of the Sinhalese language (Colombo), 1938.

108. Gunawardhane. W.F., The Origin of the Sinhalese Lang...ge (Colombo) 1918.

109. Coningham.R.A.E. Allchin. F.R., Batt., C.M. and Lucy.D. மு.கு.க., 1966, ப. 94.

110. Rulen Merrit, A guide to the languages of the world (Standford University), 1975.

111. தொல்காப்பியம், சொல்லதிகாரமூலமும் சேனாவரையருரையும். பதிப்பாசிரியர். கணேசையர்.சி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்,1938.

112. Meenakshisundaram.T.P. A History of Tamil (Poona), 1965.

113. அகநானூறு (பதிப்பு) காசி விசுவநாதன் செட்டியார்.மு (திருநெல்வேலி), 1961. செய். 88, 231, 307, குறுந்தொகை (பதிப்பு), சோமசுந்தரனார். பொ.வெ. (திருநெல்வேலி) 1962. செய். 189, 343, 360, நற்றிணை (பதிப்பு) சோமசுந்தரனார். பொ. வெ. , (திருநெல்வேலி), 1962, செ. 366.

114. Paranavitana. S. மு.கு.நூல், 1959, ப. 43.





115. Burrow. T 'The loss of initial C/S in South Dravidian' Collected papers on Dravidian Linguistics (Annamali Nagar), 1968, பக். 150-157.

116. Subrahmanya Ayyar.K.V, The Early monuments of the Pandya Country and their Inscriptions, Proceedings of the Third All- India Oriental Conference, (Madras), 1924.

117. Mahadevan, மு.கு.க., 1966, கல். இல. 9

118. மேற்படி கல். இல. 27

119. Sitrampalam.S.K, மு.கு.க., 1998.

120. Sitrampalam .S.K, and Pushparatnam. P மு.கு.க. 1995.

121. Mahavamsa. மு.கு.நூல் அதி. XXXV. வரி 15, 45.

122. Rajavaliya (ed)., Gunasekara. B., (Colombo), 1953. பக். 33.

123. Veluppillai. A., Epigraphical Evidences for Tamil Studies (Madras), 1980. ப.59

124. Epigraphia Zeylanica, Vol. I, 1912-17; Vol. III, 1933. Vol. IV. 1943.

125. Paranavitana. S, Sigiri Graffiti, Being Sinhalese verse of the Eighth, Ninth and Tenth centuries (London), 1956, Vol. II. ப. 179.

126. Paranavitana. S, மு.கு. நூல், 1959. ப. 90.

127. மேற்படி.

128. Epigraphia Indica, Vol. 20. ப. 23

129. Dipavamsa. மு.கு. நூல், அதி. IX வரி. I

130. Mahavamsa, மு.கு. நூல், அதி. VII வரி. 42. அதி XXXIII வரி. 43.

131. மேற்படிநூல். அதி. VII வரி. 42

132. மேற்படிநூல். அதி. VII வரி.40 –42

133. Sitrampalam. S.K., 'The Urn burial site of Pomparippu of Sri Lanka- A Study, Ancient Ceylon, Vol. 2, No. 7 1990, பக். 263-297. Paper presented at the International Seminar – Towards the second century of Archaeology in Sri Lanka on 7th –13th July 1990, Organised by the Dept. of Archaeology Colombo. 1990.

134. Mahavamsa, மு.கு நூல், அதி. XXI வரி. 10-11

135. மேற்படி. அதி. XXI. வரி. 13-14

136. மேற்படி. அதி. XXV. வரி. 75

137. மேற்படி. அதி. XXXIII. வரி. 55-61

138. மேற்படி. அதி. XXXIV. வரி. 18-27

139. மேற்படி. அதி. XIX. வரி. 54-55

140. Nilakanta Sastri K.A. (ed) A Comprehensive History of India, Vol. 2. The Mauryas and the Satavahanas (Madras), 1957, அதி. XVIII. ப. 575.

141. Paranavitana. S, மு.கு.நூல், 1970, பக் 42-44.

142. Paranavitana. S, மு.கு.நூல், 1970, கல்.இல. 406.

143. Bopearachchi Osmand. Ancient Coins in Sri Lanka, Economic Review. Vol. 23, Nos 7/8, Oct/Nov. 1997. ப. 22





144. Paranavitana. S, மு.கு..நூல், 1970, கல். இல. 94, 356, 357, 480.

145. Sitrampalam. S.K, Tamils in Early Sri Lanka- A Historical Perspective, Presidential Address, Jaffna Science Association, Session D- Social Science, Annual Session- 1993. 23.04.1993; Sitrampalam, S.K. The Form Dameda of the Sri Lankan Brahmi Inscriptions – A Historical Assesment, Sri Lanka Journal of South Asian Studies, No.6 New Series (1996/1999) பக். 48-72

சிற்றம்பலம் .சி.க. தமிழர் பற்றிக் கூறும் ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுகள் பற்றிய சில கருத்துக்கள். தமிழோசை, தமிழ் மன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (திருநெல்வேலி), 1988-89, பக்.29-36.

146. Gunawardana. R.A.L.H. மு.கு.க. 1982.



அராலியில் 01.10.1941 இல் பிறந்த பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் தமது ஆரம்பக் கல்வியை அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் பயின்றார். பின்பு 1961 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றார். 1965இல் இப்பல்கலைக்கழகத்தில் பி.ஏ. பட்டத்தினைப் பெற்றார். பின்னர் 1975இல் அப்போதைய யாழ்ப்பாண வளாகத்தில் வரலாற்றுத் துறையில் துணை விரிவுரையாளராக இணைந்தார். 1980இல் பூனாப் பல்கலைக்கழகம் இவர் சமர்ப்பித்த *'ஈழத்துப் பெருங்கற்காலப் பண்பாடு'* என்ற ஆராய்ச்சிக் கட்டுரைக்கு கலாநிதிப் பட்டமளித்தது. 1994 இல் விசேட தகைமை அடிப்படையில் வரலாற்றுத்துறையின் இணைப் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்ற இவர் 1996 இல் இத்துறையின் பேராசிரியராகவும் நியமனம் பெற்று ஒன்றரைத் தசாப்தங்களுக்கு மேலாக இத்துறையின் தலைவராகவும் கடமையாற்றி வருகின்றார். அத்துடன் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக வரலாறு, தொல்லியல் ஆகிய கற்கை நெறிகளை ஈழத்துப் பல்கலைக்கழகங்களான கொழும்பு, பேராதனை, வித்தியாலங்கார, யாழ்ப்பாணம் ஆகியவற்றிற் போதித்த அனுபவமுடைய இவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னோடிகளில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழிலும், ஆங்கிலத்திலும் புலமைமிக்க இவர் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை உள்ளூர், சர்வதேசச் சஞ்சிகைகளில் வெளியிட்டுள்ளதோடு, பல சர்வதேச மகா நாடுகட்குத் தலைமை தாங்கிக் கட்டுரைகளும் வாசித்துள்ளார். இவரது நூல்கள் பல யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினால் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பண்டைய தமிழகம், யாழ்ப்பாணம்- தொன்மை வரலாறு, இந்துசமய வரலாறு பாகம் -1. ஆகியவை இவரது ஆக்கங்கள் ஆகும். யாழ்ப்பாண இராச்சியம் இவர் பதிப்பித்த நூலாகும். தற்போது ஈழத்தமிழர் வரலாறு பற்றிய ஆய்வை மேற்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆய்வுகள் வளம்பெறவும் பலவாறு உழைத்தவர். கலைப்பீடச் சஞ்சிகையாகிய *'சிந்தனை'* நிதி நெருக்கடி காரணமாகப் பல ஆண்டுகளாகச் செயலிழந்த நேரத்தில் அதன் ஆசிரியப் பொறுப்பைத் துணிவுடன் ஏற்றுப் பல்வேறு பொது ஸ்தாபனங்கள் அளித்த நிதி உதவியுடன் இதனை இயங்கச் செய்து இதன் எட்டு இதழ்களையும் தொடர்ந்து வெளிக் கொணர்ந்த பெருமை இவருக்குண்டு. யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் ஆயுட் கால உறுப்பினராகத் திகழும் இவர், கலைப்பீட ஆங்கிலச் சஞ்சிகையாகிய The Sri Lanka Journal of South Asian Studies இன் ஆசிரியராக 2000 ஆம் ஆண்டிலிருந்து கடமையாற்றுகின்றார்.

அன்றைய யாழ்ப்பாண வளாகத்தில் முதல்முதலாக ஆசிரிய சங்கம் அமைக்கப்பட்ட போது அதன் அமைப்பாளராகக் கடமை ஆற்றிப் பின்னர் நெருக்கடியான காலகட்டங்களில் இதன் காரியதரிசி, தலைவர் ஆகிய பதவிகளைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் பொறுப்பேற்றுத் திறம்படக் கருமம் ஆற்றியவர் இவர் ஆவார்.

பாலசிங்கம் மாணவர் விடுதியின் மேற்பார்வையாளராகவும், இந்து மன்றப் பெரும் பொருளாளராகவும் பல ஆண்டுகள் செயலாற்றியவர். சமூகப் பணிகளில் ஈடுபாடு கொண்ட இவர் பரமேஸ்வரன் ஆலயப் புனருத்தாரணப் பணியின் மூலகர்த்தாவாக விளங்கி இன்று பரமேஸ்வராக் கல்லூரி இயக்குனர்சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவை ஆகியவற்றின் உறுப்பினராகவும் திகழ்கின்றார்.

*பேராசிரியர். செ. பாலச்சந்திரன்,*
*கலைப்பீடாதிபதி,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

Computer Printing & Publisbed by: Registrar's Office, University of Jaffna
Sri Lanka